70

# சிங்காரத் தோட்டம்



J1
N47
101004

ணபதி ஐயர்

1129

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 NOV 1949
MADRAS

# சிங்காரத் தோட்டம்

ஆசிரியர்
ச. கு. கணபதி ஐயர், பி. ஓ. எல்.

கலைமகள் காரியாலயம்
மயிலாப்பூர் :: சென்னை.

உரிமை பதிவு] நவம்பர் 1949 [விலை ரு. 2/-

முதற் பதிப்பு 1500 பிரதிகள்.
உரிமை பதிவு நவம்பர் 1949.

விலை ரூ. 2/-

ஜா
N49

101004

NATIONAL ART PRESS
91, Mount Road
MADRAS - 18.

MADRAS

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | முகவுரை | V |
| 1. | நிலப்பரப்பின் காட்சிகள் | 1 |
| 2. | அமைப்பு ஒரு கலை | 5 |
| 3. | கலையின் வரலாறு | 13 |
| 4. | தமிழரும் உபவனக் கலையும் | 19 |
| 5. | வீட்டுத் தோட்டம் | 28 |
| 6. | இரண்டு பிரச்னைகள் | 34 |
| 7. | புல்வெளி | 41 |
| 8. | மரங்கள் | 49 |
| 9. | பாதைகள் | 56 |
| 10. | வரம்புகள் | 64 |
| 11. | மலர்ப் பாத்திகள் | 67 |
| 12. | சட்டிச் செடிகள் | 74 |
| 13. | ஏறு கொடிகள் | 85 |
| 14. | பூங் குளம் | 91 |
| 15. | பாறைகளின் புன்னகை | 97 |
| 16. | சில உபவனச் செடிகள் | 108 |
| 17. | இயற்கையின் வழிபாடு | 120 |

# உரிமையுரை

கலைநலங் கொழிக்கும் கலாக்ஷேத் திரத்தின்
　　கவினுறு தலைவிநற் கலைகள்
நிலைபெற உலகம் யாண்டுமே லோங்கி
　　நிறைதரு சாந்தியும் இன்பும்
குலவுறச் செய்யும் முயற்சியில் தளராக்
　　குணப்பெருங் குன்றிசை யாடல்
நலமுறு வடசொல் தென்றமிழ் இவற்றை
　　நயமுறக் காத்துயர் நல்லாள்.

அன்பகங் கனியத் தேன்மொழி பிலிற்றும்
　　அருங்கொடி உலகெலாம் வியக்க
முன்புறு பெரியோர் நெறிமுறை விளக்க
　　முற்படும் விற்பனச் செல்வி
என்சிறு மதியாற் செய்யுமா ராய்ச்சிக்
　　கேற்றநல் லுதவியோ டாசி
நன்கருள் வண்மை ருக்மிணி தேவி
　　நயக்கஈ தர்ப்பணம் செய்தேன்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 NOV 1949
MADRAS

# சிங்காரத் தோட்டம்

## 1. நிலப்பரப்பின் காட்சிகள்

நீங்கள் புகைவண்டிப் பிரயாணம் செய்யும் போது பாதையின் இருபுறங்களிலும் பல இயற்கைக் காட்சிகளைக் காணக்கூடும். பசுமை உமிழும் வயல்களின் இடையே மரங்களின் செறிவு ஒருபால்; இங்கு மங்குமாக இரண்டொரு மரங்கள் உள்ள பொட்டல் நிலம் மற்றொருபால்; மலைகள், குன்றுகள், பெரும் பாறைகள், இடையிடையே ஆறுகள் பிறிதொருபால். இவை எல்லாம் கண்களுக்கு விழாவாகக் கூடிய காட்சிகள்.

நீலகிரி முதலிய மலைப்பிரதேசங்களில் பிரயாணம் செய்பவர் காணும் இயற்கைக் காட்சி சிறப்புடையது: ஒருபுறம் தாழ்ந்த பள்ளத்தாக்கு; அதில் பல மரங்களின் சூழ்; இடையிடையே உருட்சியமைந்த பாறைகள்; இவற்றினூடே சலசல

வென்று ஓடும் மலையருவிகளும் ஓடைகளும். பாலை யின் மற்றொரு புறம் செங்குத்தான மலை. இத்தனை யும் சேர்ந்து வழங்கும் காட்சி நேரிற் கண்டு மகிழத்தக்கதே ஒழிய, சொற் சித்திரத்தால் முற் றும் விளக்கக் கூடியதே அன்று!

ஓர் ஆறு வெள்ளம் புரண்டோடும் காட்சியைப் பலர் கண்டு இன்புற்றிருக்கலாம். ஆற்றினூடே அமைந்த பாலமும், அதனை அடுத்துள்ள சூழ்வும் அழகான தோற்றமாகும். ஆறு வற்றியதாக இருப்பினும் அதன் வெள்ளிய மணலும், பச்சை மரங்களோடு கூடிய அதன் இருகரைகளும், இடை யிடையே மேடு பள்ளங்களும் சேர்ந்த தொகுதி மனவெழுச்சியைத் தரக்கூடியவை.

ஓர் ஏரி; அதனுள் நெருக்கமாகக் கருவேல மரங்கள். கரையிலிருந்து நோக்கும் போது அந்த ஏரியும், அதனை அடுத்துள்ள வயற்பரப்பும், மதகு களும் கால்வாய்களும் சேர்ந்து காணப்படும் தோற் றம் பிறிதொரு தனிச் சிறப்புடையது.

பெரிய மணற்பரப்பும், அதனை ஒட்டிக் கண் ணுக் கெட்டிய தூரம் பரவியுள்ள நீல நிறக்கடலும் சேர்ந்து வழங்கும் காட்சி மற்றொரு வகையது

மலைமேலிருந்து நோக்குவோருக்கு, தாழ்நிலப் பரப்பில் காணப்படும் ஊர்களும், அவற்றைச் சூழ்ந் துள்ள வயல்களும் சோலைகளும், இடையிடையே தோன்றும் ஏரி முதலிய நீர்ப்பரப்புக்களும், பாம் பைப்போல் வளைந்து வளைந்து செல்லும் பாதை களும், அவற்றின் இருபுறமும் உள்ள மரங்களும்

சேர்ந்து தனிப்பட்ட சிறந்த ஒரு காட்சியை அளிக்கின்றன!

மேலே கூறப்பட்ட எல்லாம் நிலப் பரப்பின் அழகு (The Beauty of the Landscape) என்பதனுள் அடங்கும். இந்த அழகு இயற்கையோடு ஒன்றியது.

நிலப்பரப்பின் அழகுக்கு ஒரு தனிப்பொருள் மட்டும் காரணம் அன்று பலவற்றின் தொகுதியே யாகும். ஓர் உத்தேசப் பொருளை அடிப்படையாகக் (Back-Ground) கொண்டு இயற்கை இவ்விதமான பொலிவை அளிக்கின்றதென்று கலா ரசிகர்கள் கூறுவர்.

நிலப்பரப் பழகின் மாதிரி: நிலப் பரப்பின் இயற்கை யழகைப் போன்ற ஒன்றை மனிதன் தன் கலைஉள்ளத் திறமையினால் அமைத்துக் கொள்ளும் வித்தையைக் கண்டறிந்திருக்கிறான். தோட்டக் கலையில் கைதேர்ந்த ஒருவர் ஒரு கட்டடத்தையோ, வேறு எதனையோ மையப் பொருளாக (அடிப்படைப் பொருளாக) வைத்துக் கொண்டு செடிகொடிகளையும், பெரிய மரங்களையும், புல்வெளியையும், தாமரைக் குளங்களையும் சிருஷ்டித்து விடுகிறார். இந்தப் படைப்பில் செய் குன்றுகளும், நீர் ஊற்றுக்களும், நடைப் பாதைகளும், கொடிப்பந்தல் முதலிய பிறவும் அமைகின்றன. இந்த அழகினையே ஓவியக்காரர் ஒருவர் தூரிகையினாலும் நிறக்கூட்டங்களினாலும் கவின்தரும் படமாகச் சித்திரிக்கிறார். மற்றும்

அதனையே ஒரு கவிஞர் அலங்கார அமைப்பு, சொல்லமைப்பு முதலிய வற்றால் அழகிய சொற் சித்திரம் ஆக்கிவிடுகிறார். இவை மூன்றும் அமைப்பிலும் உருவிலும் வேறு வேறு; ஆனால் இம்மூன்றும் பயக்கும் ஆனந்தம் ஒன்றே. இவற்றுள் இங்கே எடுத்துக் கொண்டது தோட்டக்கலையின் தொடர்பாக உள்ள சிருஷ்டியே. இது சிங்காரத் தோட்டக்கலை அல்லது உபவனக்கலை எனப்படும். இவை இரண்டும் பொருளில் ஒன்றே.

# 2. அமைப்பு ஒரு கலை

விவசாயம் விரிந்த பரப்பையுடையது. அது நான்கு பெரும் பிரிவுகளோடு கூடியது. தானியங்கள், கரும்பு, பருத்தி, புகையிலை போன்றவற்றை உண்டாக்கும் பிரிவு நம்மால் பயிர்த்தொழில் (Agriculture) எனப்படும். காய்கறிகள், பழங்கள், மலர்கள், சிங்காரத்தோட்டம் இவைகளைப் பற்றிய தொழில் தோட்டக்கலை (Horticulture) எனப்படும். காடுவளர்ப்பு (Forestry) என்பது மூன்றும் பிரிவு. பிராணி வளர்ப்பு (Animal Husbandry) என்பது நான்காம் பிரிவு. ஆடுமாடுகள் கோழிகள் முதலியவைகளைப் பற்றிய வளர்ப்பு இது.

இவற்றுள் தோட்டக்கலைக்கு விஞ்ஞான அறிவோடு கலையறிவும் அவசியமாகும். மரம் செடிகளை எப்படி எல்லாம் அமைத்தால் அழகு புலப்படும்? எப்படி வளர்த்தால் கண்ணைக்கவரும் மலர்ச்செடிகள் விருத்தியாகும்? எந்த முறைகளால் சுவையுள்ள காய்கறிகளையும் பழங்களையும் சிருஷ்டிக்கலாம்? இரண்டுஜாதி மரங்களை ஜோடி சேர்த்துப் புதிய சிருஷ்டியை உண்டு பண்ணுவது எப்படி? இவை எல்லாம் கலையறிவைப் பொறுத்தவைகள். இக் கலையறிவின் துணையினால் சோபிக்கின்றதைக் கலை என்றோம்.

அறிவுடையோர் தோட்டக் கலையையும் நான்கு பிரிவுகளாக வகுத்திருக்கிறார்கள். அவை

1 காய்கறிக்கலை 2 பழக்கலை

3 மலர்க்கலை 4 சிங்காரத் தோட்டக்கலை

எனப்படும். இந்த நான்கிலும் அதிக சிரமமானதும் கலையறிவை மிகுதியாக வேண்டி நிற்பதும், காண்போரின் கண்ணையும் மனத்தையும் தன்பால் வசீகரிப்பதும் சிங்காரத் தோட்டக்கலையே

**சிங்காரத் தோட்டத்தின் கலை அம்சங்கள்:** மனத்தை ரமிக்கச் செய்யும் எந்தத் தொழிலும் கலையாகும். வீட்டை அலங்கரித்தல் முதல் நாட்டியம், இசை, ஓவியம், சிற்பம், மாலை கட்டுதல் முதலிய எல்லாம் கலைகளே. சிங்காரத் தோட்டம் சில இடங்களை அழகு படுத்தத் தோன்றியது. அந்த இடம் வீடு, பள்ளிக்கூடம், வைத்தியசாலை, புகை வண்டி நிலையம், பாதைகளின் சந்தி முதலிய வற்றுள் ஒன்ருக இருக்கலாம் புல்தரை, மலர்ச் செடிகள், குரோட்டன்கள் முதலிய வற்றை வைக்க வேண்டிய இடத்தில் அமைத்தால்தான் அழகு தோன்றும். பல நிறமலர்ச் செடிகளை நடவேண்டிய போது, 'எந்த இந்த நிறங்கள் நட்பு நிறங்களாகத் திகழும்? எந்த எந்த நிறங்கள் பகை நிறங்களாகும்' என்பதை ஒருவர் அறிய வேண்டும். பாதை எப்படி அமைய வேண்டும்? அதன் ஓரங்களில் வைக்கக் கூடிய செடிவகைகளை எந்த இணைப்பில் நடுவது? சட்டிச் செடிகளை எங்கெங்கே எந்த விதங்களில் வைக்க வேண்டும்? தாழ்வாரத் தோட்டம் (Verandah

garden) கொடிப் பந்தல், பாறைத் தோட்டம் (Rockery) தாமரைக் குளம் முதலியவைகள் எவ் விதம் அமைய வேண்டுமென்று நன்கு தெரிந்து கொள்ளவேண்டும். இவற்றுக்கெல்லாம் கலையறிவு அவசியமாகிறது.

இக்கலையின் இன்றியமையாமை: உடலுழைப் பாலும் மூளை உழைப்பாலும் அலுத்துப்போய் வந் தவர்களுக்கு உபவனம் என்னும் இச் சிங்காரத் தோட்டம் கண்ணுக்கு இனிய காட்சியை வழங்கு கிறது. அதன் மணமும் குளிர்ச்சியும் செடிகளூடே படிந்து வரும் தென்றலும் உற்சாகத்தைக் கொடுக்கின்றன. இனிய பறவைகளின் கீதம் செவி விருந்தாகின்றது நல்ல பொழுது போக்குக்கும் துக்கத்தை மறப்பதற்கும் ஏற்ற இடம் உபவனமே. தனிமையை நாடி அமைதியாகத் தியானம் செய் வோருக்கு இது ஏற்ற இடம். ஒரு கட்டடத்தைச் சார்ந்துள்ள தோட்டம் அக்கட்டடத்தின் அழகை அதிகப்படுத்தி எடுத்துக் காட்டுகிறது. தாவரங் களின் இயல்பு, இயற்கையின் புன்னகை முதலிய வற்றை ஆராய்வோருக்குச் சிங்காரத் தோட்டம் ஒரு சாதனம். இவ்விதமாக இக்கலையினால் ஏற்படும் நன்மைகள் பல.

இக்கலை இந்தக்காலத்துக்கு மிகவும் இன்றியமையாதது: இடம்பட வீடெடுத்துப் பெரிய பங்களாக்களில் வசிப்பவர்கள் தங்கள் உபயோகத்துக்காகப் பெருஞ் செலவில் சிங்காரத் தோட்டத்தை ஏற் படுத்திக்கொள்ளுகிறார்கள். இவ்விதமான பங்களாத்

தோட்டங்கள் பல நம் நாட்டில் மிகச் சிறப்பாக உள்ளன. தமக்குப் பெரிய இடவசதி அமையா விட்டாலும் கலாரசிகர்களாகிய ஒரு சிலர் தமக்கு அமைந்த சிறிய இடத்தில் இரண்டொரு பூஞ்செடி களை வளர்த்து வீட்டையும் சுற்றுப் புறங்களையும் அழகுபடுத்திக் கொள்கிறார்கள். நகரங்களில் சொற்ப வருவாயில் வயிறு வளர்ப்பவர் பலர், இவர் கள் ஜன நெருக்கம் மிகுந்த இடங்களில் ஒண்டு குடித்தனம் செய்கிறவர்கள். தோட்டத்தைச் சொந்தத்தில் அமைத்துக்கொள்ளும் வாய்ப்பு இவர் களுக்கு இல்லை. நாள்முழுவதும் உழைத்து வேலை செய்கிறவர்கள் இவர்களே. சிங்காரத் தோட்டம் இவர்களுக்கே அதிகமாகப் பயன்படக் கூடும். இவர்களின் பொருட்டு நகர சபையார் தம் நகரங் களில் சிங்காரத் தோட்டம் ஏற்படுத்துகிறார்கள். சில வீதிகளுக்கு ஒன்றாக ஒரு நகரிலேயே பல தோட்டங்கள் அமைவதும் உண்டு. வைத்தியசாலை களில் உள்ள நோயாளிகள் மாலைக் காலத்தில் சிறிது நேரம் பசுமையைக் கண்டு மகிழும்பொருட்டு அந்த வைத்தியசாலைக் கருகே தோட்டம் அமைப் பதும் உண்டு புகைவண்டி நிலயம் முதலிய இடங் களில் மக்கள் தங்குவார்கள் அல்லவா! அவர்களுக்கு மன நிம்மதி தரும்பொருட்டு அங்கேயும் சிங்காரத் தோட்டம் வைப்பதுண்டு. பல பொது விடங்களில் இவ்விதம் தக்கவாறு தோட்டங்கள் அமைந் துள்ளன.

சென்னை போன்ற நகரங்களில் முக்கியமாகப் பெரியபாதைகள் ஒன்றுசேரு மிடங்களில் வண்டி

களின் நடமாட்டம் அதிகமாக இருப்பதனுல் வண்டிகளுக்கோ நடந்து போகிறவருக்கோ அபாயம் நேராதபடி சந்தியின் நடுவில் இடம் விட்டு, வரும் வண்டிகளும் போகும் வண்டிகளும் தமக்கு இடப்புறமாகவே அந்த இடத்தைச் சுற்றிக்கொண்டு செல்லும் அமைப்பு சில ஆண்டுகளாகத் தோன்றியுள்ளது. இப்பொழுது அந்த இடத்தை ஒரு சிறு உபவனமாகச் செய்யும் உபாயத்தைப் பலர் அனுசரித்து வருகிருர்கள்.

சிங்காரத் தோட்டக்கலையை ஆனந்தித்து அனுபவிக்கப் பழக்கம் வேண்டும்: நாட்டில் பெரும்பாலான மக்கள் கிராமங்களில் வசிப்பவர்கள். இயற்கை யன்னையின் புன்னகை கிராமங்களிலேயே காணத்தக்கது. அங்ஙன மிருந்தும் கிராமமக்களிற் பெரும்பாலோருக்கு இயற்கைக் காட்சிகளைக் கண்டு ஆனந்திக்கத் தெரிவதில்லை. நகரங்களிலிருந்து புதிதாகக் கிராமங்களுக்குச் செல்கிறவர்களுக்கே அந்த அழகு புலனகிறது. அதனை மிகுதியும் சுவைக்கிறவர்கள் நகரவாசிகளே. கிராம வாசிகளின் மகிழ்ச்சியே நாட்டின் மகிழ்ச்சியாகும். ஆகவே, அவர்கள் முக்கியமாக இயற்கை வனப்பைக் கண்டு மகிழும் விதத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும். சங்கீதத்தையும் நாட்டியத்தையும் அனுபவிப்பதற்கும், ஓவியம் சிற்பம் முதலியவற்றை ரசிப்பதற்கும், எவ்வளவு கலையறிவு வேண்டுமோ, அவ்வளவு அறிவு இயற்கையழகை நுகர்வார்க்கும் அவசியமாகிறது. இதனைப் பெறும் வழிகளைப் புகட்டும் நூல்கள் தமிழில் இதுகாறும் வெளிவர

வில்லை. திரைப்படங்கள் மூலமாகவும் இந்த அறிவைப் பரவச் செய்தல் எளிதாகும் படம் பிடிப்பவர் இத்துறையில் தொண்டாற்றுவார்களாக!

நகரங்களில் உள்ளவர்களில் பெரும்பாலோர் செயற்கை வெம்மை மிகுந்த இடங்களில் தொழிலாற்றி ஜனநெருக்கமுள்ள பாகங்களில்வசித்து வருவதனுல் இயற்கை வனப்பின் அருமை பெருமைகளை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். அவர்கள் இயற்கை அழகை எந்த உருவத்தில் கண்டாலும் (உருவம் என்றது ஓவியம், திரைப்படங்கள், சிங்காரத்தோட்டம் முதலியவற்றை) அதில் ஈடுபட்டுவிடுகிறார்கள். நிழலின் அருமை வெயிலில் அல்லவா தெரியும்! நாட்டு மக்களும் இவ்விதக் கலையறிவைப் பெறுவார்களானல் நாடு சுதந்திரத்தைப் பெற்றுள்ளதுபோல் ஒவ்வொருவருடைய உள்ளமும் கோபதாபங்கள் முதலியவற்றிலிருந்து விடுதலை பெற்றுச் சாந்தியடைதல் கூடும்.

இப்பொழுது நகர அமைப்புச் சட்டம் (Town Planning Act) அமலில் உள்ளது. நிலப்பரப்பின் அழகு அமையும்படி நகரங்கள் நிர்மாணிக்கப் படவேண்டும் என்பதை அச்சட்டம் வற்புறுத்துகிறது. 'வீடு ஒவ்வொன்றும் நாற்புறமும் இடம் விட்டுக் கட்டப்பட வேண்டும்' என்ற முறை வழக்கத்தில் இருப்பதனுல் வீட்டைச் சுற்றியுள்ள இடத்தைச் செடிகொடிகளாலும், புல்வெளியினலும் அலங்கரித்தல் சாத்தியமாகிறது கிராமங்களிலும் வீடுகளின் அமைப்புமுறை நகரங்களை மாதிரியாகக் கொண்டு வளர்ந்து வருகிறது.

வீட்டுத் தோட்டங்களின் அழகுக்காகப் பல நிறங்களோடு கூடிய மெக்ஸிகோ, தென்னுப்பிரிக்கா முதலிய இடங்களின் செடிகள் ஏற்றன வாகும். அவை சென்ற முப்பது ஆண்டுகளுக்குள் நம் நாட்டு மண்ணில் நன்கு வளரக்கூடிய தன்மையையும் பெற்றிருக்கின்றன. அவற்றைப் பயிர் செய்யும் முறையையும், முற்றத்தில் அமைக்கவேண்டிய வகையையும் நம் நாட்டு மக்கள் அனைவரும் உணர வேண்டும்.

நிலப்பரப்பின் அழகு தீட்டப் பெற்ற பல படங்கள் இக் காலத்தில் பத்திரிகைகளில் வெளிவருகின்றன. ஒவ்வொரு குடும்பத்தாரும் அவைகளைச் சேகரித்து வைத்துக் கொண்டு அவற்றின் மூலம் தம் பிள்ளைகளுக்குக் கலையறிவைப் புகட்ட வேண்டும்.

ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் இந்தப் பாடத்துக்கு முக்கியமான இடம் அமைய வேண்டும். கிராம முன்னேற்றத்துக்காகத் தொண்டாற்றுவோர் இந்தவழிகளில் நாட்டுமக்களுக்குச் சிங்காரத் தோட்டக் கலையில் ஆர்வத்தை ஊட்டவேண்டும்.

இன்று நம்நாட்டில் பல கிராமங்கள் இரங்கத் தக்க அசுத்தமான நிலையில் உள்ளன! தெருக்கள் எல்லாம் சாக்கடை ஜலம் பாயும் வழிகள்! மல ஜலம் கழிக்கும் இடங்கள்! குப்பையைக் கொட்டுவதற்கு ஒதுக்குப் புறமான இடம் இல்லை; இந்தக் குப்பை தெருக்களிலும் கொல்லைகளிலும் குவிந்து கிடக்கிறது. தெருக்களிலும் வீடுகளிலும் குப்பை இருந்தால் ஊருக்கு ஆரோக்கியக்குறைவு; அதுவே

நரகம். ஊருக்குப் புறம்பிலே ஒதுக்குப் புறமான இடத்தில் சேமிக்கப்படுமானால் அவ்வளவும் பொன்; நம் நிலங்களுக்கு ஏற்ற உரமாகப் பயன் பட்டு மிகுந்த விளைவைத் தருவதற்கு ஏற்றதாகும் என்பது கருத்து.

இந்தக் கலையின் ஆர்வம் நாட்டிற் பரவுமானால் கலையும் பரவுதல் எளிது. அதன் மூலம் ஆரோக்கியம் ஆனந்தம் முதலியவெல்லாம் தாமாக வந்து விடும்.

# 3. கலையின் வரலாறு

மிகப் பழமையானது: மனிதன் இயற்கையின் பால் ஆர்வங்கொண்டு உபவனங்களை எக்காலத்தில் சிருஷ்டித்துக் கொண்டான் என்று திட்டமாகக் கூற முடியாது. மிகப் பழைய காலந் தொட்டு நந்த வனங்களைப் பற்றியும், பூந்தோட்டங்களைப் பற்றியும் நாம் கேள்விப்படுகிறோம்.

தோட்டக் கலையின் கூறுகள் நான்கு என்று முன்பு கூறினோம். அவற்றுள் பழக் கலையும் காய் கறிக் கலையும் மிகச் சமீபகாலத்திலேயே விருத்தி யாகி உள்ளன. இக்காலத்திலே உள்ள புதிய பழங் களாகிய சபோடா, பப்பாளி, தக்காளி முதலிய வற்றையும், பழைய பழங்களாகிய மா, வாழை முத லியவற்றில் இப்பொழுது மல்கியுள்ள புதிய இனங் களையும் நம் முன்னோர் — 200 வருடங்களுக்கு முன் பிருந்தவர்கூட-அறியமாட்டார்கள். காய் கறி களிலும் முன்காலத்தில் இல்லாமல் இப்பொழுது புதிய ரகங்கள் தோன்றியுள்ளன. இந்த இரண்டு கலைகளும் மிகச் சமீப காலத்திலேயே வளர்ச்சியுற் றுள்ளன என்பதற்கு இவை ஓர் உதாரணமாகும். ஆனால் உபவனக்கலையோ புத்தர் காலத்துக்கு ஆயி ரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்தே, நம் தேசத்தில் மட்டும் அன்று, உலகத்தின் மற்றப் பிரிவுகளிலும் சிறப்புற்று விளங்கியது.

எகிப்தியர்கள் தோட்டம் போடுவதில் சமர்த்தர்கள். பாபிலோனியரும் அப்படியே. பாபிலோனியாவின் தொங்கு தோட்டங்கள் சரித்திரப் பிரசித்தி பெற்றவை. பல அடி உயரத்தில் சுவர்களை எழுப்பி அவற்றின்மீது மண்போட்டு பாபிலோனியர்கள் பூந்தோட்டங்களை விருத்தி செய்தார்கள். அவைகளைப் பாதுகாத்தல் மிகவும் பிரயாசையாக இருந்த காரணத்தால் அவை எப்பொழுதோ அழிந்துபோயின. சீனரும் தோட்டம் போடுவதில் விருப்பமுடையவர்களே. நம் இந்தியாவைப் பற்றிச் சொல்லவேண்டியதே இல்லை. ஏனெனில் நம் முன்னோர் தோட்டம் போடுவதைப் பற்றி வேதம் முதற்கொண்டு அநேகமாக எல்லா நூல்களிலும் அங்கங்கே சிலசில செய்திகளைக் குறித்துள்ளார்கள்.

இந்திய உபவனங்களின் சிறப்பியல்புகள்: இக்காலத்தில் ஓய்வு, உல்லாசப் பொழுது போக்கு முதலியவற்றுக்காக உபவனங்கள் பயன்படுகின்றன. பண்டைக் காலத்தில் தனிமையை நாடிப் பரமாத்மிக வழியில் வாழ விரும்பியவர்களுக்கே இது பயன் பட்டது. வானப் பிரஸ்தாச்சிரமிகள் தங்கள் வாழ்வின் பிற்பகுதியை அமைதியாகக் கழிக்க விரும்பி ஜனநெருக்கமுள்ள நகரங்களை நீங்கித் தம் மனைவிமாருடன் சென்று, சிறு குடில்களை ஏற்படுத்திக்கொண்டு இவ்வித வனங்களில் தெய்வ சிந்தனையில் ஈடுபட்டுக் காலங்கழித்து வந்தனர். இத்தகையவர்கள் ரிஷிகள் எனப்படு

வார்கள். இவர்களுடைய குடில்கள் ஆச்சிரமம் அல்லது பர்ணசாலை எனப்படும்.

அக்காலத்தில் இந்த உபவனங்கள் வித்தியா பீடங்களாகிக் குருகுலங்களாகவும், ஆத்ம விசாரணையில் ஈடுபட்டவர்களுக்கு உபதேச இல்லங்களாகவும் விளங்கி வந்தன. நம் நாட்டின் அறிவுச் செல்வத்தின் கூறுகளாகிய நூல்களிற் பெரும்பாலானவை இவ்வித வனங்களிலேயே எழுதப் பெற்றன. புத்தர் தாம் புதிதாகக் கண்டறிந்த கொள்கைகளை முதன் முதலில் வெளியிட்ட இடம் காசிநகரில் மிருகதாவம் என்னும் வனமாகும். மிருகதாவம் என்பதற்கு மான்காடு என்பது பொருள். வனத்திலுள்ள செடிகள், கொடிகள் முதலியவற்றை ஜலம் ஊற்றிப் போஷித்து வந்தவர்கள் பர்ணசாலையில் வசித்து வந்த ரிஷிகளுக்குக் கைங்கரியம் செய்து வந்த சீடர்களே. பெண்களும் இவற்றை வளர்த்து வந்தார்கள் என்பது காளிதாசனுடைய சாகுந்தலம் முதலிய வடமொழி நூல்களால் தெரிகிறது.

இக்காலத்தில் வீட்டுத் தோட்டங்களாகிய வனங்களுக்குக் கட்டடங்கள் மையப் பொருளாக உள்ளன. கட்டடத்தின் அழகைச் சிறப்பிக்கவே உபவன அமைப்பு இக்காலத்தில் அந்த அந்தக் கட்டடத்தின் தோற்றத்துக்குத் தக்கவாறு வேறுபட்டிருக்கிறது. முன் காலத்தில் கட்டடத்துக்கு முதன்மை வழங்கப்படவில்லை. ஆச்சிரமங்கள் சிறு குடில்களே அல்லவா! அக்குடில்களைவிட அமைதியைத் தருவதற்கு வனமே சிறப்புப் பொருளாகக் கருதப்பட்டு வந்த காலம் அது.

இக்காலத்தில் வனங்களில் செறிவு அதிகமாக உள்ளது. சிறிய இடத்துள் பல பல பூஞ்செடிகள், கொடிகள், சட்டிச் செடிகள், பனைவகை (Palms) முதலியவைகள் எத்தனையோ நெருக்கமாக உள்ளன. அக்கால வனங்களில் செறிவுக்கு முக்கியம் தரப்படவில்லை. விசித்திரப் பூஞ்செடிகள், பனை வகை முதலியவற்றுக்கு அவ்வனங்களில் இடம் இல்லை. நிழலைத் தருவனவும், கண்ணுக்குப் பசுமையை வழங்குவனவும், ஆரோக்கியத்தை அளிப்பனவும், பூஜைக்கு வேண்டிய மலர்களைத் தருவனவுமான மரங்களும் செடிகளுமே இடம் விட்டு விட்டுச் செறிவில்லாமல் வளர்க்கப்பட்டன. பாதைக்கோ (Walks) அதன் ஓரங்களின் (Borders) அலங்காரத்துக்கோ முதன்மை அந்நாளில் வற்புறுத்தப்பட வில்லை. இரண்டொரு மேடைகள் (சிலாதலம்), கடவுளின் அறிகுறியாகிய ஒரு சின்னம் இவ்வளவே உப வனத்துக்கு அணியாக விளங்கின.

நூல்களால் அறியப்படும் செய்திகள்: அக்கினி புராணம், பத்ம புராணம், மச்ச புராணம், காம சூத்திரம், காத்யாயன க்ரஹ்ய சூத்திரம் சுக்கிர நீதி, சார்ங்கதர பத்ததி முதலிய வடமொழி நூல்களில் உபவனக் கலையைப் பற்றிய செய்திகள் மிகுதியாக உள்ளன. விருக்ஷாயுர்வேதம் என்ற நூல் செடி கொடிகளை வளர்ப்பதைப் பற்றி விவரித்துக் கூறுகிறது. அக்கினிபுராணத்தில் ஓரிடத்தில் 'அழுக்காறு முதலிய தீய குணமில்லாத ரிஷியை வணங்குவது போலவே ஒருவர் தாவரங்

களை வணங்க வேண்டும்; ஏனெனில் அவை தங்களை அழிக்க முயல்கின்றவர்களுக்கும் நிழலையும், மலர்களையும், கனிகளையும் வழங்குகின்றன' என்பது காணப்படுகிறது. இதே நூலில் 70-ஆம் அத்தியாயத்தில் முதல் 9 சுலோகங்கள் செடிகளை நடுவதைப் பற்றியும் உபவனங்களை நிர்மாணிப்பதைப் பற்றியும் கூறுகின்றன.

'நிழலையும் பழங்களையும் தரும் மரங்களைப் பாதை ஓரங்களில் நெடுக வைப்பதும், சிங்காரத் தோட்டங்களை உண்டாக்கி அவற்றைப் பொது உடைமையாகச் செய்வதும் சிறந்த தருமமாகும்' என்பது எல்லா நூல்களும் ஒருங்கே கூறும் உபதேசம்.

'மரங்களை அழித்தல் தேசத் துரோகமாகும்' என்று மனுதர்ம சாத்திரம் (vii அத். பிரிவு 288, 330; ix அத். பிரிவு 143, 145) கூறுகிறது.

ரிக்வேதத்தில் (111:8 - 11) சிங்காரத் தோட்டத்திலுள்ள வீட்டின் அமைப்பு எப்படி இருக்க வேண்டும் என்ற விவரம் காணப்படுகிறது. வாத்சாயனர் காம சூத்திரமும் சாங்க்யாயனர் க்ருஹ்ய சூத்திரமும் இச்செய்தியை இன்னும் விளக்கமாகக் கூறுகின்றன.

வடமொழி நூல்களில் உபவனத்தைப் பற்றிக் காணப்படும் செய்திகள் சுருக்கமாக ஒரு கட்டுரைக்குள் சொல்லத் தக்கவை அல்ல. செடிகளின் இனப்பெருக்க முறைகளும் கத்தரிப்பும் நோய்களுக்

கேற்ற சிகிச்சை முறைகளும் இவற்றில் அழகாகக் கூறப் பட்டுள்ளன.

சில பழக்க வழக்கங்கள் : உப வனங்களை உண்டு பண்ணி அவற்றில் சேர்ந்தாற்போல் ஓர் அரச மரத்தையும், வேப்பமரத்தையும் நட்டு வளர்த்து மக்கள் அந்த இரண்டு மரங்களையும் பூஜித்து வந்தார்கள். இந்த இரண்டுக்கும் கல்யாணம் செய்வதும், சோமவார அமாவாசையன்று காலையில் இவற்றை 108 முறை வலம்வந்து பூஜித்தலும் இன்றும் வழக்கமாக இருக்கின்றன. ஐப்பசி மாதத்தில் எல்லோரும் உபவனங்களுக்குச் சென்று அங்கே உள்ள வனதேவதைகள், ஓஷதி தேவதைகள் முதலியவற்றுக்குப் பூஜை போட்டு வழிபட்டு, அங்கேயே பெரு விருந்துகளை மேற்கொள்வதனை இன்றும் பல இடங்களிற் காணலாம். இச்செயல் வனபோஜனம் எனப்படும்.

கோவில்களையும், ஊர்களையும் அடுத்து நந்தவனங்களை வைத்தல் சிறந்த புண்ணியமென்று கருதி, பலர் அத்தருமத்தை இப்பொழுதும் மேற்கொண்டு வருகிறார்கள். இவை எல்லாம் உபவனங்களிடத்தில் நம்மவர்களுக்கு இருக்கும் ஆர்வத்தைக் காட்டுகின்றன.

# 4. தமிழரும் உபவனக் கலையும்

பண்டைத் தமிழ் நூல்களைப் பார்த்தால் தமிழ் மக்கள் சிங்காரத் தோட்டங்கள்மீது எவ்விதமான அன்பை வைத்திருந்தார்கள் என்பது புலனாகும். முக்கியமான நகரங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட பல தோட்டங்கள் இருந்தன. காவிரிப்பூம் பட்டினத்தில் இலவந்திகை, உய்யானம், சுவேரவனம், சம்பாதிவனம், உபவனம் என ஐந்து வனங்கள் இருந்தன வென்று மணிமேகலை என்ற நூல் கூறுகிறது. நந்தவனங்கள் புதிதாக மணந்துகொண்ட காத லர்க்குப் பெருவிருந்தாக இருந்தன. காதலரின் சந்திப்பும் அவர்தம் காதல் விளையாட்டும் உப வனங்களில் நடைபெற்றனவாக நூல்கள் கூறு கின்றன. பொழில் விளையாட்டு என்பது காவியங் களில் அழகாக வருணிக்கப்படும் பாகம்.

பாவையர்கள் ஒரு வனத்தில் தம் காதலர்களு டன் சென்றார்கள், மரஞ் செடிகளில் உள்ள பூக் களை யெல்லாம் கொய்தார்கள். பூக்கள் பறிக்கப் பட்ட பின் செடிகள் பொலிவற்றுத் துவள்வதை அம்மகளிர் கண்டனர். 'ஆ! நம் கணவர் இந்த வறிய கொம்புகளைக் கண்டால் அவர்களுக்கு என்ன வாகுமோ' என்று க்ஷணநேரம் அம்மங் கையர் வருந்தினர். அவர்களுக்கு உடனே ஓர் எண்ணம் தோற்றியது. அவர்கள் தாம் அணிந் திருந்த பொன் ஆபரணங்களை எல்லாம் கழற்றி

அக்கொம்புகளுக்கு இட்டனர். அவற்றுக்கு ஓர் அழகு எய்தியது கண்டு வியப்புற்றனர். இங்ஙனம் கம்பர் சித்திரித்த பாட்டு பின் வருமாறு:

'பூவெலாம் கொய்து கொள்ளப்
பொலிவில துவள நோக்கி
யாவையாம் கணவர் கண்ணுக்
கழகில இவைஎன் றெண்ணிக்
கோவையும் வடமும் நாணும்
குழைகளும் குழையப் பூட்டிப்
பாவையர் பணிமென் கொம்பை
நோக்கினர் பரிந்து நிற்பார்!'

காதல் விளையாட்டின் காட்சிகள் கம்பரால் அழகாக வருணிக்கப்படுவனவாகும். ஒரு பெண் தன் காதலனுடன் ஊடல் கொண்டாள். அவளுடைய மைபடிந்த கரிய கண்கள் சிவந்தன. அவள் கோப ஊடலுக்குக் காரணமான காதலனும் சாமானியன் அல்லன். நெய் தடவிய கூரிய வேலை ஏந்திய வீரனுவான். இருப்பினும் என்? காதலின் முன் வீரம் எம்மாத்திரம்? அவள் ஊடல் கொண்டிருக்கையில் உபவனத்தில் தன் கைகளுக்கு எட்டாத உயரத்தில் அழகிய மலர்கள் இருப்பதைக் கண்டாள். தன் கணவன் அவற்றை அவளுக்குப் பறித்துத் தர வேண்டும் என்பது அவளுடைய அவா. ஆனல் வெட்கம் குறுக்கிடும்போது அவனை எங்ஙனம் கேட்பது? அதனுல் அவள் யோசனை செய்து ஒரு முடிவுக்கு வருகிருள். மரத்தின்மேல் இருந்த குயில் ஒன்றை அவள் கண்டு 'ஓ குயிலே! நீ எனக்கு அம்

மலர்களைப் பறித்துத் தாராயோ?' என்று தன் கண வன் காதில் விழும்படி கூறி அக்குயிலைத் தொழும் பாவனையாகக் கைகளைக் கூப்புகிறாள். இச்செய்தி,

'மைதாழ் கருங்கண்கள் சிவப்புற
வந்து தோன்ற
செய்தாவும் வேலானொடு நெஞ்சு
புலந்து நின்றாள்
எய்தாது நின்ற மலர்நோக்கி
எனக்கி தீண்டக்
கொய்தீதி என்றோர் குயிலைக்கரம்
கூப்புகின்றாள்'

என்று அழகாகக் கூறப்பட்டுள்ளது. இங்ஙனம் வரும் பாடல்கள் மிகப் பல.

உபவனங்களைத் தமிழர் புனிதமான இடமாகக் கருதினர் என்பது பல செய்திகளால் தெரிகிறது. சுதமதி என்பவள் மணிமேகலையை அழைத்துக் கொண்டு உபவனத்துக்குச் செல்லுகிறாள். தொலை வில் இருந்தபடி அதனைத் தொழுது விட்டு, அவள் மணிமேகலைக்குக் காட்டிய பின்பே அவர்கள் அத னுள் பிரவேசித்தனர். இச்செய்தி,

'வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கைப் படாம்போர்த் ததுவே
ஒப்பத் தோன்றிய உவவனந் தன்னைத்
தொழுதனள் காட்டிய சுதமதி தன்னொடு
மலர்கொய்யப் புகுந்தனள் மணிமேகலையென்'

என்று மணிமேகலை நூலால் தெரிகிறது.

முடி மன்னர்களுக்கும் பிரபுக்களுக்கும் உல்லாச விளையாட்டுக்களுக்காகப் பிரத்தியேக

மான சிங்காரத் தோட்டங்கள் தமிழ் நாட்டில் இருந்தன. அந்தத் தோட்டங்களில் அன்னம், மயில், மான், குரங்கு முதலிய பிராணிகள் வளர்க்கப் பட்டன.

இத்தகைய வனம் ஒன்றில் ஓர் அரசனும் அவனது பட்டத்துத் தேவியும் உல்லாசமாக உலாவ வருகிறார்கள். தன் பேடையைப் பிரிந்த ஓர் ஆண் அன்னமும், பேடையும் ஆணுமாகிய இரண்டு மயில்களும் ஒருங்கு கூடி அவ்வனத்தில் ஓர்பால் ஆடுகின்றன. இக்காட்சியை அரசனும் அரசியும் கண்ணுறுகின்றனர். காதல் உள்ளத்தில் திளைத்திருப்பினும் அக்காட்சி அவர்களுக்கு அப்பொழுது தெய்வ நினைவையே தருகின்றது. அன்னம் வெண்ணிறமுடைய பலராமனைப் போன்றும், ஆண்மயில் நீலவண்ணனாகிய கண்ணனைப் போன்றும், பெண்மயில் கண்ணனுடைய காதலி பின்னைப் பிராட்டியைப் போன்றும், அந்த ஆட்டம் அம்மூவரும் ஒருசமயம் கைகோத்தாடிய குரவைக் கூத்தைப் போன்றும் பொலிய மன்னனும் தேவியும் நோக்கி மகிழ்ந்தார்கள் என்று பின்வரும் அடிகள் தெரிவிக்கின்றன.

'புணர்துணை நீங்கிய பொய்கை அன்னமொடு
மடமயிற் பேடையும் தோகையும் கூடி
இருசிறை விரித்தாங் கெழுந்துடன் கொட்பன
ஒருசிறைக் கண்டாங்கு உள்மகிழ் வெய்தி
மாமணி வண்ணனும் தம்முனும் பிஞ்ஞையும்
ஆடிய குரவையிஃது ஆமென நோக்கியும்'

(மணிமேகலை. 19: 61-66)

என்பது அப்பகுதி. பசுமையான இலைகளோடு கூடிய மூங்கிற் புதர் வெண்ணிறமுள்ள ஒரு கடப்ப மரத்தின் அருகில் எழுந்து அதனைத் தழுவிநின்றது. மூங்கிற்புதர் கண்ணபிரானாகவும் வெண்கடம்பு பலராமனாகவும் அந்தக் காதலர்க்குப் புலனாகவே அவர்கள் அம்மரங்களைத் தொழுது நின்றார்களாம்:

'பாசிலை செறிந்த பசுங்காற் கழையொடு
வால்வீ செறிந்த மராஅம் கண்டு
நெடியோன் முன்னொடு நின்றனன் ஆமெனத்
தொடிசேர் செங்கையில் தொழுது நின்றேத்தியும்'
(மணி. 19: 75-78.)

[கழை=மூங்கில். வால்வீ - வெள்ளை மலர். மராஅம் - வெண் கடம்பு. முன்னொடு - அண்ணனுடன்]

என்று அக்காட்சி வருணிக்கப்படுகிறது. காதல் வேளையிலும் தமிழர் காட்டும் கடவுட் பக்திதான் என்னே!

தமிழர்களுடைய சிங்காரத் தோட்டங்களில் அக்காலத்தில் அமைந்திருந்த சில விசித்திரப் பொருள்களாவன: ஒன்று அந்தக்கேணி என்பது. இது கரப்பு நீர்க்கேணி என்றும் வழங்கும். தரை மட்டத்தில் நீர் நிரம்பியுள்ள குளமும் அதனைச் சார்ந்த தரையும், குளம் வேறு தரை வேறு என்று வேறுபாடு தெரியாதவண்ணம் பளிங்குக் கற்களால் நிறுவப்பட்ட கரையோடு பொலியும் இடமே கரப்பு நீர்க்கேணி எனப்படும். கரத்தல் என்பதற்கு மறைத்தல் என்பது பொருள். அவ்வனத்திலுள்ள மற்றொரு குளம் எந்திரக்கிணறு எனப்படும். வேண்

டிய சமயம் நீரை நிரப்பவும், வேண்டாத சமயம் நிரம்பியுள்ள நீரை வெளியேற்றவும் செய்யும் ஓர் இயந்திரத்தைத் தன்பால்கொண்ட கிணறு எந்திரக் கிணறு எனப்படும். உவவனத்தில் குன்றுபோல் ஓர் இடத்தை அமைத்து அதிலிருந்து ஜலம் அருவியைப் போல் கீழே விழுமாறு அமைக்கப்பட்டிருந்தது.

‘அந்தக் கேணியும் எந்திரக் கிணறும்
தண்பூங் காவும் தலைத்தோன் றருவிய
வெண்சுதைக் குன்றொடு வேண்டுவ பிறவும்
இளையோர்க் கியற்றிய விளையாட் டிடத்த
சித்திரப் பூமி வித்தகம் நோக்கி’

(பெருங்கதை, 1. 33: 3-7)

என்பது முதலாகிய சில பகுதிகளால் இச்செய்தி தெரியவருகிறது.

நம் நாட்டில் இக் காலத்தில் உபவனங்கள்: தமிழ் நாட்டில் இப்பொழுது எத்தனையோ சிங்காரத் தோட்டங்கள் காணப்படுகின்றன. அவை எல்லாம் பழங்காலத்து மாதிரியைப் பின்பற்றி அமைக்கப்பட்டவை அல்ல. மேல் நாட்டினரோடு நமக்குத் தொடர்பு ஏற்பட்டபின் அவர்களிடம் உள்ள நல்லனவற்றையும் நாம் நம் உபவனத்தில் சேர்த்துக் கொண்டுள்ளோம். ஆகவே, இக்காலத்தில் நம் உபவனங்கள் எல்லாம் இரண்டு ரீதிகளும் கலந்த ஒருவகையாகும்.

மேல் நாட்டின் கலையை ஒட்டி இப்பொழுது கட்டடத்துக்கு முக்கியம் ஏற்பட்டிருக்கிறது. புல்வெளியை (Lawn)க் கட்டடத்தின்முன் அமைப்பது அந்நாட்டு முறையை ஒட்டியதே. அமெரிக்காக்

கண்டம் கண்டறியப்பட்ட பின் பல நிறமுள்ள மலர்களைத் தரும் பூஞ்செடிகள் அங்கேயிருந்து உலகின் மற்றப் பாகங்களுக்குக் கொண்டு வரப்பட்டன. பல நிறங்களை ஒன்று சேர்த்து நெருக்கமாகப் பூஞ்செடிகளை ஓரிடத்தில் பயிர் செய்யும் முறை புதிதாகத் தோன்றியதாகும்.

சட்டிச் செடிகள் பழந் தமிழ் நாட்டில் இருந்திருக்க வேண்டும் என்பதற்கு ஆதாரம் இல்லாமற் போகவில்லை. 'தாழிக்குவளை' என்று சிலப்பதிகாரம் முதலிய நூல்களில் வரும் தொடர் சட்டிகளில் வளர்க்கப்பட்ட குவளைமலர்களைக் குறித்தல் கூடும்; எனினும் சட்டிச் செடிகளை மிகுதியாக வளர்க்கும் முறை மேல்நாட்டை ஒட்டியதாகும். பனிவகைகளும் அங்ஙனமே புதியவை. தோட்டத்தில் உருவச் சிலைகளையும் அழகிய வடிவங்கள் அமைந்த மட்பாண்டங்களையும் அங்கங்கே நிறுத்துகிறோம். இவை எல்லாம் புதியனவே.

டச்சுக்காரர் சிங்காரத் தோட்டத்தில் உள்ள செடிகளைக் கத்தரித்துப் பிராணிகளைப்போன்றும், குடை முதலிய பொருள்களைப் போன்றும் வடிவங்கள் அமையுமாறு அச் செடிகளைத் திருத்தி அமைக்கும் முறையை (Topiary Garden) முதல் முதலில் கண்டறிந்தார்கள். அவர்களைப் பார்த்து நாமும் நம் சிங்காரத் தோட்டங்களில் அம் முறையை இப்பொழுது கையாண்டு வருகிறோம்.

இங்ஙனம் மேல்நாட்டினரின் சிங்காரத் தோட்டங்களைப் பின்பற்றி நாம் நம் காலத்துக்கு

ஏற்ப மாற்றிக்கொண்ட புதுமைகள் மற்றும் பல இருக்கின்றன.

## நமக்கு வேண்டுவன

உபவனக்கலை எப்படி முன் காலத்தில் இருந்தது, அதன் பயன் எங்ஙனமெல்லாம் இருந்தது, தமிழரின் கலைச்சிறப்புக்கள் எவை, மேல்நாட்டு ரீதி எவ்வகையில் கலப்புற்றது முதலியவை ஒருவாறு விளக்கப்பட்டன. நமக்குத் தோட்டம் அமைக்கும் போது வேண்டுவன எவை என்பதை இங்கே கவனிக்க வேண்டும்.

மேல் நாட்டுச் சிங்காரக் கலை ஒன்றையே பின்பற்றுவது என்பது தவறு. மேலும் ஓரிடத்தின் கால இயல்புக்கு ஏற்ப வளரும் செடிகளை மற்றொரு மண்ணில் வேறு வகையான சீதோஷ்ணத்தில் பயிர் செய்வதில் பல கஷ்டங்கள் ஏற்படும். மேலும் நமக்கு உல்லாசத்துக்கு வனமும் வேண்டும்; பொருளாதாரப் பிரச்னையைத் தீர்க்க உபயோகமுள்ள வேறு பலவும் வேண்டும். ஆகவே நம் வனத்தில் உபயோகமுள்ள பல மரங்களையும் செடி கொடிகளையும் உற்பத்தி செய்யவேண்டும்.

எலுமிச்சை, ஆரஞ்சு, சபோடா, பப்பாளி, மா, பலா முதலிய மரங்கள் பழங்களைத் தருவதுடன் பசிய காட்சியையும், இவற்றுள் சில நிழலையும் தரும். வேம்பு போன்றவை ஆரோக்கியத்துக்கு ஏற்றவை. மல்லிகை, ரோஜா, சம்பங்கி, பன்னீர், மகிழ் முதலியன வாசனைக்காக. மாதுளை வனத்துக்கு அலங்காரமும் ஆகும்; பழங்களையும் தரும். வாழையும்

அப்படியே. ஓரங்களில் அழகுக்காக வளர்க்கும் செடிகளும் நம் பெண்களுக்கு விருப்பமானவையும் கதம்பத்தில் கட்டுவதற்குப் பயன் படுபவையுமான கனகாம்பரம், டிசம்பர்பூ(பனிப்பூ),கோஸ்மஸ் முதலியனவாக இருத்தல் வேண்டும். மருந்துகளுக்காகப் பயன்படும் செடிகளையும் பசுமைக்காகவும் மருந்துக்காகவும் வளர்க்கலாம்.

சுருங்கக் கூறும்போது நமக்கு மேல் நாட்டாரைப் போல் வெறுங் காட்சி மாத்திரம் நோக்கமாக இராமல் உபயோகமும் அதில் கலந்திருக்கவேண்டும். வரலாற்றை அறிவதன் பயன் நம் நாட்டின் இயல்புக்கு ஏற்ப வனங்களை அமைப்பதுவேயாம்.

# 5. வீட்டுத் தோட்டம்

[முன்காலத்தில் தமிழ்நாட்டில் சிறப்புற்றிருந்த சிங்காரத் தோட்டக் கலையை நாம் இக்கால ரீதியில் புதியவற்றையும் கூட்டிப் புதுப்பித்தல் அவசியமாகும். ஒவ்வொரு வீடும் இந்தக் கலையை வேறு பல கலைகளுடன் மேற்கொள்ள வேண்டும். ஒவ்வொரு கிராமமும் பொதுத் தோட்டம் ஒன்றையேனும் பெற்று விளங்கவேண்டும். ஒவ்வொரு வீட்டாரும் உபவனக் கலையின் தத்துவத்தை அறிந்து கொண்டால் நாடு நாளுக மகிழ்ச்சி பெற்று விளங்குதல் கூடும். ஆகவே வீட்டுத் தோட்ட அமைப்பு முறையை எத்தனை அத்தியாயங்களில் விளக்கினாலும் அத்தனையும் அவசியமே.]

சிங்காரத் தோட்டங்களை ஊருக்குப் பொதுத் தோட்டங்கள், வீட்டுத் தோட்டங்கள் என இரண்டு வகையாகக் கொண்டிருக்கிறார்கள். பொதுக் கட்டடங்களாகிய புகைவண்டி நிலையம், உத்தியோக சாலை, வைத்தியசாலை, பள்ளிக்கூடம் முதலியவற்றின் தோட்டங்களும் ஒருவகையில் வீட்டுத் தோட்டத்துள் அடங்கும். பொது வனங்களைப் பற்றியும் தனிமையாக ஆராயவேண்டும். இங்கே வீட்டுத் தோட்டமே ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப் படுகிறது.

வீடுகளுக்கு முன்புறம் அமையுமாறு அமைக்கப்படும் தோட்டமே வீட்டுத் தோட்டமாகும். வீட்டின் பின்புறம் தோட்டம் போடுவதும் அழகுக்கும் ஆரோக்கியத்துக்கும் நல்லதே என்றாலும் முன்புறம் போடுவதுதான் சிறப்பாகும். வீட்டின் உபயோகத்துக்கு உரிய கறிகாய்களையும், பழங்களையும் பின்புறம் உற்பத்தி செய்துகொள்ளலாம். இவ்விதத்

தோட்டம் கோல்லைத் தோட்டம் எனப்படும். வீட்டின் முன்றிலில் அலங்காரமாக அமைக்கும் தோட்ட விஷயமே இங்கே எடுத்துக் கொள்ளப்படுகிறது.

## தோட்டம் எவருக்கு ?

இவ்விதமான தோட்டம் எவருக்கு? பணக்காரருக்கா? ஏழைக்கா? விவசாயிக்கா? வேறு தொழிலாளிக்கா? நகரவாசிக்கா? நாட்டு வாசிக்கா? சுகாதாரம் அழகு ஆனந்தம் இவைகள் உலகத்தில் குறிப்பிட்ட ஒரு துறையிலுள்ள மக்களுக்கு மட்டும் அல்ல. அவை யாவருக்கும் பொது உடைமை. எனவே வீட்டுத் தோட்டம் ஏழை, பணக்காரன் முதலிய வேறுபாடு இல்லாமல் யாவருக்கும் அவசியமே. நகரவாசிக்கும் வேண்டும்; நாட்டு வாசிக்கும் வேண்டும்.

நகரங்களில் ஜனநெருக்கம் அதிகம். அதனுல் வீட்டுப் பிரச்னை தீர்க்க முடியாத சிக்கலாக உள்ளது. தனிப் பங்களாக்களில் வாழ்பவர் அல்லாமல் மற்றவர்கள் சிங்காரத் தோட்டத்தை வீடுகளில் அமைத்துக்கொள்ள நகரங்களில் இடம் இல்லை. இத்தகைய இடங்களில் வசிப்போருக்காகவே நகரங்களில் சிங்காரத் தோட்டங்கள் ஒன்ருே, பலவோ, நகரசபையாரால் பொது விடங்களில் நிர்மாணிக்கப்படுகின்றன.

நகரங்களின் சுற்றுப்புறங்களில் இடம் பிடித்துப் புதிதாக 'எக்ஸ்டென்ஷன்கள்' சிருஷ்டிக்கும் போது துரைத்தனத்தார் வீடுகளை அமைப்பதில் சில நிபந்தனைகளை வைத்திருக்கிருர்கள். அந் நிபந்

தனைகள் வீடு அழகாக அமையும் வகையில் அவற்றில் வசிப்போருக்குத் துணைசெய்கின்றன. எனவே, புதிதாக வீடுகட்டும்போது நகரங்களில் இனிமேல் முன்புறமும் பின்புறமும், சுற்றிலும் இடம் விடாமல் வீடுகட்ட முடியாது. அந்தக் காலி இடங்களை வனத்தினால் அழகுபடுத்தல் சாத்தியமே.

கிராமங்களில் பலர் சிறு குடிசைகளில் வாழ்கிறார்கள். குடிசைகள் குடியிருப்புக்கு ஏற்றனவே அல்ல. இடவசதி சுத்தமாகப் போதாது. இந்த நிலை சுதந்தர இந்தியாவில் இனியும் நீடித்து இராது. ஏழைகளின் அரசாங்கம் இது. எல்லோரும் சுகமாக இருந்தால்தான் நாடு உயரும் என்று கொண்டு அரசாங்கத்தார் கிராமங்களிலும் இடவசதி அமைய வீடுகள் கட்டுவதற்குவேண்டிய ஏற்பாடுகளை ஆலோசித்து வருகிறார்கள். ஆகவே, ஏழை எளியவர்களுக்கும் வீட்டுத்தோட்டம் அவசியமே

அதிக இடம் படைத்த பணக்காரர்களுக்குப் பெரிய அளவில் உபவனம் அமையுமானால், எளியவர்களுக்கு அவரவர்கள் குடியிருப்பின் இடத்துக்கு ஏற்பச் சிறிய வனம் வேண்டும். மாவுக்குத் தக்க பணியாரம்!

## தோட்டம் அவசியப் பொருளா ?

மற்றொரு கேள்வி இங்கே எழுகின்றது. 'எல்லோருக்கும் தோட்டம் வேண்டும் என்றால் அத்தோட்டந்தான் அவசியப் பொருளா, ஆடம்பரப் பொருளா?' என்பதே அவ் வினா. வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவு, உடை, உறைவிடம் முதலி

யன அவசியப்பொருள் எனப்படும். பட்டினால் ஆன உடை, ராஜபோஜனம், எழுடுக்கு மாடிவீடு முதலியன ஆடம்பரப்பொருள் என்று சிலர் கூறுவர். வாழ்க்கைக்கு இன்றியமையாதவை எல்லாம் அவசியப்பொருள் என்றும், அவ்வளவு அவசிய மற்றவை ஆடம்பரப்பொருள் என்றும் சிலர் கூறுவர்.

ஒருவருக்கு எது அவசியம், எது ஆடம்பரம் என்பதைத் தீர்மானிப்பவர் அந்தஅந்தப் பொருளை உபயோகிப்பவரே அன்றோ? ஒரு காலத்தில் அவசியமில்லாத பொருள் பிறிதொரு காலத்தில் அவசியப் பொருள் ஆதலும் கண்கூடு. மின்சார விளக்கு, ரேடியோ, செய்தித் தாள்கள் முதலியவை இக்காலத்தில் அவசியப் பொருள்களாய்விட்டன. இவற்றை ஆடம்பரம் என்று கூறுவோர் சமூக வாழ்க்கை நிலை உயரவேண்டும் என்ற கருத்து இல்லாதவரே ஆவர். நாகரிகப் பண்பு வளர வளர நமக்குப் பல பொருள்கள் அவசியமாகின்றன. அவ்வகையில் சிங்கார வனங்கள் இக்காலத்தில் ஆடம்பரப் பொருள் ஆகா.

ஒரு பொருள் அவசியந்தான் என்பது அமைந்த பின் அதனைப் பெறும் விஷயத்தில் ஏற்படும் செலவுகளுக்கோ உழைப்புக்கோ ஒருவர் அஞ்சக்கூடாது.

உழைப்பும் செலவும் இல்லையேல் சுகம் ஏது? வருவாய் உயர உயர, வாழ்க்கை நிலையும் உயர்ந்து கொண்டே போகும். அதன் அறிகுறியாகப் பலபொருள்கள் புதிது புதிதாகத் தேவைக்குள் வந்துவிடும்.

தோட்டம் அமைக்கும் அளவில் இடம் கிடைக்கும்படி வீட்டைக் கட்ட நிலம் வாங்கவும், அமைத்த பிறகு தோட்டத்தை ஒழுங்காகப் போற்றிவரவும் ஏற்படும் செலவுகளை இக்காலத்தில் அவசியத்திலேயே சேர்க்கவேண்டும் என்பது பல பொருளாதார நிபுணர்களின் அபிப்பிராயமாகும்.

## ஒருவர் காணும் கனவு

'ஒரு வீடு, அதற்குமுன்புறம் ஒரு சிங்காரவனம்; அந்த வீட்டில் நாம் குடியிருக்கவேண்டும்; நம்முடைய வனம் இப்படி இப்படி எல்லாம் அமையவேண்டும்' என்று ஒருவர் தம் மனத்துள் ஒரு திட்டம் போட்டு விடுதல் எளிது. அத்திட்டத்தை நிறைவேற்றிவைப்பதில் பல சங்கடங்கள் குறுக்கிடலாம்.

வீட்டுக்குமுன் உபவனம் இருக்கவேண்டும் என்று விரும்புவோருக்கு இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று, ஏற்கனவே தோட்டம் அமைந்த வீட்டை விலைக்கு வாங்குவது; இல்லையேல் காலி இடத்தை வாங்கி அதில் வீட்டையும் தோட்டத்தையும் அமைத்தல் மற்றொன்று. இந்த இரண்டு வழிகளில் எதனைப் பின்பற்றுகிறவர் அதிருஷ்டவான்?

ஏற்கனவே தோட்டம் அமைந்துள்ள வீட்டை வாங்குகிறவருக்கு அத்தோட்டம், தம் மனத்தில் வகுத்துக்கொண்ட திட்டம்போல் இராது; வீடும் அப்படியே. அவர் அவைகளை மாற்றி அமைக்க முற்பட்டால் தொட்டுத் தொட்டுச் செலவின்ம் அதிகமாகிவிடும். அதனால் வெறும் மனையிடத்தை வாங்கி நம் கனவை உருவாக்கிக் கொள்வது எளிது என்று பின்னால் தெரியவரும்.

காலிமனையை வாங்கி அதில் வீட்டையும் தோட்டத்தையும் நிர்மாணிப்பது என்றால் அதிலும் கஷ்டம் இல்லாமற் போகவில்லை. 'வீட்டைக் கட்டிப் பார், கல்யாணம் செய்துபார்' என்பார்கள். வீட்டை ஒருவாறு எளிதில் முடித்து விடலாம். நிலம் தோட்டச் செடிகளுக்கு ஏற்ற மண்ணையுடையதாக அமையவேண்டுமே! அந்த நிலம் நல்லதாக இருந்தாலும் நிழல் தரும் பழமரம் முதலியவற்றையும், அலங்காரச் செடிகளையும், புல்வெளியையும் உண்டு பண்ணி அவை ஓர் உருவம் கொள்ள நாள் பல செல்லுமே! இந்தக் கால நீடிப்பைக் கருதும்போது ஒருவர், 'பழைய வீட்டையும் தோட்டத்தையும் வாங்கித் தம் சுவைக்கு ஏற்ப அமைத்துக்கொள்பவரே அதிருஷ்டவான்' என்று நினைப்பார். இந்த இரண்டின் தாரதரங்களை ஒருவர் துணிந்து 'இது சிறந்தது, இது சிறந்தது அன்று' என்று கூற முடியாது. 'இக்கரைக்கு அக்கரை பச்சை.'

எனவே, இரண்டு வழிகளைப் பின்பற்றுவோருக்கும் தம் கனவு உருவாவதில் பல இடைஞ்சல்கள் உள்ளன. அநேகமாக நூற்றுக்குத் தொண்ணூறு பங்கு இந்தக் கனவுகள் உருக்கொள்வதில்லை. ஆகவே, எவரும் கனவை விட்டுத் தாம் பெற்றுள்ள இடத்தின் மண்ணுக் கேற்பவும் சீதோஷ்ண நிலைக் கேற்பவும் தோட்டத்தை அமைத்துக் கொள்வதுதான் நலம்.

# 6. இரண்டு பிரச்னைகள்

புதிதாக வீட்டுத் தோட்டம் அமைக்க விரும்பு வோருக்கு அவசியமான சில முதற் குறிப்புக்களை இங்கே தருவது அவசியம். இவர்களுக்கு இரண்டு பிரச்னைகள் ஏற்படுகின்றன. அவற்றுள் ஒன்று நிலத்தைப் பற்றியது; அடுத்தது வீடு அமைக்கும் பிரச்னை. இவை இரண்டும் முன் ஏற்பாடுகள் ஆகும்.

## 1. நிலத்தைப்பற்றிய பிரச்னை

1. மண்ணின் வாசி: வீடும் தோட்டமும் அமைக்க வாய்க்கும் நிலத்தின் மண்ணின் தன்மை எப்படிப்பட்டது என்பது முதற் கேள்வி. அது களி நிலமா, மணல் நிலமா, பாறை நிலமா, அல்லது களர் நிலமா? பின் இரண்டு வகைகளில் ஒன்றாய் இருந்து விட்டால் தோட்டம் போடுவது கஷ்டம். பாறை நிலத்தில் பெரிய மரங்களின் வேர் ஆழத்திற் செல்ல முடியாது; களர் நிலம் என்றால் புல் பச்சை ஒன்றும் அங்கே முளைக்கமாட்டாது. களர் நிலத்தை விளைச் சலுக்கு ஏற்றதாக மாற்றுவதில் அதிகமான செல வும் பிரயாசையும் வேண்டும். மணல் நிலமாயின் களியையும் மட்கையும் சாம்பலையும் சேர்த்து மண்ணின் தன்மையை மாற்றிக் கொள்ளக் கூடும். களி நிலமானால் மழைக்காலத்தில் ஜலம் தேங்கி உபத்திரவத்தைத் தரும்; கோடைக் காலத் தில் மண் கட்டி பட்டுப்போகும்; அதற்கு நீர்ப் பசையே இராது. புல்வெளியை இந்த மண்ணில்

சமாளிப்பது பிரயாசை. களி நிலத்தை மணல் சேர்த்துத் தோட்டத்துக்கு ஏற்றதாக மாற்ற வேண்டும். நிலத்தைப் பற்றிய பிரச்னைகள் இன்னும் பல உள.

சில இடங்களில் மண்ணில் தொத்து நோய்களை உண்டாக்கும் கிருமிகள் இருந்து வரும். வேறு மண்ணில் கறையான் நிலையாகக் குடிகொண்டிருக்கும். இவ்வித மண்ணில் தோட்டம் போடுவதில் கஷ்டம் ஏற்படும்.

2. திசை நோக்கம்: நாம் தேர்ந்தெடுக்கும் நிலம் வீதிக்கு (பாதைக்கு) எந்தப் பக்கம் உள்ளது? அதாவது வீடு எந்தப்புறம் நோக்கி அமையக் கூடியது என்பது ஒரு பிரச்னை. தெற்கும் கிழக்கும் நோக்கிய வாசல்களையுடைய வீடுகள் நல்லவை; வடக்கும் மேற்கும் நோக்கிய வாசல்களையுடைய வீடுகள் சிறந்தவை அல்ல.

மேற்கு நோக்கிய வீட்டின் முன்பக்கம் பிற்பகல் நேரங்களில் வெயில் மிகுந்து அதிகச் சூடாக இருக்கும். செடிகள் வெயிலின் வேகத்தைப் பொறுக்க மாட்டா. மாலையில் செடிகளுக்கு ஜலம் பாய்ச்சினதும் அந்த நீர் நிலத்தொடர்பினால் சூடடைந்து செடிகளைப் பாதித்தலும் கூடும். கோடைக் காற்று நேர் முகமாகச் செடிகளைத் தாக்குகிறது. வடக்கு முகமாக உள்ள வீடுகள் குளிர்காலத்தில் ஊதைக் காற்றால் (வாடையால்) பாதிக்கப்படும். செடிகளில் உள்ள அரும்புகளும் மலர்களும் உதிர்ந்து விடும்.

தெற்கு நோக்கிய வீடுகளின் முன்புறம் உள்ள தோட்டம் செழித்து வளர்வதை எங்கும்காணலாம். செடிகளின்மேல் வெயில் அதிக நேரம் படுவதில்லை. தென்றற் காற்றும் செடிகளை வளர்க்கும் இயல் பினது. கட்டடம் வாடைக் காற்றுக்கு மறைப்பாக இருந்து தோட்டத்தைக் காப்பாற்றுகிறது.

பின் வருபவை கிழக்குப் பார்த்த வீடுகளின் சிறப்புக்குக் காரணமாகும். பிற்பகலில் கடுமை யாக அடிக்கும் வெயில் செடிகளின் மேல் படாமல் கட்டடம் விலக்கி விடுகிறது. கோடைக் காற்றை யும் அது தடுத்து விடுகிறது. இராக்காலங்களில் செடிகளின்மேல் மிகுதியாகப் படிகின்ற பனித் துளிகள் இலை மறைவுகளில் தங்கினல் புழு பூச்சிகளும் முக்கியமாகப் பூஷாண நோயும் செடி களைத் தாக்கி வருத்துகின்றன. கிழக்குப் பார்த் துள்ள தோட்டங்களுக்குக் காலைச் சூரியனுடைய இளவெயில் நன்ருகக் கிடைக்கிறது; வெயில் பட்ட வுடனே நீர்த்துளிகள் மறைந்து விடுகின்றன. செடி களின் ஆரோக்கியம் இதனல் காப்பாற்றப்படு கிறது. ரோஜாச் செடிகளுக்குப் பனித்துளிகள் காலையில் வெளியேறுவது அவசியம்.

எனவே, வீடு கட்ட இடத்தைத் தேர்ந்தெடுப் போர் அந்த இடம் எந்த முகம் நோக்கியுள்ளது என்பதைக் கவனித்தல் அவசியமாகும்.

**3. வடிகால் அமைப்பு:** நிலமானது வீட்டின் பக் கத்திலிருந்து பாதைக்குப் போகப் போகச் சரிவாக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் வீட்டின்

மேல் பெய்து வழியும் மழை நீரும் தோட்டத்தின் மீது பெய்யும் மழைநீரும் சட்டென்று வெளியேறி விடும். சரிவில்லையானால் வீட்டைச் சுற்றி மழை ஜலம் தேங்குதல் இயல்பு. அதனால் புல்வெளி அழிந்துவிடும். நிலம் இயற்கையில் வீதியை நோக்கிச் சரிவாக அமைந்திராவிடில் தோட்டம் போடுவதற்குமுன் நாம் செயற்கையில் சரிவை ஏற்படுத்த வேண்டும்.

பாதையைவிட நிலம் உயர்ந்திருக்கவேண்டும். அப்பொழுதுதான் பாதையில் வழிந்தோடும் மழை நீர் மனைக்குள் நுழையாது. பாதையைவிட மனை உத்தேசமாக 18 அங்குலத்துக்குமேல் உயர்ந்திருக்க வேண்டும்.

4. ஜலவசதி: தண்ணீரின் பிரச்னை அடுத்தபடி கவனிக்கப்பட வேண்டும். 'நிலத்தில் எளிதில் கிணறு வெட்ட முடியுமா? கிணறு ஆழமாகச் சென்று அதிகச் செலவைச் சுமத்திவிடுமா? கிணற்றில் ஆண்டு முழுவதும் நீர் இருக்குமா? அந்த நீர் அதிக உப்பானதா, இல்லையா?' என்றெல்லாம் சோதித்து அறியவேண்டும். உப்பு நீர் தோட்டப் பயிர்களுக்கு அத்துணைச் சிறப்பானது அன்று. நிறமலரும், நறுமலரும் உப்புநீரை விரும்புவதில்லை.

5. வீட்டின் பல பகுதிகள்: வீட்டின் சுற்றுப் புறங்களில் இடம் தாராளமாக இருக்கவேண்டும். முன்றிலில் தோட்டம் போடும்போது நடுவில் பாதை அமையவேண்டும். கார் வைத்திருப்பவர்

களுக்கு அது தங்குவதற்கு ஒரு கொட்டகை வேண்டும். மாடுகளுக்குத் தொழுவம் கொல்லையில் அமைய வேண்டும். கோழிகளை வளர்ப்போருக்கு அப் பறவைகளுக்கு என்று தனியிடம் அவசியம். வீட்டிலுள்ளோர் தொழிலாளிகளாக இருந்தால் தம் தொழில்களைச் செய்யும் பட்டறை (தொழிற் கூடம்) ஓர் பால் அமையவேண்டும். கக்கூஸ் கிணற்றுக்குத் தொலைவில் ஒதுக்குப் புறமான இடத்தில் அமைய வேண்டும். தொழுவத்திலும், வீட்டிலும், தோட்டத்திலும் சேரும் குப்பையை வைக்கப் பிரத்தியேகமான இடம் வேண்டும். இவ்வளவுக்கும் இடம் இருந்து எஞ்சிய பாகத் திலேயே உபவனத்தை அமைக்க முடியும். ஆகவே இடப்பரப்பு அதிகமாக இருத்தல் அவசியமாகிறது.

## 2. கட்டடப் பிரச்னை

சிங்காரத் தோட்டத்தை அமைப்பது வீட்டின் அழகை எடுத்துக் காட்டவும் வீட்டிலுள்ளோரின் ஆரோக்கியத்தைக் காக்கவுமே அல்லவா? அதனல் கட்டடம் அழகாக இருப்பது ஒரு பிரச்னையாகும். வீடு கட்டும் விஷயத்தில் நாம் இரண்டு விஷயங்களை நோக்கவேண்டும். அவற்றுள் ஒன்று கட்டடத்தின் தோற்றம்; மற்ருென்று கட்டடத்துக்கு நாம் உபயோகிக்கும் கல் மரம் முதலிய கருவிகள். இவ்விரண்டினையும் தனித் தனியே ஆராய வேண்டும்.

**கட்டடத்தின் தோற்றம்:** கட்டடம் பார்வைக்கு எப்படி இருக்க வேண்டும் என்பது அவரவருடைய மனேபாவத்தைப் பொறுத்தது. நாம் கட்டடம்

கட்டுவதற்காகச் செலவிடும் தொகையைப் பொறுத்து அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம்; என்றாலும் சீதோஷ்ண நிலை, அவரவருடைய மத சமூகப் பழக்க வழக்கங்களையும் அந்தக் கட்டட அமைப்புப் பெற்றிருத்தல் வேண்டும். நாட்டுப் புறங்களில் கூரை போட்ட ஓரடுக்கு மாடிக் கட்டடம் போதுமானது. நகரமாக இருந்தால் மொட்டை மாடி அமைந்த கட்டடம் நல்லது. நகரத்தில் ஜன நெருக்கத்தால் காற்றோட்டம் மட்டு; காற்றும் அசுத்தப்பட்டிருக்கும். வீட்டிலுள்ளவர் சில மாதங்களில் இராப்பொழுதின் பெரும்பாகத்தை மொட்டை மாடிகளில் கழித்தல் நல்லது.

**காற்றோட்டம்:** கட்டடத்தின் அழகு மட்டும் முக்கியமல்ல. தோட்டத்தின் பயனை அதிலிருந்து வீசும் காற்றாலும் பிறவற்றாலும் வீட்டிலுள்ளோர் பெறவேண்டாமா? ஒரு மனிதனுக்குச் சராசரி எழுபது சதுர அடி வீதம் உள்ளிடம் அமைவது நன்று என்று கட்டட சாத்திரிகள் கூறுவர். அதன் உள் உயரம் ஒன்பது அடிக்குக் குறையக் கூடாது. சூரிய வெளிச்சம் நன்றாகப் படுவதற்கு வெளிச்சக் கூடுகள் (Ventilators) அவசியம். காற்று வெளியே இருந்து உள்ளே வந்து பிறகு மீண்டுபோக நேர்முகமாக (எதிர் எதிராக)ஜன்னல்கள் அமையவேண்டும்.

**கட்டடத்துக்கு அவசியமான உபகரணங்கள்:** கட்டடத்துக்கு வேண்டிய உபகரணங்களுக்கும் உபவன அமைப்புக்கும் என்ன தொடர்பு இருக்கப் போகிறது என்று சிலர் நினைக்கலாம். குறைந்த செலவில் உபகரணங்களை வாங்கி, வீட்டை அழகாக அமைத்

தல் கூடும். கட்டடத்தின் வெளிப் பூச்சு, கூரையின் ஓடுகள் முதலியனவும் தூரப் பார்வைக்கு அழகைத் தரும். கட்டடம் சிங்காரத் தோட்டத்தின் அழகுக்கு அடிப்படைப் பொருளாக இருப்பதனால் வீடுகளுக்கு நாம் உபயோகிக்கும் உபகரணங்கள் அழகுடையனவாக அமைய வேண்டும்.

கட்டடம் செங்கல்லால் அமைந்தால் குளிர் காலத்துக்கு வெப்பமாகவும் வெயிற் காலத்துக்குக் குளிர்ச்சியுள்ளதாகவும் இருக்கும்; நீண்ட காலம் அழியாது. சுண்ணாம்பையும் காரையையும் போட்டுச் சந்து பொந்துகளை மூடிச் சுவர்களுக்கும் தரைக்கும் சிமெண்டை மேற்பூச்சாகப் பூசிவிடலாம். பனங்கைகளையோ, நாட்டு மரங்களையோ சட்டங்களாகவும் வாரைகளாகவும் அமைத்துக் கள்ளிக் கோட்டை ஓடுகளை வேய்ந்து விடலாம். படுக்கை அறை, மத்தியான்னம் காலம் கழிக்குமிடம் இவற்றுக்குத் தட்டோடுகளைப் போட்டு அவற்றின்மீது கள்ளிக்கோட்டை ஓடுகளைப் பரப்பிவிடலாம். கூரையின் இறவானத்தில் சித்திர வேலைப் பாட்டைச் செய்யலாம். இவை எல்லாம் யோசனைகளே. இந்த யோசனைகளின்படி கட்டடம் அமைக்க அதிகம் செலவாகாது. அது பார்வைக்கு அழகாகவும் தோன்றும். உண்மையில் ஆரோக்கியமுள்ளதும் ஆகும். அதன் முன்னர் அமைக்கப்படும் தோட்டம் அக்கட்டடத்தின் பார்வையை இன்னும் அதிகப் படுத்திக் காட்டும்.

## 7. புல் வெளி

வீட்டுத் தோட்டத்தின் முக்கியக் கூறுகள்: வீடுகள் பங்களாக்கள், உத்தியோக சாலைகள், வேறு கட்டடங்கள் இவைகளை எல்லாம் சேர்ந்த, தோட்டங்களுக்கு அமையத் தக்க கூறுகள், 1. மலர்ச் செடிகள் 2. புல்வெளி 3. பாதை 4. அழகமைந்த ஓரங்கள் (Edge) 5. மரங்கள் 6. ஏறு கொடிகள் என ஆறும்.

ஒருவர் வீட்டுச் சிங்கார வனத்தில் இந்த ஆறும் அமைந்தால்தான் தோட்டம் முற்ற முடிந்த சிறப்பினதாகும் என்று சொல்லமுடியாது. இந்த ஆறிலும் வீட்டுக்குச் செல்ல வழி ஒன்று இருந்தே தீரவேண்டும். அதனைத் தவிர்த்த ஐந்தினுள் புல் வெளியே அழகினை மிகுதிப்படுத்திக் காட்டுவதாம். அதற்கு அடுத்தபடியாக உள்ளவை மரங்கள். புல் வெளி, மரங்கள் இந்த இரண்டு பகுதிகளில் ஒன்றேனும் அமைந்தால்தான் தோட்டமும் வீடும் சோபையைப் பெறும். இவை இரண்டும் இன்றி மற்றக் கூறுகள் எல்லாம் அமையினும் கலைக்கண்ணைக் கொண்டு பார்க்கும்போது அந்த இடத்தை உபவனம் என்று கூறமுடியாது.

புல்வெளியின் உபயோகங்கள்: ஒரு நங்கைக்கு உடலழகே சிறந்ததாகும். அவ்வழகில்லையேல் அணிகளால், அழகிய உடையால் அழகு ஏற்பட்டு விடுமா? ஒரு கட்டடத்துக்குப் புல்வெளி இளமங்கையின்

உடலழகைப் போன்றது. மற்றவை அணிகளைப் போன்றவை. அமெரிக்கத் தோட்டக்கலை அறிஞர் எல். எச். பெய்லி (L. H. Baily) என்பவர் தாம் இயற்றிய தோட்ட அமைப்பு (Garden Making) என்ற நூலுள் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

கண்ணுக்குக் குளிர்ச்சியையும், உத்தியோக சாலை முதலிய இடங்களில் வேலை செய்துவிட்டு அலுத்துப்போய் வீடு திரும்பியவரின் மனத்துக்குக் கிளர்ச்சியையும் தருவது பச்சைப் பசேலென்றுள்ள புல வெளிதான். மாலையில் சிறிது நேரம் உட்கார்ந்து பொழுது போக்குவதற்கு ஏற்ற இடம் அது. மாலைச் சிற்றுண்டி விருந்துகளையும், நிலாச் சாப்பாட்டையும் புல்வெளியில் வைத்துக் கொள்வது மனத்துக்கு ரம்மியமாக இருக்கும்.

பெருஞ் செலவு: வீட்டில் சிங்காரத்தோட்டத்தை வைத்துக்கொள்பவருக்கு மற்றக் கூறுகளின் பொருட்டு ஆகும் செலவுகளைவிடப் புல்வெளியைக் காப்பாற்றிவரும் செலவே அதிகமாகும். புல்வெளி பெரியதாக இருந்தால் அதனைப் பாதுகாக்க வென்று தனி ஆள் தேவையாதல் கூடும். வளர்ந்த புல்லை அப்பொழுது அப்பொழுது வெட்டி விடுவதற்குப் புல்வெளி உருளை (Lawn mower) என்ற கருவி இருத்தல் வேண்டும். சிறிய புல்தரையை வைத்துக்கொண்டிருப்பவருக்கு இது அவசியம் இல்லை; கத்தியினால் சேதித்து விடுதல் போதும். எப்படிப்பட்ட திறமை வாய்ந்தவரும் கத்தியினால் சேதிக்கும்போது புல் சமமாக அறுபடாது.

இதனுல்தான் உருளை சிறந்தது என்றோம். கிராப் வெட்டிக் கொள்பவருக்குக் கிராப்மிஷின் எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் புல்வெளிஉருளையும். இரண்டு மாதத்துக்கு ஒருமுறை புல்வெளியின்மேல் உருட்டி அதனை நன்றாக அழுத்திவைக்க ஒரு கல் உருளை (Roler) வேண்டும். டென்னிஸ் கோர்ட்டின் தரை நன்கு அழுந்திச் சமமாவதற்கு நாம் உபயோகிக்கும்உருளையே இதற்கும் போதும்.

இக் கருவிகளைத் தவிர நன்றாக எருவிடுதலும் அவசியம். சில சமயங்களில் செயற்கை உரங்களையும் இடவேண்டியிருக்கும். இவை விலையுயர்ந்தவை அல்லவா?

புல்வெளிக்கு நீர் இறைக்க அதிக நீர் வேண்டும். மற்றச் செடிகளைவிட இதற்கு அடிக்கடியும் இறைக்க வேண்டும். இந்தப் பிரயாசையினுல் புல்வெளியைப் பாதுகாக்கும் செலவு அதிகமாவதில் ஆச்சரியம் இல்லை. சுகத்தை விரும்புவோருக்குச் செலவினம் பெரிதன்று.

நிலத்தின் தகுதி: புல் நன்றாக வளருவதற்கு மணல் கலப்புள்ள நிலம் (Sandy Loam) நல்லது. களி அதிகமாக இருந்தாலும் பாதகமில்லை. மணற் கலப்பு நிலத்தில் நீரை அடிக்கடி ஊற்றவேண்டிய சிரமம் இருப்பினும் புல் நன்கு வளரும். களி நிலத்தில் தழை மட்கையும் மணலையும் சேர்த்து மண்ணின் வாசியை எளிதில் சரி செய்து விடலாம். கெட்டியான சுக்கான் தரையுள்ள பூமியே புல்வெளிக்கு மிகுதியான சிரமத்தைத் தருவ

தாகும். தரை கெட்டியாக இருப்பதனால் வேர்கள் ஆழத்திற் செல்லமாட்டா. ஊற்றும் நீரும் உறிஞ்சப்படுவது நிதானமே. எந்தவிதமான நிலத்தையும் சிறிது பிரயாசையின்மேல் சரிசெய்து விடலாம். அதனால் கவலை வேண்டுவதில்லை.

தயாரிப்பு : புல்வெளி ஏற்பட வேண்டிய இடத்தில் மழைக் காலத்துக்கு இரண்டு மூன்று மாதத்துக்கு முன் நிலத்தை நன்றாகக் கொத்தி 2 அல்லது 3 அடி ஆழம் வரையில் பள்ளமாக்கி மண்ணை அப்புறப்படுத்த வேண்டும். பறித்த மண் வெயிலில் பல வாரம் காய்வதனால் அது புதிய சக்தியைப் பெறுகிறது. வெயிலில் காயவைப்பது எரு வைத்தலுக்குச் சமம் என்பார்கள். ஒரு மழை பெய்தவுடன் பள்ளத்தில் அரையடி உயரத்துக்கு மட்கிய தொழு உரத்தையும் குதிரை லத்தியையும் போட்டு நிரப்ப வேண்டும். முன்பு காயவைத்திருந்த மண்ணைக் கட்டிகள் போகத் தூள்செய்து காய்ந்த புல்லின் வேர்கள் முதலியவற்றைக் களைந்துவிட்டுக் கொத்திய இடத்தில் போட்டுப் பள்ளத்தை மூடிவிட வேண்டும். பிறகு மேலாக 4 அங்குல உயரத்துக்குச் சாம்பலையும் தொழு உரத்தையும் சேர்த்துப் பரப்பி நிலத்தை உழுதுவிட வேண்டும். இதன்பின் இரண்டு மூன்று மழைபெய்து மண் கெட்டிப்பட்ட பிறகு, நிலத்தை உருளையினால் மேலும் கெட்டியாக்கிச் சமம் செய்துவிட வேண்டும். பள்ளமும் மேடுமாக நிலம் இருத்தலே கூடாது. கட்டடத்திலிருந்து போகப்போக நிலம் சிறிது சாய்வாக இருக்கும்படி அமைத்தல் நல்லது. இல்லையேல்

மழைக்காலத்தில் ஜலம் புல்வெளியில் தங்கினால் புல் கெட்டுவிடும்; புல்வெளியின் மையம் மேடாக இருந்து சுற்றிலும் போகப் போக நிலம் சாய்வாக அமைய வேண்டும். புல்வெளியின் ஓரங்கள் ஆறு அங்குல உயரச்சுவர்களினால் காப்பாற்றப்பட வேண்டும். இந்தச் சுவர்களின் உயரத்துக்கும் இரண்டோர் அங்குலம் புல்நிலம் உயர்ந்திருக்க வேண்டும்.

நடவு: நடவில் பலவகை உண்டு. புல் விதைகளை விலைக்கு வாங்கி விதைப்பது ஒரு முறை. தென்னாட்டில் இம்முறை அநேகமாக வெற்றிபெறுவதில்லை. எனவே புல்லை நடுவதுதான் நலம்.

நடுவதற்கேற்ற புல் பலவகைப்படும். ஆற்றோரங்களிலும் ஏரி, படுகை முதலிய இடங்களிலும் காணப்படும் புல் நல்லது. அறுகம்புல், துத்திரி, செல்லப்பிள்ளை என்பன ஏற்றவை. இவ்வகைப் புல் கணுக்களையுடையது. ஒவ்வொரு கணுவும் வேரூன்றித் தனிச்செடியாக வளரக்கூடியது. மூன்று கணுக்களையுடைய புல்லின் துண்டுகளை நிறைய எடுத்துக் கொள்ள வேண்டும். அவற்றை ஈரநிலத்தில் பரவலாக வைத்து மேலே மிருதுவான மண்ணைப் போட வேண்டும். நிலம் பூராவும் இப்படிச் செய்து பூவாளியினால் ஜலத்தை நிதானமாகத் தெளிக்க வேண்டும். கணுக்கள் வேர் கொள்ள பத்து நாள் செல்லும். இதுவே சிறந்த முறை.

இதனையொத்த மற்றொரு முறையும் உண்டு. படுகைகளிலும் ஆற்றோரங்களிலும் புல் முளைத்திருக்கும் இடங்களைக் கண்டு அங்கே உள்ள புல்லை

மண்ணோடு பாளம் பாளமாகப் பெயர்த்துவந்து நாம் தயாரித்துள்ள நிலத்தில் பதிக்க வேண்டும். இங்ஙனம் பதித்தபின் இடைவெளிகளில் புல்லின் கணுக்களை மேலே கூறியபடி வைத்து மண்போட்டு மூடிவிடவேண்டும். அநுபவமில்லாதவருக்கும் இந்த முறையினால் வெற்றி கிடைத்திருக்கிறது. புல் விரைவில் வளருவதற்கு இதுவே சிறந்த வழி.

வேறொரு வழியும் உண்டு: ஒரு பெரிய பாத்திரத்தில் புதிய சாணம், மரச் சாம்பல், வண்டல்மண் இவைகளைச் சம அளவில் குழம்பாகக் குழைத்து வைத்துக்கொள்ள வேண்டும். அக்குழம்பில் கணுக்களோடு கூடிய புல்லின் துண்டுகளை நிறையக் கலந்துகொள்ள வேண்டும். இக் கலவையை, புல்வெளிக்காகத் தயாரித்திருக்கும் இடத்தில் 4 அல்லது 5 அங்குலப் படலம் வரும்படி ஒழுங்காகப் பூசி வரவேண்டும். பூசியவுடனே வைக்கோலைப்போட்டு இடத்தை மூடிவிடலாம். சிறிய இடங்களுக்கே இம்முறை ஏற்றது. புதிய குதிரைலத்தியை மேலாக இடுவது சென்னை முதலிய இடங்களில் அநுபவ முறையாகும். புல் நடும் வேலைக்கு மாலை வேளையே ஏற்றதாகும்.

நட்டபின்: பள்ளம் தோண்டுதல் மே அல்லது ஜூன் தொடக்கமாக இருந்தால் நடுகையைச் செப்டம்பர் இறுதியில் செய்யவேண்டும். பின் வருவதெல்லாம் மழைக்காலம். புல் நன்கு வளரக்கூடும். இடையிடையே புல் முளையாமல் இடம்விட்டுப் போயிருந்தால் அங்கங்கே புதியவற்றை நட்டுக்

காலி இடங்களை நிரப்பவேண்டும். மூன்று மாதம் உத்தேசமாகக் கழிந்ததும் நவம்பரில் நீண்ட மெல்லிய இரும்புப் பட்டையைக் கொண்டு புல்லை எல்லாம் ஒழுங்காகச் செதுக்கி வரல் வேண்டும். தரை மட்டத்தில் பட்டையை வீசினால் மேலாகப் புல் நுனிகள் அறுந்து வந்துவிடும். இலை குறைந்தால் வேர்களுக்கு நிலத்திலிருந்து உணவு அதிகமாகக் கிடைத்துப் புல் நன்றாக வளரக்கூடும்.

வெட்டி முடிந்ததும் நன்றாக நிலம் உறிஞ்சும்படி ஜலத்தைத் தெளித்துக் கல் உருளையினால் புல்வெளியை அழுத்திக் கெட்டிப்படுத்த வேண்டும். மேற்கொண்டு மழைக்காலத்தில் பிரதி மாதமும், மற்றக் காலங்களில் 50 அல்லது 60 நாளுக்கு ஒரு முறையும் புல்லைக் கத்தரிக்க வேண்டும். இரண்டு மாதத்திற்கு ஒருமுறை கல் உருளையினால் புல் தரையைக் கெட்டியாக்க வேண்டும்.

எருவிடுதல்: புல் வெளிக்கு வருடம் ஒருமுறை தவறாமல் எருவிட வேண்டும். மட்கிய தொழு உரமே ஏற்றது. அதனை வெயிலில் உணர்த்திப் பொடிசெய்து நிலம் முழுவதும் தூவிவிட வேண்டும். தூவினதும் ஜலம் தெளிக்க வேண்டும். சில நாளில் எரு உள்ளே சென்றுவிடும்.

புல்வெளி நிரம்ப எருச்சத்தை விரும்புவது. போதிய அளவில் எரு இல்லையேல் கோடையில் அதைச் சமாளித்தல் கஷ்டம். இதனை நோக்கி அதற்குச் செயற்கை உரத்தை இடுவது சிறந்ததாகும். ஸூப்பர் பாஸ்பேட் (Super Phosphate)

அல்லது ஸல்பேட் ஆவ் அம்மோனியா (Sulphate of Ammonia) சிறந்த செயற்கை எருக்களாகும். இவற்றுள் ஒன்றை வருடம் ஒருமுறை மேலாகத் தூவி ஜலம் தெளிக்க வேண்டும். இதனை மழைக்காலத்திலேயே மேற்கொள்ளவேண்டும். செயற்கை உரத்தை உபயோகித்தாலும் தொழு உரத்தைக் கைவிடலாகாது. செயற்கை உரங்கள் புல்லுக்குப் போதையைத் தருவனவே ஒழிய ஆகாரமாகமாட்டா.

விரோதிகள் : புல் தரைக்குக் களைச்செடிகள், புழு பூச்சிகள், அருகிலுள்ள நிழல்தரும் பெரிய மரங்கள், கோரைப்புல், கறையான் விரோதிகள் ஆம். அர்ஸனேட் ஆவ் லெட் (Arsenate of Lead) என்ற மருந்தை மணலுடன் கலந்து நிலம் நெடுகத் தூவிய உடனே ஜலத்தைத் தெளித்துவிட்டால் அவ் விஷத்தின் காரணமாக மண் புழுக்கள் ஒழிந்து விடும். இந்த மருந்து மனிதருக்கும் கடும் விஷமாதலினால் இதனைக் கையாளுவோர் அதி ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். கார்பன் டி ஸல்பைட் (Corbon Di Sulphide) என்ற மருந்தைக் கறையான் புற்றில் ஊற்றினால் கறையான் ஒழிந்து விடும். வீட்டுத் தோட்டத்துக்குப் புல்வெளி அமைப்பு அவசியம். ஒருமுறை சிரமப்பட்டுப் புல் வெளியை அமைத்துவிட்டால் பிறகு 5, 6 வருடம் அது செழுமையாக இருத்தல் கூடும். அதனைக் காப்பாற்றுவதற்குக் கலைத் திறமை அவசியம்.

# 8. மரங்கள்

புல்வெளிக்கு அடுத்தபடியாக வீட்டுத் தோட்டத்தை அழகு படுத்துவன மரங்களே. ஒரு வீட்டுக்குச் சிங்காரத் தோட்டங்கூட வேண்டியதில்லை; இரண்டொரு மரம் மாத்திரம் இருந்துவிட்டால் கட்டடத்துக்குத் தனியழகு ஏற்பட்டுவிடும். ஆனல் அந்த மரங்கள் ஓர் ஒழுங்கில் அமைய வேண்டும்.

மரங்கள் பசுமையான காட்சியை வழங்குகின்றன. வெப்பத்தைத் தணித்து வீட்டிலுள்ளார்க்குத் தண்மையைத் தருகின்றன. மலர் மரமாயின் அதன் நிறம் கட்டடத்துக்கு எடுப்பாகத் தோன்றும். பாரிஜாதம், பன்னீர், மரமல்லிகை, மகிழ், நாகலிங்கம் முதலிய மலர் மரங்கள் நல்லன. வெயில் வேளையில் பொழுது போக்குவதற்கு மரநிழல் ஏற்ற இடமாகும்.

புதிய நிறுசுகள்: மரங்களில் எத்தனையோ வகைகள் உள்ளன. பெரிய பாதைகளின் ஓரங்களில் வைக்கத் தகுந்தவை ஒரு ரகம்; அடவியில் தாமாக வளர்ந்திருக்கும் ராட்சச மரங்கள் மற்ருெரு ரகம். மேட்டு நிலங்களிலும் ஏரிகளிலும் காணப்படும் வெள்வேல், கருவேல் போன்ற முள் மரங்கள் பிறிதொரு ரகம். இவைகளே அல்லாமல் சிங்காரத் தோட்டங்களில் பயிர் செய்யத் தக்க மரங்களும்

இருக்கின்றன. இங்கே கூறப்படும் விஷயமெல்லாம் உபவன மரங்களைப் பற்றியதே.

இவற்றுள், நம் நாட்டுக்கே உரிய அசோகு, அத்தி, மகிழ், புன்னை, பாரிஜாதம், வேம்பு முதலியன ஒருவகை; நம் நாட்டவை அல்லாமல் வேறு நாடுகளிலிருந்து கொண்டுவரப் பெற்று இங்கே விருத்தியாகி வருபவை மற்றொரு வகை. இந்தப் புதிய வகையில் மலர் மரங்களும் உண்டு; மலர் இல்லாதனவும் உண்டு. இவைகளுக்கெல்லாம் தமிழில் பெயர்கள் இல்லை. எல்லாம் வேறு நாட்டுப் பெயர்களே. இவைகளுள் பலவற்றைப் பெரிய பங்களாக்களிலும் பெரிய பொதுத் தோட்டங்களிலுமே பார்க்கலாம். இவை தென்னுடெங்கும் பரவ வேண்டும்.

மனைக்கட்டும் மரங்களும்: வீடு கட்டுவதற்குப் புதிதாக நிலம் வாங்கும்போது அங்கே மரங்கள் இருந்தால் ஏற்ற இரண்டொன்றைவெட்டாமல் சிங்காரத் தோட்டத்துக்காக வைத்துக் கொள்ளலாம். நாம் வைத்துக்கொள்ளும் மரங்கள் கட்டடம் முடிந்த பின் தகுந்த இடத்தில் அமைந்தவை ஆகுமா என்று பார்த்துக் கொண்டு, பாதகமாக உள்ளவைகளையும் வேண்டாத பிறவற்றையும் வெட்டி விடலாம்.

இடப் பிரிவு: வீட்டில் தோட்டம் போடும் பாகம் போக வெளியிடமும் இருக்கலாம். முன்புறத்திலேயே தோட்டம் அமைவது இயல்பு. இருசிறகுகள் காலியாக இருத்தல் கூடும். இந்தக் காலி

யிடத்தில் சிறு செடிகளையோ புல் வெளியையோ உண்டாக்கலாம் என்றால் அங்கே அவைகளுக்குப் பார்வை ஏற்படாது. இத்தகைய இடங்கள், காலி நிலப் பகுதி (Wild Portions) எனப்படும். பெரிய மரங்களை இங்கே வைக்கலாம்.

புல்வெளிக்கும் மலர்ச்செடிகளுக்கும் அருகிலோ அவற்றின் நடுவிலோ மலர் மரங்களை (Flowering trees) வைக்கக் கூடாது. அதனால் செடி மலர்களின் கூட்டழகு (Mass effect) கெட்டுவிடும். அந்த இடங்களில் இரண்டோர் இலை மரங்களை (Foliage trees) வைக்கலாம். ஆனால் நாம் வைக்கும் மரங்கள் மலர்ச்செடிகளுக்கு நிழல்தரக் கூடாது. மலர்ச்செடிகளுக்கு வெயில் அதிகம் படாவிட்டால் அவை சரிவர வளர்வதில்லை; மலர் பிடிப்பும் குறைகிறது. நிறத்திலும் வடிவிலும் அந்த மலர்கள் மோசமாகவே இருக்கின்றன.

காலியிடப் பகுதியில் மலர் மரங்களைப் பயிர் செய்யவேண்டும். அந்த இடத்துக்கு நிறம் பொருத்தமானது. மலர்கள் கீழே உதிர்ந்து தரையும் பல நிறங்களோடு அழகாகத் தோன்றும்.

முதல் ஏற்பாடுகள்: மரம் நடுவதற்கு மழைக காலமே ஏற்ற பருவம். செடியை நட்டபின் அதற்கு இரண்டுமாதம் நீர் அதிகமாக வேண்டும்; ஆகாயத்தில் ஈரப்பசை இருந்து வரவேண்டும்; அதிக வெயில் கூடாது. இந்த லட்சணமெல்லாம் மழைக்காலமுதல் சில மாதங்களே இருந்து வருகின்றன.

ஆவணியில் மரம் நடுவதை எதிர்நோக்கி இரண்டொரு மாதத்துக்கு முன் குழி தோண்டி வைக்க வேண்டும். வெயில் படப்பட அந்த இடத்துக்கு வலிமை ஏற்படுகிறது. பறித்த மண்ணை அருகில் சேர்த்து வைக்கலாம். குழி மூன்றடிச் சதுரமும் அவ்வளவே ஆழமும் இருத்தல் போதும். பாறை நிலமாயின் ஆறடி ஆழம் அவசியம்.

நடுகைக்கு ஒரு வாரமுன் நல்ல மண்ணையும் எருவையும் சேர்த்துக் குழியிற் கொட்டி அதை இறுக மூடிவிட வேண்டும். இந்த இடமே பாத்தி எனப்படும்.

விதையைக் கொண்டு செடியை உண்டாக்குவதற்கு நீண்ட காலம் பிடிக்கும். ஆகவே மரக் கொம்பையோ, வேறிடத்தில் தயாராக உள்ள செடியையோ கொண்டு வந்து நடுவது சிறந்த முறை. பழமரமாக இருந்தால் ஒட்டுக் கன்றுகளையே நடவேண்டும். ஒட்டுமரம் விரைவில் வளரும்; அதிக இடத்தை அடைத்துக் கொள்வதில்லை; அதன் பழங்கள் சிறந்தவையாக இருக்கும்; பலனளிப்பும் விரைவில் ஏற்பட்டு விடும்.

மண்ணுக்கு ஈரப் பிடிப்பு அதிகமாக உள்ள இடங்களில் பாத்தியானது தரை மட்டத்துக்குமேல் இரண்டங்குலம் உயரமாக இருக்க வேண்டும். ஈரப் பசை குறைவான இடங்களில் பாத்தி தரை மட்டத்திலும் ஆழமாக அமைய வேண்டும். அப்பொழுது நாம் ஊற்றும் நீர் பாத்தியில் தேங்கி நின்று நிதானமாக மண்ணினுல் உறிஞ்சப்படும்.

நடுகை: செடியைப் பெயர்த்தெடுத்துப் போய் நடுவதாக இருந்தால் முதலில் தரையை ஈரமாக்கிக் கொண்டு மண்ணை மெதுவாகத் தோண்ட வேண்டும். தோண்டும்போது பக்க வேர்கள் அறுபடாத படி செடியை எடுக்கவேண்டும். எடுத்த செடியை, முன்னமே தயாராக வைத்திருக்கும் பாத்திக்கு எடுத்துப்போய் அங்கே புதைக்கவேண்டிய ஆழத் தில் மண்ணைப் பறித்து நட்டுவிட வேண்டும். நட்ட தும் செடியின் தண்டை ஒட்டி மண்ணை நன்றாகக் கெட்டித்து விடவேண்டும்.

மாலைநேரமே நடுகைக்கு ஏற்றது. மப்புமந் தாரமாக இருந்தால் காலை வேளையும் நல்லதே.

பாதுகாப்பு: இளஞ்செடிகளுக்கு மூன்று வகை யில் தீமை வரக்கூடும். இவற்றை அறிந்து தக்க பாதுகாப்பு முறைகளை நாம் கையாள வேண்டும்.

1. நட்ட இரண்டொரு வாரம் செடியின் மீது வெயில் படலாகாது. அதன் பொருட்டு, நட்டதும் அதற்கு நிழல் தருவது அவசியம். தழைகள் நிறைந்த மரக்கொம்பையேனும் பனையோலை அல் லது தென்னங் கீற்றுகளையேனும் நிழலுக்காக உபயோகித்துக் கொள்ளலாம்.

2. பெருங்காற்றடித்தால் செடி விழுந்துவிடும். காற்றிலிருந்து அதனைக் காப்பாற்றும் பொருட்டு அதன் அருகில் ஒரு கழியை நட்டுச் செடியைக் கழி யோடு தளர்த்தியாகக் கட்டிவைக்கவேண்டும். வாழைநாரைக் கொண்டு எட்டு என்ற எண்ணின் வடிவத்தில் கட்டுப் போடுவது நல்லது. இதனால்

செடியின் பட்டை தேய்ந்து போவதில்லை. செடி பெரிது ஆக ஆக்க் கட்டுக்களை அதிகமாக்கிச் செல்ல வேண்டும்.

3. ஆடுமாடுகள் செடியைக் கறித்து விடாதபடி அதனைச் சுற்றிலும் வேலிபோட்டு வைக்க வேண்டும்.

இந்த மூன்றும் அல்லாமல் பாத்தியில் புல்லோ, பிற களைச் செடியோ இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

மரத்தின் ஒழுங்கு: அடித்தண்டு நேர்மையாக வளர்ந்தால்தான் மரம் அழகாக இருக்கும். ஐந்தாறு அடி உயரத்துக்குள் அடிமரத்தில் பக்கக் கிளைகள் கிளைக்காதபடி முதலிலிருந்தே கவனித்துக் கொள்ளவேண்டும். புதிய கப்புக்கள் அடித்தண்டில் தோன்றுமானால் தோன்றும் போதே அவற்றைக் கிள்ளி எறிந்து விட வேண்டும்.

காயம்பட்டால் சிகிச்சை: நாம் எவ்வளவு ஜாக்கிரதையாக இருந்தாலும் ஒவ்வொரு சமயம் பெரும் புயலோ சூறைக் காற்றோ திடீரென்று தோன்றி மரக்கிளைகளை முறித்து விடுவதுண்டு. ஒடிந்த இடத்தில் மரத்திற் காயங்கள் ஏற்பட்டால் உடனே அவைகளுக்குச் சிகிச்சை செய்ய வேண்டும். ஒடிந்த கிளையைக் கைரம்பத்தைக் கொண்டு, அது வேறு கிளையுடன் ஒட்டியிருக்கும் இடத்துக்குப் பக்கத்தில் அதிக நீளம் விடாமல் அறுத்துவிட வேண்டும். அறுக்கும்போது மரத்தின் பட்டை உரிந்து மேலும் உள்ள பாகத்துக்குத் தீமை வரலாகாது. அறு

பட்ட இடத்தின் வழியாக மரத்தின் கூறு (Sap) வெளிப்பட்டு மரத்தின் திறல் (Vitality) கெட்டு விடும். அந்த இடத்தைப் பூஷாண்நோய்கள் பற்றிக் கொள்ளவும் கூடும். ஆகவே, களிமண்ணையும் சாணத்தையும் ஒன்று சேர்த்துப் பிசைந்து காயத்துக்கு அப்பி விடலாம். தார் (Tar) என்னும் கீலெண்ணெய் கிடைக்குமானால் களியை அப்புவதற்குப் பதிலாக அதனைப் பூசி விடலாம். இது சிறந்த மருந்தாகும்.

மரம் நடுதலைப் பற்றி நாம் முக்கியமாகத் தெரிந்து கொள்ள வேண்டியவை இவ்வளவே.

# 9. பாதைகள்

பலவகை: வீட்டுத் தோட்டங்களுக்கும் பொது உபவனங்களுக்கும் அழகைத் தரும் பிரிவுகளில் பாதை ஒன்று. பெரியஉபவனங்களுக்கும், வீட்டுச்சிங்காரத் தோட்டங்களுக்கும் பாதைகள் பொதுவானவை; என்றாலும் அவற்றுள் பலவகை உண்டு. வண்டிகள் செல்லக் கூடியவை (Drives) ஒரு வகை. கால் நடையாக மட்டும் சென்று வரக்கூடியவை (Walks) மற்றொரு வகை. தோட்டத்தின் பலவேறு பாகங்களிற் புகுந்து வேலை செய்யவும், காட்சிகளின் ஒவ்வொரு பகுதியையும் கவனிக்கவும் வசதியாக உள்ள காலடிப்பாதைகள் (Foot paths) மூன்றாம் வகை. இம் மூன்றும் பாதைகள் என்ற பிரிவைச் சேரும்.

வீட்டுத் தோட்டங்கள் பலவற்றை நீங்கள் கண்டிருக்கலாம். அவைகளில் பெரும்பாலானவற்றுள் பாதைகள் வெளிவாசலண்டை தொடங்கிக் கட்டடம் வரையிற் சென்று, மறுபடியும் வளைவாகவே வந்து முன்பு தொடங்கிய இடத்தில் முடியக்கூடியவைகளே. இவை வட்டப் பாதைகளாகும். இவை அமைந்த வீடுகளுக்கு முன்வாசல் ஒன்றே.

சில வீடுகளுக்கு இரண்டு முன் வாசல் உண்டு. இத்தகைய வீடுகளில் வண்டி வாகனங்கள் ஒரு வாசலின் வழியாக உள்ளே சென்று வளைவாகத் திரும்பி மறுவாசலின் வழியாக வெளியே செல்லக்

கூடிய வகையில் பாதை அமைந்திருக்கும். இப்படிப்பட்ட பாதைகள் அரைவட்டப்பாதைகளாகும்.

இந்தப் பாதைகளில் வட்டப் பாதை அமைந்த வீட்டுத் தோட்டங்களில் பாதையின் வட்ட மையத்தில் இல்லத்துக்கு முன்புள்ள வெளியிடத்தில் சிறிய புல்வெளியோ, மலர்ச் செடிகளோ வைக்கப்பட்டிருக்கும். இந்த இடைவெளியின் அலங்காரம் எப்படி இருக்க வேண்டும் என்று கூறுவதற்கில்லை. அவரவர்களுடைய சுவையைப் பொறுத்தது அது. வெறும் புல்வெளியை விரும்புவோர் நாஸுக்கான நாகரிகம் வாய்ந்தவர் என்று ரஸிகர்களிற்சிலர் கருதுகிறார்கள். இந்தப் புல்வெளியைச் சுற்றிலும் செங்கல் அமைப்போ இரண்டொருவகைச் செடிகளோ காணப்படுவதும் உண்டு. வீட்டுக்கு முன் உள்ள அழகிய பலநிறச் செடிகளின் தொகுதியே சிறந்தது என்று எண்ணுவோரும் இருக்கிறார்கள். இடம் பசுமையாக இருத்தல் போதும் என்று நினைத்து இஷ்டமான செடிகளை வைப்பவர் சிலர். இந்தக் காலியிடத்தின் மையத்தில் அழகிய உருவச் சிலையை வைத்து அழகு படுத்துவோரும் இருக்கிறார்கள்.

வளைபாதைகள்: வெளி வாசலுக்கும் கட்டடத்துக்கும் தூரம் அதிகமாக இருந்தால் பாதையைப் பாம்பைப்போல் வளைவாக அமைத்தல் மொத்தத்தில் மிகுதியான அழகைக் காட்டும். ஆனால் நேர் பாதைகளை விட வளைபாதைகளை நிர்வகிப்பதில் சிரமமும் செலவும் அதிகம். மழைக்காலத்தில் வளைவுள்ள

இடங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்படக் கூடும். ஆகவே இக்காலத்தில் வளைபாதை அமைப்பு மறைந்து வருகிறது. எவரும் நேர்மையான பாதை களையே ஆதரித்து வருகிறார்கள்.

பாதைகளை அமைத்தல். பாதையை அமைப்பதற்கு என்ன என்ன உபகரணம் வேண்டுமென்பது அவ ரவருடைய விருப்பத்தைப் பொறுத்தது. ஸிமெண்ட் பாதைகள், வெறும் காரையினால் ஆன பாதைகள், செங்கல் அல்லது கடப்பைக் கல்லைத் தளமாகப் பெற்றுள்ள பாதைகள் எல்லாம் சிறந்தவை என்று ஒருவர் கருதலாம். ஆனால் இவைகளை அமைப் பதற்குப் பொருட்செலவு அதிகமாகும். சாதாரணப் பாதைகளுக்கு வேண்டிய உபகரணங்கள் செங்கல் அல்லது கருங்கற்களின் துண்டுகள், சரளைமண் அல்லது செம்மண், மணல் என்பனவாம். இம் மூன்றையும் கொண்டு பாதையை லகுவில் அமைக்கலாம். அந்த அந்த ஊரில் கிடைக்கக் கூடிய உபகரணப் பொருள்களைக் கொண்டு பாதை அமைப்பதே எளிய முறையாகும்.

நிலத்தை ஆறு முதல் எட்டங்குல ஆழம் கொத்திவிட்டு மண்ணை எடுத்துவிட வேண்டும். பிறகு, முன்னரே தயாரித்து வைத்திருக்கும் பொடிக் கற்களை அந்த இடத்தில் சமமாகப் பரப்பி மட்டப் பலகையைக் கொண்டோ, கல்லுருளையைக் கொண்டோ நன்றாக அழுத்திவிட வேண்டும். அழுத்திச் சமப் படுத்துவதற்கு முன் நிறைய ஜலம் தெளித்து அந்த இடத்தை ஈரமாக்குவது அவசியம்.

மட்டப் பலகையைச் சில இடங்களில் 'திமிஸ்கட்டை' என்பார்கள். இங்ஙனம் கற்பரப்பைக் கெட்டிப் படுத்திய பிறகு சரளை அல்லது செம்மண்ணை இடுக்குகள் தெரியாதபடி நிரவி நீர்விட்டு உருளையினாலோ, திமிஸ் கட்டையினாலோ மறுமுறை கெட்டிப்படுத்த வேண்டும். தரை கெட்டியான பின் ஈரம் இருக்கும் போதே அதன்மேல் மணலை அரையங்குல உயரம் பரவலாகத் தூவி மறுமுறை உருளையை ஓட்டிவிட வேண்டும். இதுவே உறுதியான பாதை. மழைக் காலத்தில் மண் காலில் ஒட்டிக் கொள்ளாமல் இருக்கவே பாதைகளில் மணலைப் போடுகிறார்கள். அகலம் ஆறடிக்குக் குறைந்தால் பாதை அழகாக இராது ; வசதியாகவும் இராது

பாதையின் நடுவிடம் மேடாகவும் இரு சிறகுகளும் சரிந்தும் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் மழைநீர் நடுப்பாதையில் தேங்காமல் ஓரங்களுக்கு ஓடிவிடும். ஓரங்களிற் சிறிய கால்வாயை அமைத்து அவைகளின் வழியே ஜலத்தை வெளியேற்றி விடலாம்.

பாதையின் ஓரங்கள் : பாதைகளின் ஓரங்களை அழகு படுத்துவது உபவனக் கலையின் சிறந்த அம்சமாகும். இவ்வித அழகு பாதைக்கும் சிங்காரத் தோட்டத்துக்கும் ஏற்புடையதாக அமைய வேண்டும். பாதையானது புல்வெளியின் ஊடே செல்வது போற் காட்டுவதுதான் சிறந்த அழகு என்பர் கலையறிவாளர். அதன் பொருட்டுப் பாதையின் இருபுறமும் மூன்றடி அகலத்தில் புல்லை

வளர்த்து அதன் தோற்றம் புல்வெளி போற் காணப்படும்படி அமைக்க வேண்டும் இந்தப் புல்வெளியின் ஓரம் ஒன்றில் நெடுக மலர்ச் செடிகளையோ, இலைத் தாவரங்களையோ ஒழுங்காக நட்டு வளர்க்க வேண்டும். பாதை, அதன் இருபுறமும் மூன்றடி அகலப் புல்தரை, அவற்றுக்கும் அப்பால் செடிவரிசை : இந்த அமைப்பில் ஏற்படும் அழகு எடுப்பாக இருக்கும். செடிகளை நிலத்தில் வளர்க்காமல் சட்டிச் செடிகளாக வைத்திருப்போர் ஒரு சிலர். புல்வெளியும் பாதையும் சேரும் ஓரத்தில் நெடுகச் செங்கற்களை நட்டு அவைகளுக்குச் சுண்ணாம்பு அடித்து வெண்மையாக்கிக் காட்டுவது சிலருடைய வழக்கமாக உள்ளது.

கொடிப் பந்தல் : பாதையின் குறுக்கே சில இடங்களில் கொடிப் பந்தல்களை அமைப்பது ஒருமுறை. மூங்கிற் பிளாச்சுகளையோ இரும்புக் கம்பிகளையோ பாதையின் குறுக்கே எழெட்டு அடி உயரத்தில் வளைவாக அமைத்து ஓரடிக்கு ஒன்றாக நான்கு ஐந்து வளைவுகளை உண்டாக்க வேண்டும். இவற்றின் மீது படர் கொடிகளைப் படர விடுவார்கள். பன்னிறப் பூங்கொடிகளை வைப்போர் ஒரு சிலர். வெறும் பச்சைக் கொடிகளை வைப்போர் சிலர். வெளிவாசலில் பாதை தொடங்கும் இடத்தில் போகென் வில்லா போன்ற கொடிகளை வளைவு அலங்காரமாக வைத்திருப்பதை நம்மிற் பலர் பார்த்திருக்கலாம். இந்தக் கொடி இவ்விதமான உத்தேசத்துக்குச் சிறந்ததாகும்.

தூண்கள் : பாதையின் ஓரத்தில் இருபுறத்திலும் சில கஜ தூரம் இடைவெளி விட்டு நேர் நேராகத் தூண்களைச் செங்கல்லால் கட்டி வெள்ளையடித்து அவற்றின் மேல் அழகிய உருவம் அமைந்த சட்டி களை வைத்திருப்பார்கள். இந்தச் சட்டிகளிலே கண்ணைக் கவரும் செடிகள் நாற்புறமும் தொங்கிக் கொண்டிருக்கும். இந்த அழகைச் சிலர் விரும்பக் கூடும். ஒரு பாதை மற்றொன்றோடு கூடும் சந்தியில் சிங்காரத் தோட்டங்களில் இவ்வித மலர்த் தூண் களைக் காணலாம்.

பாதையும் படிகளும் : வீதியிலிருந்து கட்டடம் தொலைவில் உயரமான இடத்தில் அமைந்திருக்கு மானால் அக்கட்டடத்தை நோக்கிச் செல்லும் உப வனப் பாதை ஏற்றமாக அமைந்திருத்தல் இயல்பு. இவ்விதப் பாதைகளுக்கு அங்கங்கே படிகளை அமைத்தால் பாதைக்குத் தனி அழகு ஏற்படும். இடையிடையே படிகள் அமைந்த பாதையை மலைப் பிரதேசங்களில் உள்ள பங்களாக்களில் காணலாம்; தாழ்ந்த பிரதேசங்களில் (Plains) காண்டல் அரிது. படிப் பாதைகள் அழகைத் தருவன வேனும் அவற்றைச் சமாளிப்பது கஷ்டம். மழைக் காலத்தில் படிகள் சரிந்து போகாதபடி ஜாக்கிரதை யாக அவற்றை அமைக்க வேண்டும்.

படிகளுக்கு வேண்டிய பொருள்கள் அமைப்பு முதலியன. படிகளைப் பலகைக் கற்களால் அமைக்கலாம். பல கைக் கற்களுக்குப் பதிலாக ஸிமெண்ட் படிகள் விலைக்குக் கிடைத்தால் கூடும். செங்கல்லினாலும் அமைத்துக் கொள்ளலாம்.

படிகளின் ஓரங்கள் கூர்மையாக இருப்பது அபாயகரமாகும். அவை முப்பட்டை வடிவின வாகவோ வளைந்தவையாகவோ அமைந்தால் கால் இடறி ஒருவர் விழுந்து விட்டாலும் அதிகமாகக் காயம் படாது. ஸிமெண்ட் படிகள் இங்ஙனம் இரண்டு வடிவங்களோடு இருப்பதை நாம் பலவிடங் களிலே பார்த்தல் கூடும்.

படிகளுக்கு உபயோகிக்கும் பலகைக் கற்களை முன்புறம் இரண்டு மூன்று அங்குலம் நீட்டிக்கொண் டிருக்குமாறு பரவுவதுண்டு. இதனால் ஒவ்வொரு படியிலும் குகை போன்ற அறைகள் காணப்படக் கூடும். இத்தகைய படிகள் காலிடறுதலுக்குக் காரண மாகலாம்; பாம்பு தேள் முதலியவை இவற்றின் சந்துகளில் வாசம் செய்யலாம். ஆகையால் இப் படிகள் ஏற்றவை அல்ல.

படிகளின் உயரமும் அகலமும் (Rises and Treads) பற்றி ஒரு விஷயத்தை நாம் அறிந்து கொண்டு அவற்றை அமைக்க வேண்டும். படியின் உயரம் குறைவாக இருந்தால் அகலம் அதிகமாக இருக்க வேண்டும்; உயரம் அதிகமானால் அகலம் குறையலாம். உயரம் குறைவாக உள்ள படிகளின் மேல் நடந்து செல்பவர் கால்களை எட்டி வைத்து நடத்தல் கூடுமாகையால் அவற்றை அகலமாக அமைப்பது அவசியம். உபவனங்களுக்கு உயர மான படிகள் ஏற்றவையல்ல.

**படிகளின் அலங்காரம்:** படிகள் தொடங்கும் இடத் திலும், முடியுமிடத்திலும், இடையிடையே வளைவு

தோன்றுமிடத்திலும் இருபுறமும் நேர் நேராகத் தூண்களைக் கட்டி வைப்பது ஒருவித அலங்காரமாகும். இத் தூண்கள் பல வடிவங்களில் அ[illegible]க அமைந்திருக்கும். சில சமயங்களில் இவைகளின் மேல் சட்டிச் செடிகளைப் பயிர் செய்திருப்பார்கள். தூண்களுக்குப் பதிலாகச் சட்டிச் செடிகளைப் படிகளின் இரு ஓரங்களில் வைப்பதும் உண்டு.

முன்வாசல்: பாதைகளைப் பற்றித் தெரிந்து கொண்டோம். பாதை தொடங்குமிடத்து முன் வாசல் எவ்விதம் இருத்தல் வேண்டும் என்றும் அறிந்துகொள்ள வேண்டும். முன் வாசலின் நிலவும் கதவும் சித்திர வேலைப்பாடமைந்தவையாக இருப்பதும் உண்டு. நிலவின் இருபுறமும் கொடிகளை வளர்த்து மேலே ஏற்றி வளைவை உண்டுபண்ணுவது சில இடங்களில் வழக்கமாக உள்ளது. முன் வாசலில் ஓரத்தில் குத்துச் செடிகளையோ மலர்ப்பாத்தியையோ அழகுக்காக அமைப்பது சில இடங்களிற் காணப்படும் வழக்கமாகும்.

# 10 வரம்புகள்

பாதைகளின் ஓரங்களில் செடிகளை வைப்பதைப்பற்றி முன் அத்தியாயத்திற் கூறினோம். ஓரங்கள் எல்லாம் வரம்புகள் (Borders) என்று வழங்கும். தோட்டக்கலையில் செடிகளை வரம்புகளாக வளர்த்து அழகைப் பெருக்குதல் ஒருமுறை. பாதையின் ஓரங்களிலே அல்லாமல் உபவனத்தில் வரம்புகள் பல உண்டு. ஒரு பகுதிக்கும் மற்றொன்றுக்கும் எல்லை கோலவும், சில இடங்களை மறைக்கவும், காற்றடைப்பு வேலிகளாக உபயோகிக்கவும் வரம்புகளின் அலங்காரம் நமக்கு அவசியமாகின்றது. அழகுக்காகக் குத்துச் செடிகளால் வரம்புகளை அமைப்பதும் உண்டு.

வரம்புகளுக்கு ஏற்ற செடிகள்: தம் வீடுகளில் அலங்காரமாகச் சிங்காரத் தோட்டம் போடுகிறவர்களுக்குப் புத்தக அறிவு அவசியந்தான். அது இல்லையேல் பல நுணுக்கங்களை ஒருவர் அறிந்துகொள்ள முடியாது. ஆயினும் அவ்வறிவு ஒன்றே போதும் என்று கூறுவதற்கில்லை. இந்தக் கலையில் விருப்பமுடையவர்கள் பலருடைய வீட்டுத் தோட்டங்களுக்கும் பொது வனங்களுக்கும் சென்று அங்கங்கே உள்ள தோட்ட அமைப்பு, செடிகள், அவற்றின் பயிர் முறை, எப்படி எல்லாம் அச்செடிகளைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்ற விவரங்

களை நேரில் அறிந்து கொள்ளவேண்டும். இதற்கு கைகூடிய பிற நூல்களின் துணை மிகவும் அவசியமாக இருக்கும்.

அனுபவத்தைப் பெற விரும்புவோர் கீழே கண்ட விவரங்களை விசாரத்தறிந்து கையேட்டில் குறித்து வைத்துக் கொள்ளவேண்டும்:

1. செடியின் பெயர், வகை, அதன் இனங்கள் முதலியவை யாவை?
2. மலர்ச்செடியா, இலைச்செடியா, குத்துச்செடியா?
3. மலர் பிடிக்கும் காலம் எது? அதன் செழிப்பு எப் பருவத்தில்?
4. எந்த நோக்கத்துக்கு அச்செடி பயன்படும்?
5. அதன் முழு உயரம் என்ன?
6. விரைவில் வளர்வதா, நிதானமாக வளர்வதா?
7. எவ்வளவு காலம் ஜீவித்திருக்கும்?
8. பயிர்முறை எப்படி?
9. நோய்களும் தடைமுறைகளும் எவை?

இந்த வகையில் குறிப்பெடுப்பதனல் அநுபவம் தானுக வந்துவிடும்.

போகென் வில்லா, பொன்னலரி, லிங்க அலரி, கஸ்தூரி அலரி, குரோட்டன்வகை, மாதுளை, செம் பருத்தி, மருதோன்றி, சூரியகாந்தி, நந்தியா வட்டை, சவுக்கு, ஜினியா முதலிய வேறு அந்நிய நாட்டு ரகங்கள் போன்றவை வரம்புகளுக்கு ஏற்ற செடிகளாகும். மழைக்காலத்தின் தொடக்கமே பயிர் செய்வதற்கு ஏற்ற காலம். வெயில் காலத்தில் பாசனம் முதலிய பாதுகாப்பு முறைகள் அவசியம்.

வரம்புகளாக அமைக்கும் பாத்திகளின் அகலம் ஓரடி முதல் இரண்டரை அடி வரையிலும் இருக்கலாம். அது செடியின் தன்மையைப் பொறுத்தது. மூன்றடி அல்லது இரண்டடி ஆழத்தில் பாத்திகளைக் கால்வாய்போல் தோண்டி நன்ருக மட்கிய தழை உரத்தை அதில் போடவேண்டும். தொழு எருவும் மட்கிக் கறுத்துப் போயிருந்தால் சேர்க்கலாம். சிறிதளவு சுண்ணும்பும் நல்லது. இவற்ருேடு கொஞ்சம் மண்ணையும் சேர்த்துக்கொண்டு பாத்திகளை மூடி விடவேண்டும். இவ்விதம் பாத்தி தயாரானதும் செடிகளை அங்கே எடுத்துச் சென்று குழி தோண்டி முக்கோண முறையில் இரண்டு வரிசையாக நடவேண்டும்.

**கத்தரிப்பு:** தோட்டக்கலையில் அழகை மிகுதிப்படுத்துவதற்குக் கத்தரிப்பு (Pruning) மிகவும் அவசியம். புல்வெளி, வரம்புகள் ஆகிய இவைகளுக்கு இது இன்றியமையாதது. அங்கங்கே ஓரோர் குத்துச் செடியை வளர்த்து அதனை ஓர் உருவம் அமையும்படி கத்தரிப்பதும் உண்டு. கோஸ்மஸ், ஜினியா போன்ற செடிகளுக்குக் கத்தரிப்பு வேண்டுவதில்லை. வேலிக்காகவும் மறைப்புக்காகவும் அமையும் வரம்புகளுக்கு இது கட்டாயம் வேண்டும்.

# 11. மலர்ப் பாத்திகள்

சிங்காரத் தோட்டத்தின் கூறுகளில் மலர்ப் பாத்தியும் ஒன்று. ஒரு தனிச் செடி பல மலர்களோடு விளங்குவதைக் காணும் போது ரசிகர்களுக்கு அவர்களை அறியாமலே மன எழுச்சி ஏற்படுகிறது. அது போன்ற பல செடிகள், வேறு வேறு மலர்களைக் கொண்ட பல வேறுவகைச் செடிகள் ஒரே பாத்தியுள் செறிவாக மலர்ந்து காட்சியளிக்கும்போது அவ்வழகை என்னவென்று கூறுவது! பலநிறங்களின் கொலுக் கூட்டமே அது.

வரம்புகளாக உள்ள மலர்ப்பாத்திகள் (Flower Borders) ஒருவகை; புல்வெளியிலும் மற்ற இடங்களிலும் செறிவாக ஒழுங்கு படுத்தப் பெற்ற பல வகை மலர்ச்செடிகளின் பாத்திகள் (Flower Beds) மற்றொருவகை. முன் வகையில் ஒரு வித மலர்ச் செடியே காணப்படும்.

பாத்திகளுக்குரிய மலர்ச் செடிகள்: மலர் உலகில் உஷ்ண தேசத்து மலர்களுக்கும் உஷ்ணம் குறைந்த பிரதேசத்து மலர்களுக்கும் வேறுபாடு உண்டு. உஷ்ணதேசத்து மலர்கள் சிறந்த நறுமணத்தைப் பெற்றுத் திகழும்; பின்னுள்ள இனத்துக்கு நிறம் பிரதானமானது. இது பொதுவிதி. இக்காலத்தில் தோட்டங்களில் மலர்ப் பாத்திகளுக்கு நிறத்தையே முதன்மையாகக் கொள்கிறார்களே ஒழிய மணத்

தைப் பொருட்படுத்துவதில்லை. நிறம் மிக மிக, மணம் இல்லாமற் போகும்.

நிறத்தை முதன்மையாகக் கொண்ட மலர்ச் செடிகள் நம் நாட்டுக்குப் புதியவை. அவை எல்லாம் ஒரு நூற்றாண்டுக்குள் அயல் நாடுகளிலிருந்து நம் தேசத்துக்குக் கொண்டு வரப்பட்டு இங்கே நிலை கொள்வதற் கேற்ற பழக்கத்தைப் பெற்று விட்டன. ஒட்டுச் சேர்த்தல், வேறு செடியின் மகரந்தத்தைச் சேர்த்தல் முதலிய முறைகளினால் ஒரு செடியிலிருந்து பலவேறு நிறங்களை உண்டாக்கும் வித்தையையும் நம் நாட்டுத் தோட்டக்கலை நிபுணர்கள் கண்டுகொண்டு விட்டார்கள். இச் செடிகளில் பெரும்பாலனவற்றுக்குப் பெயர்கள் மட்டும் தமிழில் இன்னும் கண்டுபிடிக்கப் படவில்லை. பெயர்கள் வேறு மொழியனவாக இருப்பினும் இச் செடிகளை அன்னிய நாட்டவை என்று இனியும் நாம் கூறக்கூடாது. நம் நாட்டுக்கு உரியவை ஆகிவிட்டன.

இவற்றுள் பருவச்செடிகள் (Annuals), பல ஆண்டுச் செடிகள் (Perennials) என இருவகை உண்டு. பருவச்செடிகள் ஒவ்வோர் ஆண்டிலும் சில மாதம் உயிர்வாழ்ந்து பிறகு அழிந்து விடும். இவைகளிலும் குளிர்கால மலர்கள், வெயிற்கால மலர்கள் என இருவேறு வகை உண்டு. இந்த விவரங்களை எல்லாம் அந்த அந்த மலர்ச்செடிகளை நட்டு அனுபவத்தில் ஒருவர் அறிந்துகொள்வதுதான் சிறந்த முறையாகும். அது ஒரு பிரமாத வித்தை அன்று! நம் நாட்டில் ஒரு விசித்திரம் என்னவென்

றால் குளிர்கால மலர்களுக்கு அதிகமான வெயில் வேண்டும். வெயில் படப்பட மலர்களின் நிறம் ஏறுகிறது; செடிகளும் குதூகலம்கொண்டு செழிப் படைகின்றன! குளிர்கால மலர்ச் செடிகளை ஆகஸ்டு முதற்கொண்டு நவம்பர்வரை பயிராக்க லாம். இவை பிப்ருவரி மாதம் முடிய, சோபை யைப் பெற்று விளங்கக்கூடும். தென்னாட்டில் சிங் காரத் தோட்டங்கள் யாவும் வேறு எந்தப் பருவத் தைக் காட்டிலும் சிறந்து விளங்குவது இந்தக் குளிர் காலத்திலேயே. வெயிற்கால மலர்களைக் கோடை மழை தொடங்கியதும் பயிர் செய்யலாம். இவற்றுக்கு ஆட்சி ஏப்ரல் முதல் ஆகஸ்ட் முடிய. நம் நாட்டில் தென்மேற்குப் பருவ மழை வட கிழக் குப் பருவ மழை இரண்டும் பொருந்தியுள்ள இடங் களில் அநேகமாக வருஷத்தில் பத்து மாதம் தோட் டங்கள் பொலிவோடு காணப்படலாம்.

பாத்திகளின் தயாரிப்பு : வரம்புச் செடிகளுக்குப் பாத்திகளை அமைக்கும் விதம் முன்பு ஓர் இடத்திற் கூறப்பட்டது. இங்கே வேறுவகைப் பாத்தி யமைப்பு முறையே கூறப்படவேண்டும். இந்தப் பாத்தி உத்தேசமாக ஏழெட்டடி நீளம் நாலைந்தடி அகலமாக அமையலாம். பெரிய தோட்டங்களுக்கு இடப்பரப்பைப் பின்னும் அதிகரித்துக்கொள்ள லாம். பாத்தி வட்டமாகவோ, எண்கோணம் முதலிய பலவித விசித்திரமான வடிவங்களாகவோ அமைவதும் உண்டு.

இவை அடிப்படைப் பொருளுக்கு (Back-ground) அருகில் இருந்தால் மலர் நிறங்களின்

அழகு எடுப்பாகத் தோன்றுது. அதனால், அதற்கு ஏழெட்டடித் தொலைவில் இருக்கவேண்டும்.

இரண்டடி ஆழம் குழி பறிக்கவேண்டும். கடினமான தரையில் இந்த ஆழம் போதும். மணல் நிலங்களுக்குப் பின்னும் அரையடி ஆழம் அவசியம். பறித்த குழியில் மட்கிய தொழுவுரம், தழைமட்கு, தோட்டமண் இவைகளைப்போட்டு மூடிவிட வேண்டும். செடிகளை நடுவதற்கு மூன்று வாரங்களுக்கு முன்பு இதனைத் தயாரித்துக்கொள்வது அவசியம்.

நடுகை: பாத்தியில் நடக்கூடிய பலசெடிகள் ஓரிடத்தில் நாற்றுவிடப்பட்டு மறுபடியும் பெயர்த்தெடுத்துவந்து பாத்திகளில் நடக்கூடியவை. நாற்றுப்பாத்தி மரநிழலில் இருக்கவேண்டும். மரநிழல் வசதியாக இல்லையானால் நாற்றுக்களை அகலமான சட்டிகளில், இல்லையேல் கள்ளிப்பெட்டிகளில் உற்பத்திசெய்து அப்பாத்திரங்களை வீட்டுத் தாழ்வாரங்களில் வைத்துக் காப்பாற்றலாம். நாற்றுக்கு வெறும் மணலே போதும். வேண்டுமானால் சிறிதளவு தழைமட்கை மணலுடன் கலந்துகொள்ளலாம். நாற்றுப்பாத்தியில் விதைகளை நெருக்கமாக நடவேண்டும். ஈரம் எப்பொழுதும் அவசியமாகும்.

நாற்றுக்கள் ஓரளவு வளர்ந்தபிறகு அவற்றைப் பெயர்த்து மலர்ப்பாத்திகளில் உரிய காலத்தில் நடவேண்டும்.

பின் வளர்ப்பு: பாத்திக்கு அப்பொழுதப்பொழுது ஜலம் பாய்ச்சிவருவதும், களைச்செடிகள் இடம் பெறாமல் அவற்றைக் கண்டதும் களைந்துவிடுவதும் எல்லோரும் அறிந்த விஷயமே. செடிகளில் பூச்சி

கள் வாராதிருக்கப் பாத்தியில் சாம்பலைத் தூவி வைக்கலாம். மாதம் ஒருமுறை நிலத்தைக் கொத்த வேண்டும். கொத்தும் சமயம் செடிகளின் வேர்களுக்குச் சேதம் ஏற்படலாகாது.

குறித்த அளவுக்குமேல் செடி உயரமாக வளர்ந்துவிட்டால் அதில் கிளைகள் அதிகம் இரா. எனவே மலர்கள் குறைந்துவிடும். ஒவ்வொரு மலரும் ஒவ்வொரு கிளையின் நுனியில் உண்டாகக் கூடும். ஆகவே கிளைகள் மிகுதியாக இருத்தல் அவசியம். செடி விரைவாக வளர்ந்துவரும்போது அதன் உச்சியைக் கிள்ளி எறிந்துவிட்டால் உயரமாக வளர்வது குறைந்து, செடி புதரைப்போல் பல கிளைகளை விட்டு அடர்த்தியாகச் செழித்தல் கூடும். இம் முறையினால் மலர்பிடிப்பு அதிகமாகிறது.

பாத்திச் செடிகளில் பூச்சி விழுந்துவிட்டதாகத் தெரிந்தால் செடிகளின்மேல் மண்ணெண்ணெய்க் குழம்பு (Kerosene Emulsion) என்ற மருந்தைத் தெளிக்கவேண்டும். இதனை நாமே வீடுகளில் தயாரித்துக் கொள்ளலாம்.

தயாரிக்கும் விதமாவது: ஒரு புட்டி மண்ணெண்ணெயை எடுத்துக்கொள்ளவேண்டும். பிறகு அந்த அளவைப்போல் மூன்று பங்கு ஜலத்தை மட்பாத்திரம் ஒன்றில் எடுத்துக்கொண்டு அந்த நீரில் துணிகளுக்கு உபயோகிக்கும் சோப்பைக் கரைத்துக்கொள்ளவேண்டும். பார்சோப் ஒன்றில் பாதி அளவு போதும். சோப்பைக் கத்தியினால் தூளாகச் சீவித் தண்ணீரில் இட்டுக் கரைக்கவேண்டும். பிறகு இந்தச் சோப்புநீரை அடுப்பின்மேல்

ஏற்றிக் கொதிக்கவைக்க வேண்டும். இந்த முறையினல் சோப் துண்டங்கள் முற்றும் கரைந்துவிடும். நன்ருகக் கொதிவந்தபின் பாத்திரத்தைக் கீழே இறக்கி வைத்துக்கொண்டு அதில் முன்பே தயாராக வைத்துள்ள ஒரு புட்டி மண்ணெண்ணெயைக் கொட்டி நன்ருகப் பலமுறை கிளற வேண்டும். கைமத்தினல் வெள்ளையாகும் வரையில் கடைவதும் நல்லது. இந்தக் கலவை முற்றும் கலந்து ஒன்றுபட்டபின் இதில் ஒரு பாகத்தைத் தனியே எடுத்துக்கொண்டு, எடுத்துக்கொள்ளும் அளவைப்போல் மூன்றுபங்கு குளிர்ந்த ஜலத்தை அதில் சேர்த்துக்கொண்டு பூச்சி பிடித்த செடிகளின்மீது தெளிக்கவேண்டும்.

பாத்திச் செடிகளை அவற்றின் நிறத்துக்கும் உயரத்துக்கும் ஏற்ப ஒழுங்குபடுத்தி வரிசையாக நடல் : மலர்ப் பாத்திகள் இனிய காட்சியை வழங்க வேண்டுமானல் செடிகளின் நிறங்களை ஒழுங்கு படுத்துவது அவசியம் ; உயரமுள்ள செடிகளைப் பின்னல் நட்டு உயரம் குறைந்தவைகளை முன்முன்னக நடவேண்டும். நடுவிலுள்ளவை உயரமாகத் தோற்றும்படி, உயரமான பெரிய செடிகளைப் பாத்தியின் மையத்தில் நட்டு அவைகளைச் சுற்றிலும் சிறிய செடிகளை நடலாம். வட்டப் பாத்திகளுக்கு இம்முறை ஏற்றதாகும்.

சதுரப் பாத்திகளில் பின் வரிசையில் உள்ள உயரமான செடிகள் காற்றினல் அலைப்புண்டு சாய்ந்துபோகாமல் அவைகளை மூங்கிற் குச்சிகளுடன் சேர்த்துக் கட்டிவைக்கலாம். இப்படிக் கட்டும் குச்சிகளுக்குப் பச்சைச் சாயத்தைப் பூசிவிட்டால்

குச்சிகள் இருப்பது பார்ப்பவர் கண்களுக்கு எளிதில் புலப்படாது.

நிறங்களில் நட்பு நிறங்களும் உண்டு; பகை நிறங்களும் உண்டு. சிவப்பு—பச்சை, வெள்ளை—கறுப்பு, கறுப்பு—சிவப்பு இவை எல்லாம் பகை நிறங்களாகும். கத்திரிப்பூ நிறம், நீலம், சிவப்பு, மஞ்சள் இவை முறையே அமைவது அழகிய தோற்றமாகும். இவைகளை நட்பு நிறம் என்னலாம். சில இடங்களில் விளம்பரப் பலகைகளைப் பார்க்கிறீர்கள். பலகையின் நிறமும் அதில் எழுதியிருக்கும் எழுத்தின் நிறமும் நட்பு நிறங்களாக இருந்தால் தான் விளம்பரப் பலகைகளுக்கு அழகு ஏற்படும். பல வர்ணப்படங்களை உற்று நோக்கினால் நட்பு நிறங்கள் எவை என்பது ஒருவருக்கு எளிதில் விளங்கும். வானவில்லின் நிறங்கள் ஏழும் நட்பு முறையில் அமைந்திருக்கின்றன.

காஞன், காஞன் வாழை, கொட்டை வாழை என்று பலவிதமாக வழங்கும் செடிகளை (Cannas) பாத்தியில் நடுவது இப்போது எல்லாத் தோட்டங்களிலும் சகஜமாகிவிட்டது. இந்தச் செடியில் பல நிறங்கள் உண்டு. யாவற்றையும் ஒன்ருக நடும் முறை ஒன்று; நிறத்துக்கு ஏற்ப இவைகளைத் தனித் தனியே பிரித்துச் செறிவாக ஒவ்வொன்றையும் நடும் முறை மற்றென்று. காஞன்களைப் பயிர் செய்யும் விதம் பின்னேரிடத்தில் காணப்படுகிறது.

மலர்ப் பாத்திகளைச் சுற்றிலும் மூன்றடி தூரம் புல்வெளியாக அமையவேண்டும். புல்வெளியை ஓரங்களாகப் பெற்ற மலர்ப் பாத்திகள் எடுப்பாகத் தோன்றக்கூடும்.

# 12. சட்டிச் செடிகள்

சட்டிச் செடி வளர்ப்பின் நோக்கம் : உபவனக்கலையில் சட்டிச் செடி வளர்ப்பு ஒரு தனிப் பிரிவைச் சாரும். சட்டிகளிற் செடிகளை வளர்த்தல் எதற்கு? இக்கேள்விக்கு விடையை ஒவ்வொரு கலா ரசிகரும் அறிந்திருத்தல் வேண்டும்.

1. உபவனக் கலையில் ஆர்வம் மிகுந்தவரில் சிலருக்குச் செடிகளை வளர்க்க இடமில்லாமற் போதல் கூடும். அத்தகையவர்கள் சில அரிய செடிகளைச் சட்டிகளில் வளர்த்துக்கொள்ளலாம். தாம் வளர்த்த சட்டிச் செடிகளை அவர்கள் விருப்பமான இடங்களில் வைத்து வீட்டை அழகு படுத்தலாம்.

2. விருந்து, கழகக் கூட்டம், கொண்டாட்டம் முதலிய சந்தர்ப்பங்களில் அவை நிகழும் இடங்களைச் செடிகளால் அழகு படுத்துவதற்குச் சட்டிச் செடிகளை ஒழுங்காகவும் அலங்காரம் அமையும்படியும் வைத்து ஓரிடத்தை உபவனம்போல் ஜோடிப்பதற்கு அவை இக்காலத்திற் பயன்பட்டு வருவதை நாம் அறிவோம் அன்றோ?

3. சில அலங்காரச் செடிகள் வெயில், மழை, கடுங்காற்று முதலியனவைகளை விரும்புவதில்லை. இவைகளுக்கு ஏற்ற மண்ணும் நாம் வசிக்கும் இடத்தில் இருப்பதில்லை. இந்த இரண்டு பிரச்னைகளையும் சட்டிச் செடி வளர்ப்பு முறை தீர்த்துவிடும். சட்டி

களில் அந்த அந்தச் செடிக்கு உகந்த மண்ணைப் போட்டு அதில் நட்டு, வெயில் மழை கடுங்காற்று முதலியவை இல்லாத அதனதனுக்கு ஏற்ற இடங்களில் வளர்த்தல் எளிதாகிறது. இத்தகைய செடிகளில் மலரிலிகள் (Ferns) ஒருவகை. இவைகளைப் பற்றிப் பின்னர் ஆராய்வோம்.

4. ஓரிடத்திற்கு விருந்துக்குப் போயிருந்தேன். அங்கே வெட்ட வெளியில் அமைந்துள்ள ஒரு மேடையின் ஓரங்களில் சில மலர்ச் செடிகள், பனைவகை, மலரிலிகள் முதலியன நிலத்தில் வளர்ந்திருக்கக் கண்டேன். 'சட்டிகளில் அன்றி நிலத்தில் வளர்க்க முடியாத ரகங்களை இவர்கள் எப்படி வெட்ட வெளியில் வெயிலில் சாதாரண மண்ணில் வளர்த்திருக்கிறார்களோ!' என்று ஆச்சரிய மடைந்தேன். கூர்ந்து பார்த்ததில் உண்மை புலனாயிற்று. மேடையைச் சுற்றிலும் காணப்பட்டவை சட்டிச் செடிகளே. சட்டிகள் நம் கண்களுக்குப் புலனாகாதவாறு அவற்றை மண்ணிற் புதைத்துச் செடிகள் மட்டும் தோன்றுமாறு விட்டார் சட்டிச் செடிகளை அழகு படுத்தியிருக்கும் கலையமைப்பை அன்று முதல் முறை கண்டு கொண்டேன். அன்று அங்கே விருந்துக்கு வந்த கலா ரசிகர் பலர் இக் காட்சியை மிகவும் வியந்து பேசினார்கள். சட்டிச் செடிகளின் மற்றொரு பிரயோஜனம் இது. விருந்து முடிந்ததும் சட்டிகளைப் பெயர்த்தெடுத்துக்கொள்ளலாம்.

5. ஒட்டுச்சேர்க்கும் செடிகளைச் சட்டிகளிலோ கூடைகளிலோ வளர்த்து அவைகளை ஒட்டுச்

சேர்க்கும் இடத்துக்குக் கொண்டு சென்று ஒட்டுச் சேர்க்கிறார்கள்.

6. செடிகளைத் தமக்கு இஷ்டமான இடங்களுக்கு அடிக்கடி மாற்றிக்கொள்ள வேண்டியவர்கள் ஒண்டு குடித்தனக் காரர்கள் அவற்றைச் சட்டிகளிலேயே வளர்க்கவேண்டும்.

சட்டிச் செடிகளின் வகை : சாதாரணமாக நீங்கள் பெரிய பங்களாத் தோட்டங்களுக்கோ பொதுத் தோட்டங்களுக்கோ சென்று பார்த்தால் அங்கங்கே சட்டிகளில் வளர்க்கப்படும் செடிகள் எந்த எந்த வகையன என்பதை அறியலாம்.

1. நுட்பமான மலர்ச் செடிகள்
2. பல நிற இலைச் செடிகள் (Foliage plants)
3. மலரிலிகள் (Ferns)
4. பனைவகை (Palms)
5. பூடு வகை (Bulbs)
6. புல்வகை (Grasses)

பெரும்பாலும் காணப்படும் வகை இவையே. இவற்றுள் இலைச் செடிகளும் மலரிலிகளே ஆயினும், இவற்றின் இலைகள் பெரியன; பல நிறங்களோடு கூடியன.

சட்டிச் செடியின் அமைப்பு : சட்டிகள் வடிவில் பலவகைப் படுமேனும் சாதாரணமாக டம்ளர்களைப் போலிருக்கும். அவற்றின் அடியில் வடிகாலின் பொருட்டுத் துளைகள் காணப்படும். சட்டியின் அளவை அதன் வாயின் குறுக்கு நீளத்தை அளவாகக் கொண்டு குறிப்பர். இந்த அளவுப்படி

5 அங்குலம் முதல் 12 அங்குலம் வரையில் சட்டிகள் உண்டு. சட்டிகள் அழகாக இருக்கும் பொருட்டு அவைகளின்மேல் செந்நிறம் காணப்படும். செம் மண்ணைப் பூசி இந் நிறத்தைக் கொடுத்திருத்தலும் உண்டு.

மண்ணின் கலப்பு: சட்டிச் செடிகளுக்கு எருச் சத்து மிகுதியாக வேண்டும். சத்தோடு கூடிய மண் மிகவும் இளக்கமாக இருக்கவேண்டும். ஈரப்பசை யும் அதில் அமையவேண்டும். சுண்ணும்பை விரும் பக்கூடிய செடிகளே சட்டிச் செடிகளில் அதிகம். ஆகையால் அந்த மண்ணில் சுண்ணும்பின் கலப் பும் அவசியம். இவ்வித மண்ணைச் செயற்கை முறை யில் நாம் தயார் செய்து கொள்ளவேண்டும். அதன் கலவை பின்வருமாறு அமையலாம். மண் 1 பங்கு, மணல் 1 பங்கு, மட்கும் மட்கிய தொழு உரமும் 2 பங்கு, கரித்தூள், இடித்த கட்டடங்களிலிருந்து எடுத்த காரைப் பொடி அல்லது சுண்ணும்புத் தூள் முதலியன 1 பங்கு; இந்தக் கலப்பு எல்லாச் செடி களுக்கும் நியதியன்று; பொதுத் திட்டமே. பிராணி களின் கொம்பு, குளம்பு முதலியவற்றின் கழிவுகள் பறவைகளின் எச்சம் முதலியன சட்டிச் செடி களுக்கு மிகச் சிறந்த உரம். ஆதல் பற்றி மண்ணில் இவையும் கலந்திருக்கலாம். எப்படியும் களியின் கலப்பு மட்டும் அதிகமாக இருக்க லாகாது.

சட்டிகளின் அளவும் வேர்ப்பரப்பும்: சட்டிச்செடி களின் வேர்கள் அதிக தூரம் பரவ விரும்பு

வதில்லை. வேர்கள் நெருக்கமாகப் பிணைந்திருந்தாலும் செடிகளின் ஆரோக்கியம் கெடுவதில்லை. வேர்ப்பரப்பு அதிகமானால் செடியில் தழைகள் மிகுந்து மலர் பிடிப்பு குறைந்து போகும். ஆகவே மலர்ச்செடிகளுக்கு 5 முதல் 8 அங்குலச் சட்டிகளே போதும். இலைத்தாவரங்களுக்கு 10 முதல் 12 அங்குல அளவுள்ள சட்டிகள் இருக்கலாம். மலரிவிகளுக்கும் குறுகலான வாயையுடைய சட்டிகள் வேண்டும். சட்டிச்செடிகளின் வேர் மண்ணில் மேலாகவே பரவியிருப்பதும் உண்டு. ஆதலினால் சட்டியின் மண்ணைக் கொத்துவதோ, கிளறுவதோ செடிக்கு அபாயகரமானதாகும். ஜலம் ஊற்றும் பொழுதுகூட ஜாக்கிரதையைக் கையாளாவிடில் வேர்கள் வெளியே புலப்பட்டு விடும்.

சட்டிகளைத் தரையில் வைத்தல்: சட்டியின் அடியிலுள்ள துவாரங்கள் வழியாக வாயுக்கள் உள்ளே பிரவேசித்துச் செடியை வளர்க்கும். ஒரு பலகைக் கல்லின்மீதோ, கெட்டியான தரையின்மீதோ சட்டியை வைத்தால் சட்டிக்குள் வாயுக்கள் நுழைய வழியிராது. ஆகவே சட்டியை வைக்கும்போது அடியிலுள்ள துவாரங்களுக்கும் தரைக்கும் நடுவில் சிறிது இடைவெளி விழுமாறு சிறு செங்கற்களின் மீது வைக்கலாம். மணல் தரையாக இருந்தால் கவலை இல்லை.

திருப்பிக் கொடுத்தல்: தாழ்வாரங்களிலும் முற்றத்தின் ஓரங்களிலும் சட்டிச் செடிகளை வைத்திருப்பவர்கள் இரண்டு மூன்று நாளுக்கு ஒரு முறை

அந்தச் சட்டிகளைத் திருப்பி வைக்க வேண்டும். திருப்புதல் என்பது கிழக்கே இருந்த பாகம் மேற்கே வரும்படிச் செய்தல். சட்டி திருப்பப் படாமல் இருந்தால் செடியின் ஒரு பக்கத்தில் மட்டும் எப்பொழுதும் அதிக வெளிச்சமும் மற்றொரு பக்கம் வெளிச்சக் குறைவும் இருந்துவரும். அதனால் செடியும் ஒரு பக்கம் அழகு மிகுந்தும் மறுபுறம் சோம்பியும் காணப்படுதல் இயல்பு.

இடத்தின் தூய்மை: சட்டிகளை வாரம் ஒரு முறை நகர்த்தி வைத்துவிட்டு அவை இருந்த இடத்தைச் சுத்தம் செய்துவிடுதல் அவசியம். நகர்த்தாவிட்டாலும், சுத்தம் செய்யா விட்டாலும் சட்டிகளின் அடியில் புழு பூச்சிகள் தங்குதல் கூடும். ஒரு துர்நாற்றம் வீசுதலும் இயல்பு.

பழைய சட்டிகளை உபயோகிக்கையில்: கவனிப் பின்றிக் கிடந்த பழைய சட்டிகளை மறுபடியும் செடி வைக்க உபயோகிக்க வேண்டுமானால், அவற்றை நீரில் நன்றாகக் கழுவ வேண்டும். அடியிலுள்ள துவாரங்களில் மண் அடைந்திருந்தால் அதனை முற்றும் அகற்றிவிட்டுப் பிறகே பயன் படுத்திக் கொள்ளவேண்டும்.

செடிகளுக்குப் பற்றுக்கோடு: சட்டிச் செடிகளிற் சில இரண்டடி உயரத்துக்கும் மேலே வளரக்கூடும். அத்தகையவை காற்றினால் ஒடிந்து போகாதபடி அவற்றின் தண்டின் அருகில் சிறிய கழிகளை நட்டு அவற்றுடன் தண்டை மெல்லிய வாழை நாரினால் கட்டி வைக்கவேண்டும்.

சட்டிகளை நிரப்புதல்: மண் போட்டுச் சட்டிகளை நிரப்புவதில் நாம் அனுசரிக்கத் தக்க நியதி ஒன்று உண்டு. சட்டியின் அடியிலுள்ள துவாரம் புதை படாமல் மிகை நீரை வெளிப்படுத்தவும் வெளியி லிருந்து வாயுக்களை உள்ளே ஏற்றுக்கொள்ளவும் வசதியுள்ளனவாக அமையும்படி வகையறிந்து நிரப்புவதே யாகும். இந்த நியதியைக் கவனிப்பதற் காகக் கீழே வரும் முறையை அனுசரிக்க வேண்டும். கொஞ்சம் வளைந்துள்ள ஓட்டாஞ் சில்லிகளைப் பரவ லாகச் சட்டியின் அடியில் இடவேண்டும். அவற் றின்மேல் மெல்லிய தென்னம்நார், புளிச்சநார் அல்லது மெல்லிய கோணிப்பையின் கிழிசல் இவற் றுள் ஒன்றைப் பரப்ப வேண்டும். இப்பரப்பின் மேல் மண்ணும் மட்கும் பிற எருவும் கலந்த பொரு ளைக் கொட்டிச் சட்டியை நிரப்பிவிடலாம். விளிம் புக்கு ஓரங்குல ஆழம் விட்டு நிரப்ப வேண்டுமே ஒழிய, விளிம்பளவு மண் வரக்கூடாது. மண் ஓட்டுச் சில்லிகள் வழியாகச் சென்று சட்டியின் கண்களை அடைத்துக் கொள்ளாமலிருப்பதற்காகவே கோணி அல்லது நார்ப்படையை ஓடுகளின்மேல் பரப்ப வேண்டும். செடியின் நடுகைக்கு இப்பொழுது சட்டி தயாரானதாகும்.

நடுகை விவரம்: சட்டிச் செடிகளில் பெரும் பாலன விதை போட்டு வளர்வதில்லை. செடியின் பாகங்களையோ பிறிதோரிடத்திலிருந்து பெயர்த்து வந்த செடியையோதான் நடுவது வழக்கம்.

மிகவும் நுட்பமான சில செடிகள் முதலில் விதைப் பெட்டியில் விதைகள் மூலமாக உண்டு

பண்ணப் பெறும். சதுரம் அல்லது நீண்ட சதுரமானதும் சுற்றிலும் 4 அல்லது 5 அங்குல உயரமுள்ளதும், அடிப்புறம் பல துளைகளைப் பெற்றதுமான ஒரு பெட்டி விதைப் பெட்டியாக உதவக் கூடியது. அதில் மணலையும் மட்கையும் கலந்து வைத்து ஈரமாக்கி விதைகளை விதைத்துவிடலாம். நிழலில் ஜாக்கிரதையான கவனிப்பில் செடிகள் இதில் வளர்ந்து வரும். அவை நாலங்குல உயரம் வளர்ந்தபின் சட்டிகளுக்கு மாற்றப்படலாம்.

இனிச் சட்டிச் செடி வகைகளைப் பற்றி ஒரு சிறிது ஆராயலாம்.

## 1. மலரிலிகள்

இவை நெருஞ்சியிலை, புளியவிலை யளவு இலை விட்டு வளரக்கூடிய நுட்பமான செடிகள். விசேஷ நிகழ்ச்சிகளுக்கு வரும் பேர்களுக்கு உபசாரத்தின் பொருட்டு வழங்கும் 'பொக்கை' களில் ஜோடனை யாக வைத்திருக்கும் இலைகள் இந்த ரகத்தைச் சேர்ந்தவையே. இச்செடிகளில் மலர்கள் தோன்ரு விடினும் மிகவும் அழகானவை. இவற்றுள் பெரும் பாலன மலைகளிலும் குளிர் மிகுதியான மேட்டுப் பிரதேசங்களிலுமே வளர்கின்றன. மலைப் பிர தேசத்துக்கு ஏற்ற மண்ணைச் சட்டிகளில் போட்டுக் குளிர்ச்சியான இடத்தில் இவை வளர்க்கப்படுகின் றன. இவைகளுக்கு எப்பொழுதும் ஈரம் வேண்டும். வெயில் காலத்தில் இரண்டு முறை காலையிலும் மாலையிலும் ஜலம் விடலாம். வெயிலோ கடுங் காற்றே இவைகளுக்கு ஜன்ம விரோதிகள்.

காற்றடைப்பான இடத்தில் நிழலில் இவை வைக்கப்படவேண்டும். இவைகளுக்கு ஜலம் அதிகம் வேண்டுமென்று நிறைய நீரை ஊற்றி விடலாகாது; ஈரந்தான் வேண்டும். ஆனால் நீர் தேங்காமல் வடிந்துவிட வேண்டும். மண்ணில் மணலின் கலப்பு மிகுதியாக இருத்தல் முக்கியமாகும். அழகுக்காகவே இவற்றை வளர்க்கிறோம்; அதனால் இலைகளின்மேல் அழுக்குப் படலாகாது. ஆகவே அடிக்கடி பீச்சாங் குழாய் வாயிலாக இலைகளின்மேல் ஜலத்தைப் பீச்சி அவற்றைச் சுத்தம் செய்தால், அழகு எப்பொழுதும் கெடாமல் செடிகள் மினுமினுப்பாகவே இருக்கும். சில வகைகள் சட்டியிலிருந்து நன்றாக வளர்ந்து நாற்புறமும் தொங்கிக்கொண்டு சட்டியையே மூடி விடுதலும் உண்டு. இத்தகையவற்றை உயரத்தில் தூண்களின் மீது வைத்து அழகு படுத்துவதுண்டு.

பெரிய பந்தல் போட்டு அதன்மேல் அடர்த்தியாகக் கொடிகளைப் படரவிட்டுத் தரையில் மணலைப் பரப்பி நீர் தெளித்து இடத்தைக் குளிர்மையாக்கி அவ்விடத்தில் மலரிலிகளை மிகுதியாகப் பயிர் செய்யும் முறை தோட்டக் கலையுள் ஒரு சிறந்த பகுதியாகும். இவ்வித இல்லத்தை மலரிலி வீடு (Fernery) என்று வழங்கலாம்.

## 2. இலைச் செடிகள்

சேம்பிலை, மாவிலை போன்ற இலைகளின் வடிவில் ஊதா, செம்மை, பச்சை, மஞ்சள் முதலிய பல நிறங்களோடு கூடிய இலைகளையுடைய செடிகளே இலைச் செடிகளாம். இவற்றிற்கும் மலர்கள் இல்லை.

ஆயினும் இவற்றில் விதைகள் தோன்றமாட்டா; மலரிலிகளில் இலைகளின் அடிப்புறத்தில் விதைகள் தோன்றுவதுண்டு. மலரிலிகளின் இலைகள் மிகச் சிறியவை; செடிகள் நுட்பமானவை. இவையே இரண்டுக்கும் வேற்றுமை.

### 3. மலர்ச்செடிகள்

ஆஸ்டர், கார்னேஷன், இங்கிலீஷ் மேரிகோல்ட், டெல்பினியம் (Delphinium), ரோஜா முதலியவை சட்டிகளில் வளர்க்கப்படுவன. ரோஜாக்களில் சிறிய இனங்களே சட்டிகளுக்கு ஏற்றன. சட்டிகளில் பூத்திருக்கும்போது இலைகளே தெரியாமல் இவை மலர்ந்து அழகிய காட்சியை வழங்குதல் கூடும்.

### 4. பனைவகை

தென்னை, பனை, ஈந்து போன்ற மரங்களின் வடிவில் சிறிய அளவில் இலைகளை விட்டு வளரும் தாவரங்கள் பனைவகை எனப்படும். இதில் நூற்றுக் கணக்கானவை உண்டு என்கிறார்கள். நமக்குத் தெரிந்தவை இருபது இருபத்தைந்து வகைகளே. இவற்றிற் பெரும்பாலன சட்டிகளில் அல்லாமல் தரையிலும் வளரும் இயல்புடையன. எனினும் இவற்றைச் சட்டிகளில் வளர்த்தால் சிங்காரத்தின் பொருட்டு எங்கு வேண்டுமானாலும் கொண்டுபோகக் கூடும். இவை சிறந்த அலங்காரமும் ஆகும். பெரிய பனை வகைகள் சட்டியில் வளர்க்கப்படும் போது அவற்றின் வளர்ச்சி குன்றி அவை சிறியனவாகவே இருக்கின்றன. இதனால் அழகு கெடுவ

தில்லை. ஆயுளும் குறைவதில்லை. இவை சட்டிகளில் நீண்டகாலம் இருக்கும் ஆதலால் அடிக்கடி மண்ணை மாற்றிப் புதிதாக எருவைச் சேர்க்க வேண்டும்.

விஷ மூங்கில், வசம்பு, எலுமிச்சம்புல் முதலிய மஞ்சளினங்களும் புல் வகைகளும் சட்டிகளில் வளருவனவாகும்.

சட்டிகளை அலங்காரமாக வைத்தல்: வாசலின் இரு புறமும், பாதையின் ஓரங்களிலும், மேடைகளின் நாற்புறமும், தாழ்வாரங்களின் ஓரங்களிலும் சட்டிச் செடிகளை வைத்து அந்த அந்த இடங்களை அழகு படுத்துகிறார்கள். தாழ்வாரங்களை அழகு படுத்தும் அமிசம் தோட்டக்கலையில் தனியாகத் தாழ்வாரத் தோட்டம் (Verandah Garden) எனப் படும்.

தாழ்வாரத்தில் சட்டிகளை இரண்டு மூன்று வரிசையாக வைப்பதுண்டு. இதன் பொருட்டுத் தாழ்வாரத்துக்கு அகலம் குறைந்த படிகளை அமைப்பதும் வழக்கம். இப் படிகளின் மேல் சட்டிகளை வரிசைப்பட அமைப்பார்கள். சுவர் ஓரங்களிற் சட்டிச் செடிகளை நெருக்கமாக வைத்து அழகு படுத்துவதும் உண்டு. இங்ஙனம் வைக்கும்போது நிறபேதத்தை உத்தேசித்துப் பல ரகங்களை ஒழுங்குபடுத்திக் கலையின் தன்மைக்கு ஏற்ப அமைப்பார்கள்.

# 13. ஏறு கொடிகள்

உபயோகத்தை அறிந்த வரலாறு: கொடிகள் மரங்களின் மீது ஏறிப் படர்ந்திருப்பதை இயற்கையில் சில சமயங்களில் நாம் பார்க்கலாம். கொடிகள் மரத்தின்மேலே உயரத்தில் படர்ந்து மலர்ந்து விளங்கும் காட்சி அளவிட முடியாத ஆனந்தத்தைத் தரக்கூடியது. கை புனைந் தியற்றப்படாத இக் கவின்பெறு வனப்பை மனிதன் இயற்கைக் காடுகளிலே கண்டு அதனைப் போன்ற அழகை உபவனக் கலையில் சேர்த்துக் கொண்டிருக்கிறான். இப் பிரிவுதான் இங்கே 'ஏறு கொடிகள்' (Climbers) என்ற தலைப்பில் விளக்கப்படுகிறது.

வகைகள்: ஏறு கொடிகளில் கனமுள்ளவை ஒரு வகை; கனமற்ற மெல்லிய ஜாதி மற்றொரு வகை. மலர்களோடு கூடிய பூங் கொடிகள் ஒருவகை; பூவே இல்லாத இலைக் கொடிகள் பிறிதொரு வகை. இப் பின் வகையுள் இலைகளே அழகைத் தரும். இந்த இரண்டு வகையான பிரிவுகளைத் தவிர, சில பருவக் கொடிகள் (Annuals), பல்லாண்டுக் கொடிகள் (Perennials) என வேறொரு பிரிவும் உண்டு. கனமான கொடிகளை வலிமை பொருந்திய இரும்புக் கம்பிகளின் மேலாயினும், உறுதியான மரச் சட்டங்களின் மீதாயினும் ஏற்றிவிட வேண்டும்.

மலர்க்கொடிகள் உயரமுள்ள இடத்திலிருந்து வழங்கும் காட்சி மிகப் பெரியது. அவற்றின் நிறம்

தோட்டத்திலுள்ள மற்ற நிறங்களை எல்லாம் தோற்றுப்போகச் செய்துவிடும். பார்க்க வருகிறவர்கள் இந்த அழகினையே பார்த்துக்கொண்டு மற்றவற்றைப் பார்த்தும் பாராமலும் போய்விடக் கூடும். ஆகவே சிறிய பரப்பிலுள்ள சிங்கார வனங்களுக்கு இவ்விதமான மலர்க்கொடிகள் வேண்டாம் என்று சிலர் கூறுதல் கூடும்.

நிறமலர்கள் மிகுதியாக உள்ள பூங்கொடிகளுக்கு வெயில் அதிகமாக வேண்டும். ஆகவே அவைகளை நிழல் படும் இடத்தில் பயிர் செய்வதை விட வெயிலுள்ள இடங்களில் வளர்த்தல் மேலாகும்.

ஏறு கொடிகளைப் பலவகை உபயோகங்களுக்கு எவ்விதம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று இனி ஆராய்வோம்.

வாசல் வளைவு (Arch) : வீட்டிற்குள் செல்வதற்கு அமைக்கப்பட்ட வாசல்கள் பல. இந்த வாசல்களில் ஒன்றின் தலைப்பில் வளைவான இரும்புச் சட்டங்களை நிறுத்தி அவற்றின்மேல் கொடிகளைப் படர விடுவது வழக்கம். முதல் வாசலுக்கே இந்த அலங்காரம் பலருடைய பங்களாக்களிற் காணப்படுகின்றது. வாசலின் இரு புறத்தும் இரு பாத்திகளை வகுத்துப் பாத்தி ஒன்றில் இரண்டு மூன்று கொடிகளை நட்டு அவைகளை மேலே ஏற்றிவிட்டு அலங்காரமாக அமையும்படிப் பிறகு கத்தரித்து விடுவதுதான் வழக்கமாகக் கையாளப்படும் முறையாகும். இருப்புக் கம்பிகளுக்குப் பதிலாக உறுதியான மூங்கில்களையோ, வேறு மரங்களையோ உப

யோசித்துக் கொள்ளலாம். வாசலின் இருபுறமும் கொடிகள் மேலேறுவதற்கு வளைவான ஆணிகள் பற்றுக்கோடாக அமைய வேண்டும்.

பாதைப் பந்தல்கள் (Pergolas) : நடைப்பாதை நீளமாக இருந்தால் அதன் இடையில் சில இடங்களில் பந்தல் அமைத்து, அப்பந்தலின் மேல் கொடிகளை ஏற்றிவிடுவது இந்த வகையது.

பாதையில் பந்தல் அமைக்கும்போது அதன் இருபுற ஓரங்களிலும் உறுதியான கால்களை நேருக்கு நேராக நட்டு, அவற்றின்மேல் உறுதியான கழிகளைக் குறுக்குச் சட்டங்களாகப் போட்டு, இக் குறுக்குச் சட்டங்களில் படியும்படி நீண்ட மூங்கிற் கழிகளைப் பரப்பி, ஒன்றோடொன்று குறுக்குச் சட்டத்துடன் பிணையும்படிக் கட்டிவிட வேண்டும். பிறகு ஒவ்வோர் ஓரத்திலும் கொடியின் அடர்த்திக்கு ஏற்ப ஓரடிக்கு ஒன்றாகவோ அல்லது 18 அங்குலத்துக்கு ஒன்றாகவோ பாத்திகளில் கொடிகளை வளர்த்து அக் கொடிகளைப் பற்றுக் கோடுகளுடன் பிணித்துப் பந்தலின் மேல் ஏற்றி அவை பந்தலில் நெருக்கமாகப் படர்ந்தபிறகு அவைகளை ஒழுங்காகக் கத்தரித்து விடவேண்டும்.

மறைப்புக்கள் (Screens) : வீட்டுத் தோட்டத்திலாயினும் பொதுத் தோட்டங்களிலாயினும் ஒரு பிரிவிலிருந்து மற்றொரு பிரிவு மறைக்கப்பட வேண்டிய சந்தர்ப்பங்களில், மறைக்க வேண்டிய இடத்தில் இருப்பு முள் வேலியை அமைத்து, அவ் வேலியின் மீது படர் கொடிகளை ஏற்றிப் பழக்கி

விடுவது வழக்கம். கொடிகள் வேலியில் நன்றாகப் படர்ந்து விட்டால் அவ்விடம் சிறந்த மறைப்பாகி விடும். அந்த மறைப்பு நம் பார்வைக்கு அழகாகவும் தோன்றும். வேலியின் நெடுக இருபுறமும் ஒன் றரை அடிக்கு ஒன்றாகப் பல கொடிகளை நட்டு அவற்றை வேலியின்மீது ஏற்ற வேண்டும். சில சமயங்களில் வேலியின் கீழ்ப்பாகம் கொடிகளின் செறிவு நன்கு அமையாமல் வெளியாக இருத்தலும் கூடும். அப்படி யிருப்பின் அது சிறந்த மறைப் பாவது எங்ஙனம்? எனவே, இவ்விதமான குறை யிடம் ஏற்படாதபடி கொடிகளில் பாத்திக்கு மேல் உள்ள முதல் அல்லது இரண்டாவது கண்ணி லிருந்தே தோன்றும் பக்கக் கிளைகளைக் களைந்து விடாமல் காப்பாற்றி அவைகளைக் குறுக்கே வேலி யின் அடிப்பாகத்தில் படர விட்டால் கீழ்ப்புறமும் செறிவு ஏற்பட்டு விடும்.

பிற அலங்காரங்கள்: கொடிகள் அலங்காரமாகச் சுவர்களின்மேல் படர்ந்து காட்சியளிப்பதைச் சில வீட்டுத் தோட்டங்களில் நீங்கள் கண்டிருக்கலாம். சுவர்களில் ஆணிகளை அறைந்து அவற்றில் கொடி களைப் பிணைத்து மேலே ஏற்றிவிட வேண்டும். சுவர் ஓரத்தில் நெடுகப் பாத்தி அமையும். அதில் ஓரடி அல்லது 18 அங்குலத்துக்கு ஒன்றாகக் கொடிகளைப் பதிக்க வேண்டும். இது சுவர் அலங்காரம் எனப்படும்.

பெரிய தூண்களுக்கு இருப்புவலையைப் போட்டு அவைகளை மூடி அவ் வலையின்மேல் பூங் கொடிகளைப் படரச் செய்வது ஒருமுறை. பல

பொது வனங்களில் இந்த அழகைக் காணக்கூடும். இது தூணலங்காரம் எனப்படும்.

தூண்களில் கொடிகளைப் படரவிடுவதுபோல் மலர்க் கொடிகளை மரங்களின்மேல் ஏற்றிக் கிளைகளில் படர்ந்து மலருமாறு செய்வதும் உண்டு. ஆன்டிகோனன் இதற்கு ஏற்ற கொடி.

வளர்ப்பு முறை: ஏறு கொடிகளில் விதைகளால் உண்டுபண்ணப் படுபவை சில. வெட்டுக் கொம்புகளாக உள்ளவை பல. பதியம் போட்டு விருத்தியாக்கப் படுபவையும் பல. ஒரே கொடி இந்த விதங்களில் ஒன்றிரண்டுக்கு ஏற்றதாகல்கூடும்.

இவைகளை நடவேண்டிய இடத்தில் மூன்றடி ஆழத்தில் குழி பறித்து அதில் மட்கிய தொழு உரத்தை நல்ல மண்ணோடு கலந்து கொட்ட வேண்டும். மலர்க் கொடிகளுக்குக் குதிரையின் லத்தியைச் சேர்த்துக் கொள்வது நல்லது. இந்தப் பாத்தியில் செடியை நட்டதும், எப்பொழுதும் பாத்தியில் ஈரம் இருக்குமாறு அதற்கு ஜலம் ஊற்றி வரவேண்டும். மிகை நீர் கூடாது.

மேலே ஏற்றவேண்டிய கொடிகளாக இருந்தால் தாற்காலிகமாகச் சில பற்றுக்கோடுகளைக் கொடுத்து மேலே ஏற்றவேண்டும். கொடி நன்றாக வளர்ந்து மேலே பிடிப்பைப் பிடித்துக்கொண்டவுடன் தாற்காலிகப் பற்றுக்கோடுகளை எடுத்து விடலாம்.

பாத்தியில் புல்லோ, பூண்டோ, வேறு களைப் பயிரோ இல்லாமற் கவனித்துக் கொள்ளவேண்டும்.

தவிர, வருஷத்துக்கு ஒருமுறை மண்ணைப் பறித்து நல்ல எருவைப் புதிதாகச் சேர்க்க வேண்டும். ஏறு கொடிகளின் வடிவம் ஒழுங்கின்றிக் காணப் பட்டால் அவற்றைக் கத்தரிப்பின் மூலம் சரிப் படுத்த வேண்டும். வளர்ப்பு முறை இவ்வளவே.

ஓரிடத்தில் ஏறு கொடிகளை உபயோகிக்கும் சமயம் சில பருவக் கொடிகளையும் பல்லாண்டுக் கொடிகளையும் சேர்த்து நடுவது நல்லது. பல் லாண்டுக் கொடிகளைத் தனியே நடலாமே ஒழியச் சில பருவக் கொடிகளைத் தனியே நடக்கூடாது. ஏனெனில் சில மாதங்களில் சில பருவக் கொடிகள் அழிந்துபோனால் அந்த இடத்தில் வேறு கொடிகள் பயிராகி வளர்ந்து அழகைத் தருவதற்கு நீண்ட காலம் வேண்டும். அதுவரையில் அந்த இடம் அழகு கெட்டுத் தோன்றுதல் கூடுமல்லவா?

ஏறு கொடிகள் குத்துச் செடிகளாகவோ, புதல்க ளாகவோ பழக்கப்படுதல்: சில ஏறு கொடிகள் ஒரு தண்டில் வளர்ந்து செடியாகித் தோன்றக்கூடும். கத்தரிப்பின் மூலம் இங்ஙனம் அமைத்தலைத் தோட்டக்கலை ஞானிகள் புதிதாகக் கண்டறிந்திருக் கிறார்கள். போகேன்வில்லா (Bougainvilla) என்ற ஏறுகொடி சிறு மரமாக வளர்ந்து அழகிய காட்சி வழங்குவதைப் பல பங்களாத் தோட்டங்களில் நான் கண்டிருக்கிறேன். இது ஓர் உதாரணமே. ஏறு கொடிகள் குத்துச் செடியாகவோ புதராகவோ அமையும் போதும் அவை அழகை உமிழ்ந்து சிறந்த காட்சியை அளித்தல் கண்கூடு.

# 14. பூங் குளம்

சிங்காரத் தோட்டத்தின் பகுதிகளில் பூங்குளம் (Water Garden) ஒன்ருகும். சிறிய தோட்டங்களுக்கு இவை வேண்டுவதில்லை. வீட்டுத் தோட்டங்கள் சிறியனவாக இருந்தால் அங்கே உள்ள பூங்குளங்கள் அழகைத் தரமாட்டா. கொசுக்களின் உபத்திரவம் அதிகமாக இருக்கும். பொதுத் தோட்டங்களுக்கும் பெரிய வீட்டுத் தோட்டங்களுக்கும் பூங்குளங்கள் அவசியமாக இருக்கலாம்.

**பூங்குளக் கலையும் நம் நாடும்:** நம் நாட்டில் பழங் காலத்தில் பெரிய உபவனங்களில் பூங்குளங்கள் இருந்தன. இவற்றில் முக்கியமாகத் தாமரை வளர்க்கப்பட்டு வந்த காரணத்தினால் இவை **தாமரைக் குளம்** என்று வழங்கப்படுவதும் உண்டு. நம் முன்னோர்கள் கோவில் முதலிய இடங்களில் அமைந்த குளங்களையும் அழகிய தோட்டமாகச் செய்து, அவை கவின் கொள்ளப் பல முறைகளைக் கோலியிருக்கிருர்கள். அம்முறைகளில் நீராழி மண்டபம் என்னும் குளத்தின் நடுவே உள்ள மண்டபம் ஒன்று. படிகளுக்குச் சுண்ணும்பும் செம் மண்ணும் பட்டை பட்டைகளாகத் தீட்டப்படுவது மற்ருென்று. கரையிலுள்ள பல மலர் மரங்களின் உருவம் நீரில் பட்டுக் காட்சியளிக்கச் செய்யும் முறை மற்ருென்று. இவ்விதம் பூங்குளக் கலை

(Water Garden Culture) நம் நாட்டில் முன் காலத்திலிருந்தே வளர்ச்சி யுற்றிருக்கிறது.

கம்பர் ஓரிடத்தில் சோலையில் பூங்குளம் ஒன்றை ஒட்டி ஒரு கூத்து நடைபெறுவதாக வருணித்துள்ளார். சோலையே அரங்கம். மயில்கள் நடிகளாக அமைந்தன. இருண்ட சோலையில் நீல நிறக் குளத்தில் மலர்ந்துள்ள தாமரைகள் விளக்கு கள் போன்றன. குவளை மலர்கள் மகளிரின் கண் களைப் போன்று நாடகத்தை நோக்கி ஆனந்தித் தன. குளத்தில் எழும் மெல்லிய அலைகளில் காணப் படும் கரையிலுள்ள பன்மலர்ச் செடிகளின் உருவம் திரைச் சீலையாகிய எழினி (Scene) போன்றன. வண்டுகளின் ரீங்காரம் யாழைப் போன்றது. மேகங் கள் இடித்து முழங்குவது மத்தள ஓசையை நினை வூட்டியது. இந்தச் சம்பிரமங்களுடன் ஒரு நடனம் நடைபெற்றதாகக் கம்பர் வருணிக்கும் பாட்டுப் பின்வருமாறு:

'தண்டலை மயில்கள் ஆடத்
தாமரை விளக்கம் தாங்கக்
கொண்டல்கள் முழவின் ஏங்கக்
குவளைகண் விழித்து நோக்கத்
தெண்திரை எழினி காட்டத்
தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட
மருதம்வீற் றிருக்கும் மாதோ!'

(கம்பராமாயணம் : நாட்டுப் படலம்.)

இக்கவியில் கூறப்பட்ட தாமரை, குவளை, தெள்ளிய அலைகள் என்பவை பூங்குளத்தைச் சார்ந்த பொருளாகும்.

குளத்தின் அமைப்பு : இயற்கையாகப் பள்ளமோ, குளமோ இருக்கும் இடத்தில் பூங்குளத்தை எளிதில் அமைத்து விடலாம். இயற்கை நீர்நிலையின் கரைகளைக் கெட்டியாக்கி அங்கே பல நிறங்களோடு கூடிய மலர்க் கொடிகளைப் படரச் செய்ய வேண்டும். கரையின் ஓரத்தில் சுற்றிலும் சில அடி புல்தரையாக இருக்கலாம். தூரத்தே சில மரங்களையும் ஒரு கொடி வளைவையும் உண்டுபண்ணி அவற்றின் உருவம் ஜலத்தில் தோற்றுமாறு அமைப்பது சிறந்த முறையாகும். மரத்தின் இலைகள் குளத்தில் உதிர்ந்து நீரைப் பாழாக்கலாகாது.

தூரத்திலிருந்து பார்ப்பவருக்குக் குளத்திலுள்ள ஜலமும், அதில் முளைத்துள்ள தாவரங்களும் புலப்படும் விதத்தில் கரை தாழ்ந்து குளத்தில் ஜலம் ஏறியிருக்க வேண்டும்.

செயற்கைக் குளம் : இயற்கையில் குளம் இல்லாத இடத்தில் சுமார் 10 அல்லது 12 அடி குறுக்களவில் சிமெண்டினல் ஒரு குளத்தை உண்டு பண்ணிக் கொள்ளலாம். குளத்தை வட்டமாக அமைப்பது ஒருமுறை. சதுரமாக அமைப்பது மற்றொரு முறை. இக் காலத்தில் பல விசித்திர வடிவங்களிலும் பூங் குளம் அமைக்கப் படுகிறது.

செயற்கைக் குளமாக இருந்தாலும், அதனைச் சுற்றிலும் இயற்கைக் குளத்துக்குக் கூறிய எல்லா விதமான அலங்காரங்களும் பொருந்துவதுதான் அழகு.

குளத்தில் 18 அங்குல உயரம் தொழு உரத்தையும், மட்கையும், மண்ணையும் போட வேண்டும். சில

கொடிகள் மூன்றடி ஆழத்திலும், மற்றவை ஒன்றரை அல்லது இரண்டடி ஆழத்திலும் ஜீவிக்கக் கூடும். மூன்று அடிக்கு மேற்பட்ட ஆழம் பூங்குளத்துக்கு வேண்டுவதில்லை. முடியுமானால் செயற்கைக் குளத்தின் அடிப் பாகத்தில் ஆறு அங்குல உயரத்துக்கு மேல் நீரை வெளியேற்றும் குழாய் ஒன்று அமையலாம். அக் குழாயின் உட்புற வாய் இருப்பு வலையால் மூடப்பட்டிருந்தால் குளத்திலுள்ள மீன்கள் ஜலத்தோடு வெளியேறுவதற் கில்லாமல் பாதுகாக்கப் படும்.

குளத்தில் ஜலம் அப்புறப் படுத்தப்படும் வசதி இல்லையானால் சில வாரங்களுக் கொருமுறை வாளிகளில் நீரை வாரிக் கொட்டி விடலாம். அந்த ஜலத்தைப் பூங்காவிலுள்ள செடிகளுக்கு உபயோகித்துக் கொண்டு புதிய நீரால் குளத்தை நிரப்பி விடலாம்.

நீர்ப்பூண்டுகள் : நீரை முகந்து வெளியேற்ருமல் ஜலம் சுத்தமாக இருக்க வேண்டுமானல் சில நீர்ப் பூண்டுகளைப் பூங்குளத்தில் தாமரை அல்லி முதலியவற்றுடன் வளர்க்கலாம். இவை பிராணவாயுவை நீருக்குக் கொடுத்து அதனைத் தூய்மையாக வைத்துக் கொள்ளுகின்றன. இப் பூண்டுகள் நீர் நிலைகளில் பலவிடங்களிற் காணப்படுகின்றன. மீன்கள் ஜீவிப்பதற்கு இவை அவசியம்.

நீரில் கொசுக்கள் அண்டாமலிருக்க ஒருவகை மீனை (Larvicidal Fish) அதில் வளர்க்கலாம். இம் மீன்கள் கொசுக்களின் முட்டைகளை உட்கொண்டு கொசுப் பூண்டையே வேரறுத்து விடக் கூடும். இவ்

விஷயத்தைப் பற்றிய விவரம் மீன் இலாகாக்காரர் வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரங்களில் விரிவாக உள்ளது.

தாமரை, அல்லி முதலியவைகளை விதைகளின் மூலம் பயிர் செய்வது ஒரு வகை. இந்த முறையில் பயிர் செய்தால் கொடிகள் தோன்றி மலர்கள் உண்டாக ஏழெட்டு மாதம் பிடிக்கும். சிறிய நாற்றுக்களை விற்பனைக் கடைகளிலிருந்து வாங்கி வந்து நடுவது மற்றொரு முறை.

விதைகளை நட விரும்புவோர் இரண்டு மூன்று விதைகளை விளங்காய் அளவு களி மண்ணிற் புதைத்து மண்ணை உருண்டையாக்கிக் குளத்தில் போட்டுவிட வேண்டும். இப்படி ஐந்தாறு உருண்டைகள் தேவையாக இருக்கலாம். உருண்டையிலிருந்து செடி உண்டாகிப் படரத் தொடங்கும் சமயம், அலைகளால் அது பாதிக்கப் படாமல் சிறிய கல்லை எடுத்துப் பாரம் வைத்து அதனைக் காப்பாற்ற வேண்டும்.

அல்லி வகைகளே நம் நாட்டில் நன்றாக வளரக் கூடியன. இவைகளில் நீலம், சிவப்பு, வெள்ளை முதலிய நிற வகைகள் உண்டு. சிலவற்றின் இலைகள் பசுமையாக இருக்க, மற்றவைகளின் இலைகள் நீலமும் செம்மையும் கலந்த பச்சை நிறத்தோடு காணப்படும். ஒருவர் தமக்கு விருப்பமான நிறத்தைத் தரும் மலர்களையுடைய கொடிகளைப் பயிர் செய்து கொள்ள வேண்டும். ஒரு குளத்தில் இரண்டு வகைகள் ஒருசேர இருந்தால் குளத்தின் அழகு மிகுதியாகத் தோன்றும் என்று சிலர் கருதுவர்.

சிறிய குளங்களுக்கு ஒரு நிறமே போதும். வெள்ளை நிறமே வளர்ப்பு முறைக்கு எளியதாகும்.

பாதுகாப்பு : குளத்தில் கொடிகள் அடர்த்தியாக இருத்தல் கூடாது. கொடியே இல்லாமல் ஜலம் தெரியக்கூடிய பாகமும் அவசியம். அப்படியிருந் தால்தான் கொடிகள் நன்கு வாழும்; கரையி லுள்ள நிறங்களும் நீரில் பிரதிபிம்பித்து அழகைப் பொழிய முடியும். ஆகவே, கொடிகள் வளர வளர, நீருக்கு மேலே தோன்றும் பாகங்களை நெருக்கமாக வளர விடாமல் சிலவற்றைக் களைந்து விடலாம்.

ஆறு மாதத்துக்கு ஒரு முறை செடிகளுக்கு எரு விடுதல் நல்லது. பழைய நீரை வெளியேற்றிப் புதிய நீரைச் சேர்க்கும் சமயத்திலும் எரு அவசியம். இந்த எருவை விளங்காய் அளவுள்ள பந்துகளாக உருட்டி நீரில் போட்டுவிட வேண்டும். வேர்களுக்கு இந்த எரு அகப்படும் வண்ணம் வேர்களின் பக்கங் களில் போட வேண்டும்.

மேலே கூறிய முறைகளை அனுசரித்து ஒருவர் பூங்குளத்தைத் தம் தோட்டத்தில் அமைத்துக் கொள்வது எளிதாகும்.

# 15. பாறைகளின் புன்னகை

இயற்கை கற்பித்த பாடம்: ஆற்றோரங்களிலும், மலை குன்று முதலியவற்றைச் சேர்ந்த இடங்களிலும் நாம் கற்களின் கூட்டங்களைப் பார்ப்பதுண்டு. பெரும் பாறைகளும் கற்களும் ஒன்றை ஒன்று அடுத்தும், ஒன்றன்மேல் ஒன்றாகக் குவிந்தும் வழங்கும் காட்சி உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் இயல்பினது. இயற்கையைக் கண்டு ஆனந்திக்கக் கொடுத்து வைத்தோர்க்கே இதில் இன்பம் தோன்றும். பாறைக் கூட்டங்களின் இடுக்குகளில் பசுமையை உமிழும் செடி கொடிகள் முளைத்திருந்தால் பாறைகளின் காட்சி முன்னிலும் சோபிக்கும். பண்டைப் புலவர்கள் பாறைகள் இவ்விதம் வழங்கும் காட்சிகளைப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். இயற்கையில் உள்ள இந்த அழகினை மனிதன் செயற்கை முறையில் உண்டுபண்ணி ஆனந்தத்தை அனுபவிக்கும் முறை தோட்டக் கலையில் பாறைத் தோட்டம் (Rock Gardening) எனப்படும். பாறைத் தோட்டங்களைக் காண்போர் அப்பாறைகள் புன்னகை புரிவதை எளிதில் அறிந்து கொள்வார்கள்.

பாறைத் தோட்டத்தின் அந்தஸ்து: பாறைத் தோட்டம் தனிமையாக அமைவது அன்று. பொதுத் தோட்டங்களிலோ, வீட்டுத் தோட்டங்களிலோ ஒரு பகுதியாக ஓரிடத்தில் அமைவது அது. உபவனத்

தின் அழகை மிகுதிப்படுத்திக் காட்டும் அங்கங்களுள் அது ஒன்று என்று கூறவேண்டும். உபவனத்தில் வேறு செடி கொடிகளை உண்டுபண்ண முடியாத இடத்திலும், மறைக்க வேண்டிய பகுதியிலும் இந்தப் பாறைத் தோட்டத்தை உண்டாக்க வேண்டும் என்று தோட்டக்கலை அறிஞரில் சிலர் கருதுகிறார்கள். இக்காலத்தில் பாறைத்தோட்டம் (1) நிழலில் அமைவது, (2) மலரிலி வீடுகளில் (Fern Houses) அமைவது, (3) வறட்சியான இடங்களில் அமைவது, (4) குளிர்ப் பிரதேசத்தது-என நான்காக வகைப்படுத்தப்படும். நம் தென் தேசத்தில் நாம் இந்த வகைகளைப் பொருட்படுத்த வேண்டுவதில்லை. ஓர் இடத்திலேயே இவற்றுள் இரண்டு மூன்றை அமைத்தல் கூடும்.

பாறைத் தோட்டத்தின் கூறுகள்: பாறைத் தோட்டம் ஒரு மலைப்பிரதேசத்தின் சிறிய உருவத் தோற்றமாகும். எனவே மலைப்பிரதேசத்திலுள்ள எல்லாம் பாறைத் தோட்டத்தில் அமைவது அழகைத் தருவதாகும். இரண்டொரு கணவாய்கள், சில மலைக் குவடுகள், ஏறுபடிகள், நீர்ச்சுனை அருவி, மலைப்பிரதேசத்தில் விவசாயம் செய்யும் திருத்தப்பட்ட பகுதி, இயற்கைக் காட்டுப் பிரதேசம் மலை விலங்குகளின் சுண்ண உருவங்கள்—இத்தனையும் பலவித மலர்ச்செடிகளுடன் பாறைத் தோட்டத்தில் இருக்கலாம். இவற்றுள் வசதியாக உள்ள இரண்டு மூன்றை மட்டும் வைத்துக்கொள்ளலாம். இக்காலத்தில் நம்மவர் இவைகளைக் கவனித்துத் தோட்டம் அமைப்பது காணேம்.

நம் நாட்டில் பழங்காலப் பாறைத் தோட்டங்கள்: பாறைத் தோட்டம் முதல் முதல் ஆதியில் இந்தியாவிலேயே தோன்றிற்று எனல் பொருந்தும். இதற்கு வடமொழி இலக்கியங்களிலும், தமிழ் இலக்கியங்களிலும் நிரம்ப ஆதாரங்கள் உள்ளன. தமிழர் பாறைகளைச் செயற்கை முறையில் குன்றுபோல் குவித்து அமைக்கும் அமைப்பைச் செய்குன்று என்பர். இவை கட்டுமலை என்றும் வழங்கும். மணிமேகலை என்னும் நூல் இக்குன்றினை இடுங்கற் குன்றம் என்று கூறும். 'இடப்பட்ட கற்களை உடைய குன்றம்' என்பது இத்தொடரின் பொருள். இவை ஏறுவதற்குச்சிரமம் தரக்கூடிய அவ்வளவு உயரமாகவும் இருந்தன என்று நமக்கு ஆதாரம் கிடைக்கிறது. சில பெண்கள் அரண்மனைப் புறத்திலிருந்து ஒரு கட்டுமலையைக் காணவந்தார்கள். அவர்கள் அதன் மேல் ஏறினார்கள். ஏறும்போது உயர மிகுதியினால் அவர்களுக்கு இடுப்புவலி எடுத்து விட்டதாம்! விருப்பம் அதிகமாக இருந்ததனால் வலியை அவர்கள் பொருட்படுத்தவில்லை. அழகிய மாணிட மகளிர் கட்டுமலைமேல் இருந்த தோற்றம் வரையரமகளிர் (மலைத்தெய்வ மங்கையர்) போன்று இருந்ததாம்.

மருங்குல் நோவ விரும்புபு விரைந்து
மைவரை மீமிசை மகளிர் போலச்
செய்வளை மகளிர் செய்குன் றேறி

என்று இக்காட்சியைப் பெருங்கதை என்ற நூல் (உ-7; 29-31) கூறுகிறது.

கட்டுமலைகளாகிய செய்குன்றுகள் உபவனத்தின் ஒரு பகுதியாக இருந்தனவாம். முக்கியமாக

அரண்மனையைச் சார்ந்த தோட்டங்களுக்கு இவை மிகவும் அவசியமாம்.

சீவக சிந்தாமணி என்னும் நூலில் (கவி, 149) ஓர் இடத்தில் அரண்மனைத் தோட்டத்தில் செய்குன்றின் வருணனை கூறப்படுகிறது. அது ஒரு திரைச் சீலையின் வருணனையோ என்று சந்தேகிக்குமாறு அமைந்துள்ளது. அதனை விளக்கவந்த உரையாசிரியர் நச்சினார்க்கினியர், 'இதனைச் சித்திரம் என்னிற் கோயிற்கு அங்கமாகிய செய்குன்று கூறிற்றிலராவர்' என்று கூறியுள்ளார். இந்த வாக்கியத்தினால் அரண்மனைத் தோட்டத்துக்கு இடுங்கற் குன்றம் அவசியம் என்பது புலனாகும்.

செய்குன்றுகளின் காட்சி தமிழ் நூல்களில் நன்றாக வருணிக்கப் படுகிறது. ஒரு பூஞ்சோலையை வருணிக்குமிடத்தில்,

அணிகிடந் திமைக்கும் அரும்பெரும் கோயிலுள்
கல்பிறங் கடுக்கத்து நற்குறி யாவையும்
படுகற் சுரமும் பாறையும் படுவும்
அருவி அறையும் உருவ ஏனலும்
குழியும் குவடும் வழிநீர் அசும்பும்
தேரிமலர்க் காவும் உருவின வாக
அமைக்கப் பட்ட செயற்கரும் செல்வத்து
மைதவழ் சென்னிக் கைசெய் குன்றொடு
வளமரம் துறுமிய இளமரக் கா

(பெருங்கதை, க. 46 ; 265—88.)

[ கோயில்-அரண்மனை. கல்பிறங்கு அடுக்கம்-மலை படுகல்-படி. சுரம்-கட்டாந்தரை. படு-நீர்மடு. உருவ ஏனல்-அழகிய தினை. துறுமிய-அடர்ந்த.]

101004

என்று ஒரு புலவர் செய்குன்றில் இருக்கவேண்டிய பொருள்களோடு அதனை வருணித்திருக்கிறார். அது அரண்மனைக்குள் உள்ளதென்றும், அக்குன்றில் கற்கள் செறிந்த பாலை நிலமும், நீர்ச்சுனையும், அருவியும், தினைப்புனமும், கணவாயும், சிகரமும், நீர் வழிந்தோடும் இடமும், மலர்ச்சோலையும் இருக்கின்றன வென்றும் இவ்வடிகள் குறிக்கின்றன.

பழங்காலத்தில் தமிழ் நாட்டில் பாறைத் தோட்டங்கள் சிறப்புற்றிருந்தமைக்கு மேலே காட்டிய செய்திகள் ஒரு சில உதாரணங்களே யாகும். இனி, பாறைத் தோட்ட அமைப்பைப் பற்றி ஆராய்வோம்.

ஏற்ற இடம்: பாறைகள் மிகுதியாக உள்ள இடங்களிலேயே பாறைத் தோட்டம் அமைப்பது வசதியாக இருக்கும். பெருங்கற்கள் அகப்படாத இடங்களில் அக்கற்களை வெகு தூரத்திலிருந்து கொண்டு வருவது சாத்தியமாகாது. அதற்கு மிகுதியான பணம் வேண்டுமே! இதனை உத்தேசித்துக் கருங்கற்களே இல்லாத இடங்களில் தேய்ந்துபோன செங்கற்களாலும் இடிந்த ஸிமெண்ட் கட்டடத் துண்டுகளாலும் பாறைகள் போன்ற மேட்டை உண்டு பண்ணுவதை அறிஞர் சிலர் உபாயமாகக் கூறுவார்கள். இவ்விதமான செய்குன்றுகள் அவ்வளவாக அழகைத் தரமாட்டா; எனினும் 'பாறைத் தோட்டம் இல்லையே' என்ற குறையைப் போக்க இவையும் அவசியந்தான். குண்டுக் கற்கள் அகப்படும் பிரதேசங்களில் அவற்றைக் கொண்டே செய்குன்றை அமைத்துக் கொள்ளவேண்டும்.

சரிவு நிலங்கள் பாறைத் தோட்டத்துக்கு ஏற்றவையாகும். ஆற்றங்கரை, ஏரி ஓரம் முதலிய சரிவுகளில் பாறைகள் இருக்கும் இடம்பார்த்து இவைகளை அமைக்கலாம். ஊருக்குப் பொதுவான உபவனங்களை அமைக்கும் போது நகரசபையினரும் வேறு ஸ்தல ஸ்தாபனத் தலைவரும் இவ்வித இடங்களை ஏற்றனவாகக் கொள்ளலாம்.

பங்களாக்களில் தனியாகத் தோட்டம் போடுகிறவர்கள் பாறைத் தோட்டத்தை ஒதுக்குப் புறமான ஓர் இடத்தில் அமைக்கலாம். செய்குன்றுகள் கட்டடத்தையோ முக்கியமான வேறு தூரக் காட்சி ஒன்றையோ மறைத்தல் ஆகாது. இதனை மனத்தில் வைக்க வேண்டும். கோடைக்காற்றும் புயல்காற்றும் பாதிக்காத இடமாக இருக்க வேண்டும்.

அமைப்பு முறை: கல்லின் ஓரங்கள் கூர்மையாக இருக்கக் கூடாது. ஏறத்தாழ உருண்டிருக்கிற கற்கல் ஏற்றவை. கருங்கற்களே நல்ல காட்சி தரக் கூடியன. நிலத்தைச் சரிவாக்கி அடியில் பெருங் கற்களை நிறுத்தி, சரிவின்மேலே சிறு கற்களை வைக்கவேண்டும். சிறு கற்கள் அதிகமாக இருக்கக் கூடாது. இடையிடையே காலி இடம் விட்டு மலையை உண்டுபண்ண வேண்டும். காலியிடங்களை மண்ணைப் போட்டு நிரப்பி, தூரப் பார்வைக்கு எல்லாம் ஒரு குன்றுபோல் தோன்றுமாறு செய்ய வேண்டும். மண்போட்டு நிரப்பிய இடங்கள் செடி வளருவதற்கு ஏற்ற இடங்களாகும். கல்லை முக்கால்

பங்கு நிலத்தில் புதைத்தால்தான் பின்னால் அது சரிந்து விழாமலிருக்கும்.

குன்றின் உயரம் 5 முதல் 10, 15 அடி வரை இருக்கலாம். பரப்பும் உயரமும் அது அமையும் உபவனத்தின் மொத்த விஸ்தீரணத்தைப் பொறுத்துள்ளன; கல் கிடைக்கும் அளவையும் பொறுத்துள்ளன. அதனால் இங்கே திட்டமாக ஒன்றும் கூறுவதற்கில்லை.

நீங்கள் மலைப் பிரதேசத்துக்கும் பெரிய குன்றுகளோ, பாறைக் குவியல்களாகிய கரட்டு நிலமோ உள்ள இடங்களுக்கும் போயிருக்கலாம். அங்கே மேட்டிடங்களில் என்ன என்ன செடிகள் வளர்ந்திருக்கின்றன என்று கவனித்து அக் காட்டுச் செடிகளை (Wild Plants) நாம் பாறைத் தோட்டங்களுக்கு உபயோகித்துக் கொள்ளலாம். இவை பாறைத் தோட்டங்களில் நன்றாக வளரும். இந்த இடங்களில் பசுமை வருஷ முழுவதும் அழியாத செடிகளும், மலர்ச் செடிகளும் இருக்கின்றன. காட்டு மல்லிகை, களாச்செடி, கள்ளிவகை முதலியவை இந்த இனத்தைச் சேர்ந்தன. இவற்றைக் கொண்டு தோட்டத்தை எளிதில் சமாளிக்கலாம்; அழகும் குறையாது; செலவும் குறைச்சல்.

செடிகளில் நிரந்தரமாகப் பல வருஷங்கள் உள்ளவை சில; ஒரு வருஷமோ, அல்லது இரண்டொரு பருவமோ இருந்து அழிபவை மற்றும் சில. முன்னவையே சிறந்தன. பின்னவைகளை அடிக்கடி மாற்றவேண்டிய சிரமமும் செலவும் ஒரு புறம்

இருக்க, மாற்றப்பட்ட நிலையில் செய்குன்றின் அழகும் சில நாள்வரை கெட்டுவிடுதல் கூடும். கள்ளி இனம், பிரண்டை இனம், முள்ளு மரங்கள், முட்புதர்கள் முதலியன நம் நாட்டுத் தற்காலப் பாறைத் தோட்டங்களில் சகஜமாகக் காணப்படு பவை ஆகும்.

நடுகை: செய்குன்றில் அடிவாரம், சரிவு, உச்சி என மூன்றிடங்கள் உள்ளன. இம் மூன்றிடத்தும் மண்ணின் செறிவுகள் (Pockets) உண்டு. செடிகளை இந்த மட்செறிவுகளில் நடவேண்டும். உயரமாக வளராத செடிகளை அடிவாரத்திலும், நடுத்தரமான வற்றையும் படர் கொடிகளையும் சரிவிலும், உயர முள்ளனவற்றை உச்சிவரையிலும் நடுவதுதான் அழகைத் தரும் முறையாகும். பலவித ரகங்களை உபயோகித்தல் அவசியம். மலர்ச் செடிகள், இலைத் தாவரங்கள், கள்ளி, புல்வகை முதலியன எல்லாம் கலந்திருக்கலாம். மட்செறிவைத் தோண்டி அந்த அந்தச் செடிக்குத் தகுந்த எருவை அதில் இட்டு வெறும் தரையில் பயிர் செய்வது போலவே இங்கே யும் செடிகளை நடவேண்டும்.

தாழ்வரையிலும் பக்கவரையிலும் பாறைகள், நிழலைத்தரும் பிரதேசங்கள் இருக்கலாம். கடும் வெயில் படாத இடங்கள் நிழற் பிரதேசங்கள் எனப்படும். இவை குளிர்ந்த இடங்கள். இங்கே உள்ள மட்செறிவுகள் நீண்ட காலம் ஈரத்தை விடாதவை. அதிக ஈரம் அவசியமான, தண்மையை விரும்பும் செடிகளை இந்த இடங்களில் நடலாம். வெயிலையும் வெளிச்சத்தையும் மிகுதியாக விரும்பு

வனவற்றை வெளியாக உள்ள உச்சிவரையிலும், வெயில் நன்றாகப்படும் பக்கவரையிலும் நடலாம். நிழல் இன்னும் அதிகமாக வேண்டுமானால் ஓரிடம் நிழல் தரும் பெரிய மரத்தை வளர்த்து மலையின் ஓர்பால் நிழலை உண்டாக்கலாம். மலைச்சரிவில் வடக்கும் மேற்கும் காற்றாலும் வெயிலாலும் தாக்கப்படும் பாகங்கள். தெற்கும் கிழக்கும் காற்றடக்கமானவை. கடும் வெயிலும் இங்கே இல்லை. செடிகளைப் பயிர் செய்யும்போது இத்தன்மைகளை அறிந்து கொண்டு அதன் அதனுக்கு உகந்த இடத்தில் நடவேண்டும்.

பெரிய மரங்களைப் பாறைத் தோட்டத்தில் நடுவதனால் அழகு கெட்டுவிடும். ஆகவே அவற்றைத் தொலைவில வேறு அழகினை அவை மறைக்காதபடி நடவேண்டும்.

பாதுகாப்பு: பாறைத் தோட்டம் போடுகிறவர்கள் கவனிக்க வேண்டிய பாதுகாப்பு முறைகளாவன: மண் மழை நீரால் அடித்துப் போகாத வகையில் மேற்கொள்ளும் முயற்சி முக்கியமானது. மட்செறிவுகள் பள்ளமாகவும் சுற்றியும் பாறை அல்லது கல்மேடுகளுமாகக் குன்றை அமைக்கும் போதே கவனித்து அமைத்தால் மழையினால் மண்ணுக்கு அழிவு ஏற்படாது. பொடிக் கற்களைக் கொண்டு, மண்ணை நன்றாகக் கெட்டித்து வைத்தாலும் அழிவு ஏற்படுவதில்லை.

பாறைச் செடிகளுக்கு ஜலம் மிகுதியும் பாய்ச்ச வேண்டியதில்லை. வறட்சிக் காலங்களில்

மட்டும் நீரை வேண்டிய அளவு ஊற்ற வேண்டும். களைச்செடிகள் இல்லாதபடி செடிகளைப் பார்த்துக் கொள்ளவேண்டும்.

பாறைச் செடிகளை அரிக்கும் பூச்சியினங்கள் குறைவு. நம் நாட்டில் அவை இல்லை என்றே கூறி விடலாம். நோய்களும் அப்படியே. ஆகவே இத் துறைகளிற் பாதுகாப்பு அவசியமில்லை.

பாறைத் தோட்டத்தைப் பற்றிக் கூற வந்த இடத்தில் அதற்குத் தொடர்பாக உள்ள ஒரு செய்தியை இங்கே குறிக்கவேண்டுவது அவசியம்.

ஓர் ஊரில் ஊருக்கு வெளியே பாதை ஓரமாக ஒரு பொட்டல் காடு இருந்தது. பயிர் பச்சை விளைவு எப்பொழுதும் இல்லாத மேட்டுப் பிர தேசம் அது. அந்த இடத்தில் சுமார் மூன்று ஏக்கர் விஸ்தீரணத்தில் செம்பாறை ஒன்று அழகிய காட்சியைத் தந்து வந்தது. சூழ்வு சரியில் லாமையினால் அப்பாறையின் அழகை ரசிகரே அல்லாமல் சாதாரண மக்களால் அனுபவிக்க இயலவில்லை. மக்கள் நடமாட்டமில்லாத இடமாக அது இருந்துவந்தது. இந்தப் பாறைப் பிர தேசத்துக்குக் கால பலத்தால் அதிர்ஷ்டம் ஏற்பட்டது. நகரசபையார் அவ்வூருக்குக் குழாய் வசதி அமைக்க எண்ணினார்கள். நீர்த் தேக்கத்தை அப்பாறையின்மேல் கட்டினார்கள். ஆற்று நீர் இயந்திர சகாயத்தால் மேட்டுப் பிரதேசமாகிய அந்தத் தேக்கத்துக்குப் 'பம்ப்' செய்யப்பட்டது. தேக்கத்திலிருந்து குழாய்கள் நகரின் பல பாகங் களுக்குக் கிளைத்துச் சென்றன.

தொட்டியில் நீர் மிகுந்து போவதை வேறு எந்த வகையில் உபயோகிக்கலாம் என்று ஓர் அறிவாளி யோசித்தார். அவருடைய அகக் கண்களுக்கு அவ்வண்ணம் அந்தப் பிரதேசமே ஓர் அழகிய பூஞ்சோலையாக உருக்கொண்டு காட்சியளித்தது. அதன் விளைவினால் பாறை முழுவதும் ஐந்தாறு அடி மண்போட்டு மூடப்பட்டது. பல இடங்களில் மண் மேடைகள் (Terraces) உண்டாக்கப்பட்டன. படிகள் ஒழுங்காக ஏற்படுத்தப்பட்டன, பாறையைச் சுற்றிலும் பல கஜ தூரம் நல்ல மண் போட்டுத் தோட்ட நிலம் உண்டாக்கப்பட்டது. அவ்வளவும் இப்பொழுது ஒரு சிங்காரத் தோட்டம்; பசுமை உமிழும் காட்சி; தோட்டக்கலை ரசிகர் தென்னிந்தியாவில் காண வேண்டிய இடம்; மாதிரியாகக் கொள்ளத்தக்க சூழல். அதுவே ஈரோடு என்னும் ஊரிலுள்ள பேய்ச்சிப்பாறையாகும். 1915-ஆம் வருஷத்துக்கு முன்பு பேய்ச்சிப்பாறையைக் கண்டிருப்பவருக்கு அதன் தற்காலப் புன்னகை எளிதில் விளங்கும். இதுவும் ஒருவகைப் பாறைத் தோட்டந்தானே?

# 16. சில உபவனச் செடிகள்

சிங்காரத் தோட்டத்துக்குரிய செடிகள் இத்தனை என்று கணக்கில் அடங்கமாட்டா. எல்லாவற்றையும்பற்றி இங்கே எழுதுவதும் சாத்தியமில்லை. தென்னிந்தியாவில் எங்கும் சுலபமாக வளர்க்கக்கூடிய சில செடிகளைப்பற்றி மட்டும் சுருக்கமாகக் கீழே விவரிப்பது அவசியமென நினைக்கிறேன். வேறு பல செடிகளைப்பற்றியும் தெரிந்துகொள்ள விரும்புவோர் செடி விற்பனையாளர், விதை விற்பனையாளர் பிரசுரித்திருக்கும் விலைப் பட்டிகளை வருவித்து அவைகளிலிருந்து எளிதில் அறிந்துகொள்ளலாம்.

## செம்பருத்தி (Hibiscus)

இது சப்பாத்தி, பருத்தி இனத்தைச் சேர்ந்தது; உபவனங்களுக்கு மிகுந்த அழகைத் தருவது. செடி புதரைப்போல் 6 முதல் 8 அடி உயரம் வளரக் கூடும். மலர்கள் வடிவிலும் நிறத்திலும் பலவகைப் படும். செம்பருத்தி என்ற பெயர் வழங்கினும் தற்காலத்தில் சிவப்பு, மஞ்சள், வெள்ளை, ஊதா கலந்த சிவப்பு, மஞ்சளிடங்கலுடைய சிவப்பு முதலிய நிற மலர்கள் இச்செடிகளில் உண்டாகின்றன. ஒரே செடியில் ஒரு மலர் காலையில் மஞ்சளாகவும் மாலையில் ஆரஞ்சு அல்லது சிவப்பாகவும் இருப்பதும் உண்டு. ஒற்றை இதழ் வட்ட மலர் (Single), அடுக்கிதழ் வட்ட (Double)மலர் என்பன வேறு வேறு இனங்களாகும்.

உஷ்ண நாடுகளில் இது நன்றாக வளரக்கூடும். விதைகள் இல்லாததால் பதிய முறைப்படியோ

வெட்டுக் கொம்பு நடுதல் முறைப்படியோதான் இதனை விருத்தி செய்ய முடியும். இவ்விஷயத்தில் செம்பருத்தியானது கனகாம்பரத்தை ஒத்திருக்கிறது. கனகாம்பரம் என்பது பொன்னிறத்தைக் குறிக்குமேனும் இதில் நீலம், ஆரஞ்சு, சிவப்பு, வெள்ளை, ரோஜாநிற மலர்வகைகளும் இப்பொழுது தோன்றியுள்ளன அல்லவா?

## செவ்வந்தி அல்லது சாமந்தி

இம்மலரை அறியாதவர் இல்லை. வெள்ளை, மஞ்சள் நிற மலர்களை நாம் பார்த்திருக்கிறோம். உள்ளங்கை அகலம் மலரக்கூடிய செவ்வந்தியை நாம் 'துலுக்க சாமந்தி' என்கிறோம். சாமந்தி இனத்தில் ஓரிதழ் வட்டமும், அடுக்கிதழ் வட்டமும் உண்டு. உபவனத்துக்கு இது அலங்காரச் செடியாக ஓரங்களிலும், பாத்திகளிலும், சட்டிகளிலும் காட்சியளிக்க யோக்கியமானது.

இம்மலர்களுக்கு நம் நாட்டில் வியாபாரக் கிராக்கி இருந்து வருவதனால் பலர் தனியாகச் செவ்வந்தித் தோட்டம் போடுவதும் உண்டு. ஆனால் இம்மலர்க்கலையின் நுணுக்கங்களைப் பலர் அறியவில்லை.

செவ்வந்தியில் தண்டின் நுனியில் முதல் மலர் தோன்றும். இதனை 'உதயம்' என்று கூற நான் விரும்புகிறேன். இது தோன்றியபின் பக்கக் கிளை தோறும் ஒவ்வொன்றின் நுனியில் ஒவ்வொரு மலர் தோன்றும். இம்மலர்களெல்லாம் செவ்வந்தி

யாம் அரசியின் பலவேறு முடிகள் எனப்படும். உதயம் வரும் நுனியைக் கிள்ளிவிட்டால் செடி உயரமாக வளர்வது தடைப்பட்டுவிடும். அதற்குப் பதிலாகச் செடியில் கிளைகள் அதிகமாகும். கிளைகளின் நுனியையும் கிள்ளிவந்தால் ஒவ்வொரு கிளையிலும் சில பக்கக் கிளைகள் தோன்றும். ஒவ்வொரு கிளையிலும், பக்கக் கிளையிலும் கிளைக்கு ஒவ்வொரு மலர் தோன்றக்கூடும். மலர்ப் பெருக்கத்துக்கு நுனிகளைக் கிள்ளுதல் ஒரு முறை. நுனிகளை மிகுதியாகக் கிள்ளுவதால் அதிக மலர்கள் தோன்றுமாயினும் அம்மலர்கள் அளவில் சிறுத்து விடக்கூடும். ஆகையால் சில கிளைகளை மட்டும் கிள்ளுதல் போதும். மலரைப் பறித்துக்கொண்டு நுனியைக் கிள்ள வேண்டும். வெயில் மிகுதியாகப் படப்பட, செடி செழுமையைப் பெறும். இவை எல்லாம் நுட்பமான கலையறிவாம்.

செடியின் அடியில் தோன்றும் கன்றுகளில் ஒவ்வொன்றும் தனிச் செடியாதல்கூடும். இனப் பெருக்க முறைகளில் சுலபமானது இதுவே.

செவ்வந்தியில் வாசனையே இல்லாத மேல் நாட்டு ரகங்களுள் இருபதுக்குமேல் காணப்படுகின்றன.

## பால்ஸம் (Balsam)

தோட்டத்துக்கு மிகுந்த அழகைத் தரும் செடிகளில் பால்ஸம் ஒன்று. இதிலும் ஒற்றையிதழ் வட்டம், அடுக்கிதழ் வட்டம் உண்டு. வெயில் மட்டும் மிகுதியாக இருந்தால் வருஷம் பூராவும் பால்ஸம்

மலரக் கூடியது. இலைகளைக் கிள்ளுவதனால் மலர்கள் அதிகமாகின்றன. நீர் எருவினால் மலர்கள் பெரியவையாகின்றன. ஒரு செடியின்மேல் மற்றொன்று படாதபடிப் பயிர் செய்தால் மலர்ப் பிடிப்பு அதிகமாகிறது. இச்செடி 9 அங்குலம் முதல் 30 அங்குலம் வரையில் உயரமாக வளரும். சட்டிகளுக்கும், பாத்திகளுக்கும், அலங்காரமாகப் பாத்திரங்களில் மேஜையின்மேல் வைப்பதற்கும் பால்ஸம் ஏற்ற மலராகும். விதைகள் மூலம் இதனை விருத்தியாக்கலாம்.

## கோஸ்மஸ் (Cosmos)

வருஷம் பூராவும் மலரக்கூடியது இது. 2½ முதல் 5 அடி வரையில் உயர்ந்து வளரும். விதைகள் போட்டு இதனை வளர்க்க வேண்டும். உபவனங்களில் இப்பொழுது இது சாதாரணமாய்விட்டது. கோஸ்மஸ் மலர்கள் பல நிறங்களிற் காணப்படுகின்றன. இது மலர்ப் பாத்திகளுக்கும் ஓரங்களுக்கும் ஏற்றது.

## கார்னேஷன் (Carnation)

'முடி சூட்டு' என்பது இதன் பொருள். மலைப் பிரதேசங்களிலே நன்றாக வளரக்கூடிய இது அதிக வெயில் இல்லாத தாழ்ந்த பிரதேசங்களிலும் இப்பொழுது வளரக்கூடியதாக இருக்கிறது. செடியின் உயரம் 2 அடி. விதைகளால் பயிர் செய்யக் கூடியதாயினும் பதிய முறையும் வெட்டுக் கொம்பு முறையும் சிறந்த இனப் பெருக்க முறைகளாகும். பாத்

திகள், ஓரங்கள், சட்டிச் செடிகள் இவைகளுக்கு இது ஏற்றது.

### ஆஸ்டர் (Aster)

மலர்ப் பிடிப்புக் காலத்தில் செடி முழுவதும் ஜகஜ்ஜோதியாக விளங்குவதனால் சிங்காரத் தோட்டங்களுக்கு இது நிரம்பச் சிலாக்கியமானது. செடி 15 முதல் 18 அங்குல உயரம் வளரக்கூடும். பாத்திகளிலும் சட்டிகளிலும் வளர்க்கக் கூடிய செடிவகையுள் ஆஸ்டரும் ஒன்று. இதன் மலர்கள் நீண்ட நாள் வாடாமல் இருப்பதனால் மேஜை அலங்காரத்துக்கு உபயோகப்படுவதாகும். விதைகள் மூலம் பயிராகக் கூடியது இது. தோட்டக் கலை நிபுணர்களின் கலைத் திறமையினால் இக்காலத்தில் மஞ்சள் நிறம் ஒழிந்த மற்ற நிறங்களையுடைய ஆஸ்டர் மலர்களை நாம் காணலாம்.

### ஆன்டிகோனன் (Antigonan)

கொடி யினத்தைச் சேர்ந்தது இது. நிலத்தில் புல் தரையில் படரவிடுவதற்கும், பட்டுப்போன மரம், பச்சை மரம், கொடி வளைவு, பந்தல் முதலியவற்றின்மேல் படர விடுவதற்கும் இது சிலாக்கியமானது. சிவப்பு, ஊதா, வெள்ளை நிறங்களைத் தரும் மலர்க் கொடிகள் தென்னிந்தியாவில் சர்வ சாதாரணமாக எங்கும் வளர்ந்துவரக் கூடியவையாகும். சென்னை நகரின் சுற்றுப்புறங்களில் இது மிகுதியாகக் காணப்படுகிறது. மழைக்காலத்துக்குப் பின் கார்த்திகை, மார்கழி, தை மாதங்களிலும், கோடை மழைப் பருவமாகிய சித்திரை

வைகாசியிலும் இரண்டு பட்டங்கள் கொடிகள் மலர்களால் விளக்கமடைகின்றன. விதைகளாலும் வெட்டுக் கொடிகளாலும் புதிய செடிகளை உண்டாக்கலாம்.

## கானு (Canna)

இதனைச் சில இடங்களில் கானு வாழை என்கிறார்கள். இச் செடி மலராத போது தூரப் பார்வைக்கு வாழைக் கன்றை ஒத்திருக்கும். மலர்களில் சிவப்பு, மஞ்சள், ஊதா, ஆரஞ்சு, வெள்ளை முதலிய பல நிறங்களுண்டு. பாத்திகளுக்கு ஏற்ற தாவர வகையுள் கானு முக்கியமானதாக இருப்பதால் இதனை ஒவ்வொரு தோட்டத்திலும் காணலாம். பயிர் முறையும் எளிதே. ஒரே பாத்தியில் ஒரு ரகக் கானுக்களைப் பயிர் செய்வதும், பல ரகங்களைப் பயிர் செய்வதும் அவரவர்களுடைய விருப்பத்தைப் பொறுத்த இரு வேறு வழக்கங்களாக இருக்கின்றன. மிகுந்த வெயில் இல்லாத எந்தப் பருவத்திலும் இது நன்றாக வளரக்கூடியது.

விதைகளை இரண்டு நாள் ஜலத்தில் ஊற வைத்திருந்து நட்டுப் பயிராக்குவது ஒரு முறை. ஆனால் வழக்கமாக உள்ள முறை பக்கக் கன்றுகளைப் பேர்த்து நடுவதுதான்.

கானு, கலடியம், தளியர் முதலிய செடிகள் வேர் கிழங்கு முதலியவற்றைக் கொண்டு எளிதில் பயிர் செய்யத்தக்கவை. இந்த வேர்களை நீண்ட

நாள் ஈரம் படாமல் வைத்திருந்து நமக்கு வேண்டிய பருவத்தில் நட்டுப் புதிய செடிகளை உண்டுபண்ணிக் கொள்ளலாம். இந்த இனங்களில் ஒரு செடி பலன் கொடுத்து அதன் காலம் தீர்ந்துவிட்டால், அச் செடிக்கு ஜலம் ஊற்றுவதை நிறுத்தி அதனை வாடச் செய்ய வேண்டும். செடி முற்றும் வாடிய பிறகு அதனைத் தரையிலிருந்து ஆறங்குல உயரம் விட்டு அறுத்து எறிந்துவிட வேண்டும். பிறகு பாத்திக்கு ஜலம் பாய்ச்சாமல் இருந்தால் அடியி லுள்ள வேர் கெடாமல் அங்கே நீண்டநாள் இருக் கும். நமக்கு வேண்டும்போது அதனைத் தோண்டி எடுத்து இஷ்டமான இடத்தில் நட்டுவிடலாம். தண்ணீர் பட்டதும் இதற்குப் புத்துயிர் வந்து விடுகிறது.

இவ்விதச் செடிகள் சட்டிகளில் வளர்க்கப் பட்டால் கிழச்செடிகளை வாடவிட்டு அறுத்தபின் சட்டியை ஈரம் படாத இடத்தில் கவிழ்த்து வைத்து விடவேண்டும். கறையான் பிடிக்காமல் மட்டும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

பழஞ்செடிகளின் வேர்களையும் கிழங்கையும் தோண்டி எடுத்து மணலிற் புதைத்து வைத்திருந்து வேண்டிய சமயம் நடுவதும் ஒரு முறை.

மழைக்காலத் தொடக்கத்தில் இரண்டடி ஆழ மான பாத்திகளைச் செய்து அவற்றில் நிரம்பத் தொழு வுரத்தையும், தழை மட்கையும் சேர்த்துக் கானுவைப் பயிரிடவேண்டும். எரு மிகுதியாக இல்லா விட்டால் கானு நன்றாக வளராது.

### கலடியம்

சேம்பின் இனத்தைச் சேர்ந்த இலைத் தாவரங்களில் கலடியம் ஒன்று. சேம்பின் இலையையும் தண்டையும் இதன் இலைகளும் தண்டும் ஒத்திருக்கும். இலைகளில் நான்கு ஐந்து நிறங்கள் உண்டு. வேரின் பாகத்தினுல் உண்டுபண்ணப் படுபவை இவை. இனப்பெருக்க முறை கானுவுக்குக் கூறிய படியே. இவைகள் சட்டிகளில் வளர்க்கத் தக்கவை. மர நிழல்களில் பாத்திகளிலும் வளர்க்கலாம். இச்செடிக்கு வெயிலே கூடாது. ஆனல் சூரிய வெளிச்சம் மிகுதியாக வேண்டும். பாத்தியில் எப்பொழுதும் ஈரம் இருந்து வரவேண்டும். தழை மட்கு, சாண எருக்களோடு கரிப்பொடியையும் இச்செடிகள் விரும்புகின்றன. செப்டம்பர் மாதத்திலிருந்து வெளிச்சம் சில மாதம் அதிகமில்லாததால் இதன் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது.

### தளியா (Dahlias)

இதற்கு மழைக்காலம் பகை என்று தோன்றுகிறது. மற்றப் பருவங்களில் நன்ருக வளருகின்றது. மழைக் காலம் முடிந்தவுடன் இதனைப் பயிர் செய்யவேண்டும். ஒற்றை இதழ் வட்ட மலர்களும் அடுக்கிதழ் வட்ட மலர்களும் வேறு வேறு இனங்கள். விதைகள், வெட்டுக் கொம்புகள், கிழங்குகள் மூலம் பயிராகக் கூடியது இது. பின் இரண்டு முறைகளே சுலபமானவை. கார்த்திகை மார்கழியில் நட்டால் உத்தேசமாக, மாசி முதல் மழைக் காலம் வரையில் செடியில் மலர்கள் இருந்துவரும்.

நீலம் ஒழிந்த நிறங்களில் தனியா மலர்களைப் பார்க்கக்கூடும். பாத்திகளுக்கும் சட்டிகளுக்கும் இவை ஏற்றவை.

## காலைச் செவ்வி (Morning glory)

ஏறுகொடி வகையைச் சேர்ந்தது இது. இதன் மலர்கள் காலையில் மலர்ந்து நடுப் பகலிற் குவிந்து விடுவதனால் இப்பெயர் பெறும். மலர்கள் நீலம், சிவப்பு முதலிய நிறங்களை யுடையன. விதைகள் மூலம் இதனை விருத்தி செய்யவேண்டும். விதைத்த இரண்டு மாதத்தில் மலர் தோன்றும். கொடி பல வருடப் பயிராகும். இதனைக் கட்டடங்களின் கிழக்குப் பக்கத்தில் பயிர் செய்தால் காலைச் சூரிய னுடைய அநுகூலங்கள் இக் கொடிக்குக் கிடைத்தல் கூடும்.

## போகேன் வில்லா (Bowgainvillea)

இது சாதாரணமாக ஏறு கொடியைச் சேர்ந்தது. புதர்ச் செடியாகவும் இதனைப் பழக்க முடியும். வீட்டுத் தோட்டங்களுக்கும் பொது விடங்களுக்கும் நிரம்ப முக்கியமான அலங்காரமாக உள்ளது இது. இதனைப் புதர்ச் செடியாகவும், வேலியாகவும், ஓரமாகவும்,வளைவுப்பந்தலின் அலங்காரமாகவும் அமைத்தல் எளிதாகும். மலர்கள் சிவப்பு, ஊதா கலந்த சிவப்பு, ஆரஞ்சு முதலிய நிறங்களையுடையவை. இவைகளுக்கு வெயில் மிகுதியாக வேண்டும். ஈரமே இல்லாமல் நீண்ட நாள் இக்கொடி ஜீவிக்கும். குதிரை லத்தி பாத்திக்குச் சூட்டைத் தருவதனால் ஏற்ற எருவாகும். களிமண்

நிலமாக இருந்தால் குதிரை லத்தியும் சுண்ணும்புத் தூளும் மண்ணோடு சேர்க்கப்படுவது மிகவும் அவசியம். தழைகளை உருவி விட்டால் மலர்ப்பிடிப்பு அதிகமாகும். வெட்டுக்கொம்புகளால் பயிரிடலாம் என்றாலும் பதிய முறையே எளிதாகும்.

## அழிவிலி (Amaranthus)

இந்தச் செடி வகையில் இலைச் செடிகளும், மலர்ச்செடிகளும் உண்டு. ஒன்றிலேயே இலையழகும் மலரழகும் காணப்படும் ரகமும் உள்ளது. இலைகளில் பச்சை, சிவப்பு, மஞ்சள், மஞ்சளும் சிவப்பும் கலந்த பலநிறவகைகள் உண்டு. இவற்றை விதைகள் மூலமாகவும் வெட்டுக் கொம்புகள் மூலமாகவும் பயிர் செய்யலாம். முன் முறையே சகஜமாக உள்ளது. செடி 1½ முதல் 3 அடி உயரம் வரையில் வளரும். ஓரங்களுக்கும் பாத்திகளுக்கும் ஏற்றவை இவை. வெயிலையும் ஈரத்தையும் மிகுதியாக இவை விரும்புகின்றன. மழைக்காலம் இவைகளுக்குக் கொண்டாட்டம். இவற்றுள் சில ரகங்கள் ஆண்டு முழுவதும் மலரக்கூடியவை.

## மேரிகோல்ட் (Mary Gold)

இதில் குட்டை ராசியும் நெட்டை ராசியும் உண்டு. முன்னது பதினெட்டு அங்குல உயரம் வரையில் வளரும். இது பிரான்ஸ் தேசத்து இனம். பின்னது மூன்றடி உயரம் வரையில் வளரும்; இது ஆப்பிரிக்கா இனம். ஒரு மலர் உள்ளங்கை அளவு பரப்புடையது. இதில் ஓரிதழ் வட்டமும், இரட்டையிதழ் வட்டமும் உண்டு. மிகுதியான உரமும் ஈர

மும் இவைகளுக்கு அவசியம். ஓரங்களுக்கும் சட்டிகளுக்கும் பயன்படக் கூடியவை இவை.

## பெடூனியா (Petunia)

இவை 9 முதல் 18 அங்குல உயரம்வரை வளரக் கூடும். சிவப்பு, வெள்ளை, ஊதா முதலிய நிற மலர் வகைகள் இதில் உள்ளன. சட்டிகளுக்கு இவை ஏற்ற செடிகளாகும். மழைக்காலம் இவைகளுக்கு ஏற்றது. வெயிலையும் இவை வெறுப்பதில்லை. விதைகளால் இவை வளர்க்கப்படும். செடி புதரைப் போல் அடர்த்தியாக வளரவேண்டுமானால் நுனிகளைக் கிள்ளிவிடவேண்டும்.

## வெர்பெனு (Verbena)

இது 9 அங்குல உயரம் வளரக்கூடியது. கொடியாகவும் நிலத்தில் படரும் இயல்பு வாய்ந்தது. நிலத்தில் செடி பட்ட இடமெல்லாம் வேர்கொள்ளக் கூடியது. விதைத்து ஓரளவு உயரம் வளர்ந்த நாற்றுக்களை உரிய இடங்களில் நடவேண்டும். மலர்களின் நிறம் ஊதா, சிவப்பு, வெள்ளை முதலியன. பாத்திகளுக்கும் ஓரங்களுக்கும் ஏற்றவை இவை.

## ஜினியா (Zinnia)

இவை சூரியகாந்தி, செவ்வந்திச் செடிகளின் இனத்தைச் சேர்ந்தன. உஷ்ண நாடுகளில் நன்கு வளரக்கூடியவை. ஆவணிமுதல் தைமுடிய, செடிகளில் மலர்கள் இருந்துவரும். பிறகு செடிகள் பட்டுப்போகும். ஜினியாக்களை ஒற்றை இதழ், அடுக்கிதழ் வட்டம் என இரண்டு பெரும் பிரிவுகளாகப்

பிரிக்கலாம். இவற்றுள் குறுமை நெடுமை இனங்களும் உண்டு. மலர்கள் வெள்ளை, சிவப்பு, மஞ்சள், ஊதா முதலிய பலநிறங்களிற் காணப்படுகின்றன. செடி 7 அங்குல முதல் 18 அங்குலம்வரை உயரமும், சில சமயங்களில் 2½ அடி உயரமும் வளரக்கூடும். ஒரு செடியில் அதன் ஆயுட்காலத்தில் சுமார் 10 முதல் 30 மலர்களும், சில சந்தர்ப்பங்களில் அத்தொகைக்கு மேலும் தோன்றக்கூடும். செடியில் மலர் 15 அல்லது 20 நாள் வரை வாடாமலிருக்கும்.

ஜினியாவை விதைகள் மூலம் பயிர்செய்ய வேண்டும். விதைகளை எருக் கலந்த நல்ல மண்ணில் நிழலில் நாற்றுவிட்டுப் பிறகு உரிய இடத்தில் நட வேண்டும். பாத்திகளுக்கு முக்கியமாக ஓரங்களுக்கு இவை ஏற்றவை. செவ்வந்தியைப்போல் சில மலர் மொக்குகளைக் கிள்ளிவிடுவதனால் செடி பல கிளைகளை விட்டு மலர்பிடிப்பு அதிகமாகி நன்கு பொலிவு கொள்ளும். இம் மலர்ச் செடியின் வாழ்வெல்லாம் 5 மாத காலமே.

மலர்கள் செடியில் காய்ந்துவரும் சமயத்தில் அவைகளைப் பறித்து வெயிலில் உலர்த்தி ஈரம் படாதபடி டப்பாக்களில் அடைத்து வைத்தால் மறுவருஷம் ஆடியில் மலரிலுள்ள விதைகளை நாற்றுவிடலாம்.

# 17. இயற்கையின் வழிபாடு

பழங்கால இந்துக்கள் இயற்கையைப் போற்றி ஆராதித்து வந்தவர்கள். அவர்களுடைய ஆத்மிக வாழ்வு இயற்கை அழகினை நுகர்ந்து தூய்மை பெற்றது. அதன் காரணமாகவே அவர்கள் இயற்கை உபாசகர்களாக இருந்து வந்தனர். காடு, மலை, நதி இவை எல்லாம் அவர்களின் தெய்வங்கள். இத்தெய்வங்களை அவர்கள் பூஜித்து வந்ததுபோல் ஒரு சிலர் இன்றும் வழிபட்டு வருவதுண்டு.

பழங்கால இந்தியர் இயற்கை கொலு வீற்றிருக்கும் இடங்களிலேயே ஊர்களை உண்டாக்கி அவற்றில் குடி புகுந்தனர். இயற்கையின் கொலுக் கூடமாக உள்ள சில ஊர்களைப்பற்றி இங்கே எழுதுவது மிகையாகாது.

பல்லவர் ஆட்சியில் மகாபலி புரம் சிறந்த துறைமுகப் பட்டினமாக இருந்தது. சென்னைக்கு முப்பது மைல் தூரத்தில் கடற்கரையில் அது விளங்கியது. கடலோரத்தில் பல பாறைகள் இருந்தன. கி. பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பல்லவ அரசை ஆண்ட தந்தையும் மகனுமாகிய இருவர்–மகேந்திர வர்ம பல்லவன், நரசிம்ம வர்ம பல்லவன் என்பவர்–இப்பாறைகளைக் குடைந்து கற்கோவில்களாக அமைத்தனர். இன்று பல்லவர் அரசு அங்கில்லை. நகரமும் இல்லை. கடலும் சவுக்கங்காடுமே எங்கும்

காணப்படும் இடம் அது. அத்தகைய இடத்தில் பல்லவர் அன்று அமைத்த சிற்பங்கள் இன்றும் இந்தியக் கலைகளின் பெருமையை உலகுக்கு விளக்கிக்கொண்டு திகழ்கின்றன. அந்தச் சிற்பக் கருவூலத்தின் காட்சியைக் கண்டு களிக்க உலகத் தின் பல வேறு பாகங்களிலிருந்து கலா ரசிகர்கள் யாத்திரை வருவதுண்டு.

பல்லாரி வட்டத்தில் ஹோஸ்பெட் புகைவண்டி நிலையத்திலிருந்து சில மைல் தூரத்தில் ஹம்பி என்ற கிராமம் இருக்கிறது. அதனுடைய இயற்கைச் சூழலை நேரிற் கண்டு ஆனந்திக்க வேண்டுமே ஒழிய எழுத்தினால் இத்தகையதென்று தீட்ட முடியாது. சுற்றிலும் உயரிய மலை அரண். நடுவில் துங்க பத்திரா நதி மலையைப் பிளந்துகொண்டு ஊரினூடே பாய்ந்து செல்லுகின்றது. எங்கு நோக்கினும் பாறைகள்! அடியெடுத்து வைக்கும் இடந்தோறும் கோவிலும் சிற்பமும்! ஒரு காலத்தில் விஜய நகர சாம்ராஜ்யத்தின் தலைநகராக இருந்த இடம் அது. உலகப் பிரசித்தி பெற்ற விஜய நகரம் இந்த இயற்கைச் சூழலில் நிறுவப்பெற்றது. ஒவ்வொரு மன்னர் காலத்திலும் அந்த இயற்கை எழில் புத் தணிகளைப் பெற்று வளர்ச்சியுற்றது. இன்று விஜய நகர அரசு இல்லையானால் என்ன ?" அம்மன்னர்கள் அமைத்துச் சென்ற சிற்ப அழகு பகைமையும் சீற்றமும் கொண்ட ஒரு சிலரால் உருக்குலைக்கப் பட்டதேனும் என்? அந்த இடத்தில் இயற்கை அன்னை இன்றும் புன்னகையோடு காட்சியளிக்கி றாள்! 'நேபிள்ஸ் நகரைப் பார்த்துவிட்டுச் சாகவேண்டும்'

என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. நேபிள்ஸ் அவ்வளவு அழகாக இருந்ததாம். 'சாகும் முன் ஒருவர் ஒரு முறை ஹம்பியைப் பார்த்துவிடவேண்டும்' என்று நான் கூறுவேன்.

திருச்செந்தூர், திருவேங்கடம் என்னும் திருப்பதி முதலிய பிறவும் இயற்கையை ஆராதிக்கும் இடங்களே ஆகும்.

பண்டைக்கால இந்தியர், எங்கெங்கே இயற்கை சிறந்த காட்சி அளித்ததோ அங்கங்கே அதன் அதன் இயல்பை ஒட்டி ஊர்களை நிர்மாணித்து, நிலப்பரப்பின் அழகைத் தூய்மைப்படுத்தி இயற்கையை யாவரும் நுகரும்படி செய்தார்கள் என்பதற்கு மேற்கூறியவை சில உதாரணங்களே ஆகும்.

இன்று நாமும் நம் முன்னோரின் வழிகளைப் பின்பற்றவேண்டும். கிராமங்களிலும் நகரங்களிலும் காணப்படும் ஆறு, ஏரி, குளம், மலை, காடு முதலிய இடங்களை மரங்களாலும், உபவனத்தின் பிற கூறுகளாலும் அழகு படுத்தி இக்கலையைப் பெருக்க வேண்டும். சில வருஷங்களாகப் பலர் இப்பணியை மேற்கொண்டிருப்பது நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. ஒவ்வொரு கிராமத்தாரும் தத்தம் சூழ்வுக்கு ஏற்ப இயற்கையை ஒட்டிப் பொதுவனங்களை உண்டாக்கிக் கொள்ள வேண்டும். வானொலி முதலிய சாதனங்களை அங்கே வைப்பதைப் பற்றி நான் வற்புறுத்திக் கூறவில்லை. காலத்துக்கேற்ப அதனை எவரும் வைத்துக் கொள்ளட்டும். அமைதி, சாந்தம், தெய்வ சிந்தனை

ஏகாந்தம் இவற்றுக்கும் அவ்வனங்களில் வாய்ப்புக் கிடைக்கும்படி செய்ய ஒவ்வொரு கிராமத்தாரும் நகரத்தாரும் முயலவேண்டும் என்பதே என் அவா. ஏனெனில் நம் கலைத்தத்துவத்தை நாம் காப்பாற்ற வேண்டும்.

நம் நாட்டுக் கலைத்தத்துவத்தைப் பற்றி இந்தியக் கலைகளின் மறுமலர்ச்சிக்காக அருந்தொண்டாற்றிவரும் ஸ்ரீமதி ருக்மிணி தேவியாரவர்கள் கொண்டுள்ள சிறந்த கருத்துக்களில் இரண்டொன்றைக் கூறி இப்புத்தகத்தைப் பூர்த்தி செய்கின்றேன்:

'மனித சமூகம் என்று ஆத்மிக வாழ்வைப் பெறுகின்றதோ அன்றே அது அருங்கலைகளை உண்டாக்கக் கூடும்; மனித சமூகம் என்று அருங்கலைகளைத் தோற்றுவிக்கின்றதோ அன்றே அது ஆத்மிக வாழ்வை அடையக் கூடும். கலையும் ஆத்மிக வாழ்வும் இங்ஙனம் ஒன்றோடொன்று தொடர்புடையனவாகும். இதனை அறியாத பலர், "கலை ஒரு பொழுது போக்கு; அது ஒரு விநோதம்" என்று கருதுகிறார்கள். உண்மையில் அது பொழுது போக்கும் விநோதமும் அன்று. இந்த எண்ணம் ஒழிந்து கலையும் வாழ்வும் ஒன்று என்ற உணர்ச்சி வந்தாலொழிய மகிழ்ச்சியை, கலைகளினின்றும் பழுத்து வரும் மகிழ்ச்சியை, நாம் நன்கு உணர்ந்து கொள்ள இயலாது!'

* * *

'பயிற்சி பெற்ற மனத்தால் நுகரப்படும் அழகை அனுபவிக்க நாம் பழகிக் கொள்ளவேண்டும். அறிந்து கொள்ள வழிதேட வேண்டும். எங்ஙனம் அறிவது? பண்பாடிருந்தால் ஒழிய ஒருவர் அழகினை அறிய முடியாது. அழகின் சூழ்வில்லாதவர் பண்பாட்டைப் பெற முடியாது. இப்படி இவை ஒன்றோடு ஒன்று பிணைந்துள்ளது.'

* * *

'உண்மைக் கலைகளுக்கு ஜாதி, மத, தேச, நிற வேறுபாடுகள் இல்லை. அவை ஆத்மிக மானவை; அடக்கமுள்ளவை; தூய்மை யானவை. இத்தகைய இந்தியக் கலைகளை ஆத்மிக வாழ்க்கைக்கு அர்ப்பணம் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் நாம் இந்தியாவுக்கு உண்மைத் தொண்டாற்றியவர் ஆவோம்.'

—வாழ்க்கையும் கலைகளும்.

சிங்காரத் தோட்டம் என்ற விஷயத்தைக் குறித்துச் சில விவரங்கள் பதினேழு அத்தியாயங்களிற் கூறப்பட்டன. அத்தியாயங்கள் பதினேழாக எண்ணிக்கையில் மிகுதியாகத் தோன்றினும், விஷயம் என்னவோ சுருக்கமாகவே உள்ளது. உபவனக்கலையைப் பற்றிய ஆரம்ப அறிவைப் பெறுவோர்க்குச் சாதகமாக இருக்கும் பொருட்டு எழுதிய சிறு புத்தகத்தில் நுணுக்கமான பல விஷயங்கள் இடம் பெறுவதற்கில்லை. இக்கலையைப் பற்றி அதிகம் தெரிந்துகொள்ள விருப்பமுடையவர்கள் ஆங்கிலத்தில் உள்ள அரிய பல நூல்களைப் படிக்க வேண்டும். படித்தவற்றை நம் நாட்டின் சூழ்வுகளுக்குத் தக்கபடி அர்த்தம் செய்து கொண்டு நம்முடைய தனிப்பட்ட கலைப்பண்பு கெடாதவாறு சிங்காரவனங்களை அமைக்க வேண்டும். வாழ்க்கை உயருவதற்கு இக்கலை ஒரு வழி காட்டி இந்த நம் நாட்டில் மறு மலர்ச்சி பெற்று ஓங்கவேண்டும் என்று இறைவனை இறைஞ்சுவோமாக!

101004